விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 05 திங்கட்கிழமை (18.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

# சிறையில் அடைத்தாலும் ஆட்சியை கவிழ்ப்போம்!



## நாமல் எம்.பி சூளுரை

(கொழும்பு)

நல்லாட்சி அரசு எனக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் நாட்டின் அபிவிருத்தியை மறந்து அரசியல் பழிவாங்கல்களை மட்டும் மேற்கொண்டு வருவது கண்டிக்கத்தக்கது என தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வருமான நாமல் ராஜபக்ஷ, தம்மை சிறையில் அடைத்தாலும் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து விரட்டும்வரை ஓயமாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்.)

## பொருத்து வீடுகள் பொருத்தமில்லை



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 65 ஆயிரம் பொருத்து வீடுகள் அமை

24ஆம் பக்கம் பார்க்க....

## அமெ.வில் கோத்தா; சிக்கலில் விசாரணை

(கொழும்பு)

பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிவிக்காமல் முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திடீரென அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்.

முன்னாள் படைத்துறைச் செய

24ஆம் பக்கம் பார்க்க....

## மன்னாரில் பொலிஸ் அராஜகம் தாய், மகள், மகன் மீது தாக்குதல்

(வங்காலை)

மன்னார் வங்காலை பிரதேசத்திலுள்ள வீடொன்றினுள் புகுந்த பொலிஸார் அங்கிருந்த தாய் மற்றும் மகள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டதுடன், அவர்களை பொலிஸ் நிலையத்திலும் வைத்துத் தாக்கியுள்ளனர்.

அத்துடன் அங்கு தனது தாயை பார்க்க வந்த மகன் மீதும் பொலிஸார் வலிந்த தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் உறவினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் வங்காலை அக்கினேஸ்புரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சில காலங்களாக சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

எனினும் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜப்பானில் மைத்திரி - ஒபாமாவை சந்திக்க வைப்பதற்கு முயற்சி

(கொழும்பு)

ஜப்பானில் இடம்பெறவுள்ள ஜி-7 மாநாட்டின் ஒரு பக்க நிகழ்வாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் இடையில் சந்திப்பொன்றை ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜப்பானின் ஷிமா நகரில் அடுத்த மாதம் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பங்கேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா, பிரான்ஸ்,

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் கட்சிகளே சமஷ்டியை கோருகின்றனர்!

### தமிழ் மக்கள் அதைக் கோரவில்லை- ஜே.வி.பி

(கொழும்பு)

சமஷ்டி என்ற எண்ணக்கருவும கோரிக்கையும் தமிழ் மக்களின் கோரிக்கையென நாம் நம்பவில்லை. இது தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கையென்றே எண்ணுவதாக மக்கள் விடுதலை முன்னணி

24ஆம் பக்கம் பார்க்க....



## தீக்காயமடைந்த குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சோனகதெரு பகுதியில் வசிக்கும் 2 பிள்ளைகளின் தாயொருவர் தவறுதலாக உடலில் நெருப்பு தீப்பற்றி எரிந்து 4 நாட்களாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வெள்ளை வானில் கைதானவரை உறவினர்கள் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்பட்டு வெள்ளைவானில் அழைத்துச் செல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராசதுரை ஜெயந்தன் என்பவரை கொழும்பு 4 ஆம் மாடியில் உறவினர்கள் நேற்று பார்வையிட்டுள்ளனர்.

அதேவேளை இந்த விடயம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட மற்றைய நபரான மட்டக்களப்பை சேர்ந்த சுப்பிரமணியம் தேவதாசன் என்பவரையும் அவரது உறவினர்கள் நேற்று 4 ஆம் மாடியில் பார்வையிட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற

24ஆம் பக்கம் பார்க்க....

## மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 தமிழர்கள் வெலிக்கட சிறையில்

(கொழும்பு)

மாலைதீவு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழர்கள் தற்போது கொழும்பு வெலிக்கடச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களை மேற்கோள்காட்டி தகவல் கிடைத்துள்ளது.

கே.சந்துறு, எம்.யோகராசா, என்.ராஜித் ஆகிய மூன்று பேருமே கட நந்த 10 ஆம் திகதி மாலைதீவு அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது கொழும்பு வெலிக்கடச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் திசைமாறி மாலைதீவு பகுதிக்கு சென்றதால் மாலைதீவு கடற்படை இவர்களை கடந்த 2006 ஆம் ஆண்டு கைதுசெய்திருந்தது.

மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இருந்து வட பகுதி கடல் ஊடாக மாலைதீவுக்குச் சென்றபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அப்போது நிலவிய

24ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களில் 99 சதவீதமானோர் என் பக்கம்

### இப்படிக் கூறுகிறார் மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களில் 99 சத வீதமானோர் இன்னும் தனது பக்கமே உள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ கண்டியில்

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வீட்டினுள் புகுந்து நகைகள் கொள்ளை

(கொழும்பு)

திவுலபிட்டிய - ஹபுவலான பகுதியில் வீடொன்றில் நேற்று முன்தினமிரவு புகுந்த இரண்டு திருடர்கள் ரூபாய் 30 லட்சம்பெறுமதி யான தங்க நகைகளை கொள்ளை யிட்டு சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளரான பெண் மற்றும் அவரது பிரித்தானியா நாட்டு கணவரும் இதன் போது வீட்டில் இருந்துள்ள போதும் அவர்களின் கைகள் கட்டப்பட்டு இந்த கொளளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக திவு லபிட்டிய பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப் படாத நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (செ-12)

## முச்சக்கரவண்டி விபத்து; இரு குழந்தைகள் பலி

(கொழும்பு)

ஹோரனை - அங்குறுவாந் தோட்ட பிரதேசத்தில் முச்சக்கர வண்டி மற்றும் பாரவூர்தியும் மோதுண்டதில் இரண்டு குழந் தைகள் பரிதாபமாக உயிரிழந் துள்ளன.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இவ்விபத்தில் முச்சக்கர வண்டி யில் பயணித்த ஒன்றரை வயது ஆண் குழந்தையும் 4 வயது பெண் குழந்தையும் உயிரிழந்துடன் விபத துக்குள்ளான முச்சக்கர வண்டியில் 7 பேர் பயணம் செய்துள்ளனர்.

அதில் 5 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் ஆபத்தான நிலை யில் தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-12)

## மனநிலை பாதித்த நிலையில் வெளிநாட்டு பிரஜை மீட்பு

(கொழும்பு)

சுற்றுலா பயணியாக இலங் கைக்கு வந்த உக்ரைன் நாட்டு பெண் பயணி ஒருவர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் கினிகத் தேனை பொலிஸாரால் மீட்கப்பட்டு நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபினனர் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்கென இடமாற் றம் செய்யப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை பொலிஸ் பிரி விற்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் பகல் ரோந்து நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த கினிகத்தேன்னை பொலிஸார் கினிகத்தேனை பகுதி யில் சுற்றிதிரிந்த குறித்த வெளி நாட்டு பிரஜையின் நடவடிக்கை களில் சந்தேகம் கொணடு குறித்த வெளி நாட்டு பெண்ணை பரிசோ தித்துள்ளனர்.

இதன்போது அவரின் பயண பையில் இருந்த கடவுச்சீட்டை பரிசோதனை செய்த போது இவர் உக்ரைன் நாட்டை சேர்ந்த தட்டி யான என்ற பெண்மணி என அடை யாளம்காணப்பட்டதுடன் இவர் இலங் கையில் இருந்து தனது நாட்டுக்கு செல்வதற்கான விசா காலம் இருப் பதையும் அறிந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பெண்ணை நேற்று முன்தினம் பகல் நாவலப்பிட்டி வைத்திய சாலைக்கு சிகிச்சைக்கென அனு மதிக்கப்பட்ட போது மேலதிக சிகிச் சையை மேற்கொள்ளவென குறித்த வெளிநாட்டு பிரஜை அவசரமாக கண்டி போதனா வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## முச்சக்கர வண்டிகளுக்கான ஆசனப் பட்டிகள் அறிமுகம்!

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகளுக்கான பாதுகாப்பு பட்டிகளை அறிமுகப் படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.


விபத்துக்களை குறைத்துக் கொள்ளும் நோக்கில் இந்த நட வடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோத்தாகொட குறிப்பிட்டுள்ளார்.

செயற்பாட்டு ரீதியில் இந்த விட யத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அறிக்கை தயாரித்து வருவதாகவும் அவர் கூறியுள் ளார்.

விபத்துக்களின் போது முச்சக்கர வண்டியில் பயணிப்போர் வெளி யில் தூக்கி எறியப்படுவதால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படுவதாகவும் டாக்டர் சிசிர கோத்தாகொட தெரி வித்துள்ளார்.

இதனை தவிர்க்கும் வகையில் பாதுகாப்பு பட்டியோ அல்லது பொருத்த மானபாதுகாப்புமுறையொன்றையோ அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## நிஷாந்த எம்.பி வைத்தியசாலையில்



(புத்தளம்)

புத்தளம் மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து ஒன்றில் சிக்கிய அவர் சிறு காயங்களுக்கு உள்ளான நிலை யில் குருநாகல் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-12)

## கேரள சட்டசபைத் தேர்தல்

## இலங். தேர்தல் ஆணைக்குழுவுக்கு கண்காணிப்பில் ஈடுபட அழைப்பு

(கொழும்பு)

கேரள சட்டசபை தேர்தல் கண் காணிப்பு நடவடிக்கைக்கு இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த கண் காணிப்பாளர்களை அனுப்பிவைக்கு மாறு கடிதமொன்றினூடாக கேரள அரசு அழைப்பு விடுத்துள்ளதாக தேர் தல்கள் ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளரும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளருமான எம்.எம்.மொஹ மட் குறிப்பிட்டார். எனினும் தமிழகத் தேர்தல் கண்காணிப்பிற்கு இதுவரை அழைப்பு கிடைக்கவில்லை என வும் அவர் தெரிவித்துள்ளார்.

கேரள அரசிடமிருந்து கிடைத் துள்ள அழைப்பிற்கு ஏற்ப தேர் தல்கள் கண்காணிப்பாளர்களை அனுப்புவது தொடர்பில் அடுத்த வாரமளவில் தீர்மானிக்கப்பட வுள்ளதாகவும் மேலதிக தேர் தல்கள்ஆணையாளர்எம்.எம்.மொஹ மட் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## எரிபொருளுக்கான கேள்வி அதிகரிப்பு

(கொழும்பு)

புத்தாண்டு நிகழ்வுகள் இடம்பெற்ற கடந்த சில தினங்களில் வரலாற றில் முதல் முறையாக அதிகமான எரிபொருள் கேள்வி நிலவியதாக பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக அனைதது எரிபொருள் நிரப்பு நிலையங்களி லும் வாடிக்கையாளர்கள் போக்கு வரத்து தேவைக்காக எரிபொருட் களை அதிகம் நுகர்ந்திருந்தமை யும் அவதானிக்க கூடியதாக இருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கச்சதீவு தாரைவார்ப்பில் பூச்சுற்றும் திராவிடக் கட்சிகள்

### பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ் கண்டனம்

(சென்னை)

கச்சதீவு தாரைவார்ப்பில் தமி ழக மக்களின் காதுகளில் திரா விடக் கட்சிகள் பூச்சுற்றுவதாக, பாட் டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள் ளார்.

அவர் இது குறித்து வெளியிட் டுள்ள அறிக்கையில்,

தமிழ் நாட்டிற்கு சொந்தமான கச்சத்தீவை தாரை வார்த்தது யார்? என்பது தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவும், தி.மு.க. பொரு ளாளர் மு.க.ஸ்டா லினும் கடந்த இரு நாட்களாக பட்டிமன் றம் நடத்திக் கொண் டிருக்கின்றனர்.

குற்றவாளி களே நீதிபதிகளாகி தீர்ப் பளித்தால் எப்படி யிருக்குமோ, அதே போல் தான் கச்சதீவு தொடர்பாக இரு கட்சிகளும் முன் வைக்கும் வாதங்கள் மிகவும் அபத்த மாக உள்ளன.

விருதுநகர் மாவட்டம் அருப்புக் கோட்டையில் நடைபெற்ற பிரச் சாரக் கூட்டத்தில் பேசிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, தமிழகத்திற்கு சொந்தமான கச்ச தீவை கலைஞர் தான் இலங்கை அரசுக்கு தாரைவார்த்து விட்டதாக குற்றஞ்சாட்டினார். மதுரையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் இதற்கு பதிலளித்த தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், திமுக ஆட்சியில் கச்ச தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட வில்லை என்றும், அதன்பின் வந்த நெருக்கடி காலத்தின் போதுதான் கச் சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட் டதாகவும் கூறியிருக்கிறார்.

கச்சதீவு பற்றி இருவரும் கூறியுள்ள கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை. இவற்றை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. கச்சதீவு சிக்கலில் இரு கட்சி களுமே துரோகம் செய்தவை என்பது தான் மறுக்க முடியாத உண்மை.

கலைஞர் தலைமையிலான தி.மு.க ஆட்சியில் தான் கச்சதீவை இலங்கைகு தாரை வார்க்கும் முடிவை இந்திரா தலைமையிலான மத்திய அரசு எடுத்தது. கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைக் கும் ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி இலங்கையிலும், 28-ம் திகதி டெல்லியிலும் கையெழுத் திடப்பட்டது.

அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் இதைத் தடுக்க எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. ஒப்பந்தம் கையெழுத் திடப்பட்ட பிறகு அதை தி.மு.க. எதிர்த்ததாக காட்டிக் கொள்ள வேண் டும் என்பதற்காக பொதுக்குழு வைக் கூட்டி கச்சதீவு தாரைவார்க்கப்பட் டதைக் கண்டித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக ஒதுங்கிக் கொண்டார்.

அந்த நேரத்தில் மக்களவை யில் தி.மு.க.வுக்கு 28 உறுப்பினர் களும், கூட்டணிக் கட்சிகளுக்கு 10 இடங்களும் இருந்தன. கச்சதீவை இலங்கைக்கு வழங்க வேண்டு மானால் அதற்கு பாராளுமன்ற ஒப் புதல் பெறப்பட வேண்டும். ஆனால, நிர்வாக ஆணை அடிப்படையில் கச்சத்தீவு வழங்கப்பட்டிருந்தது.

இதை எதிர்த்து பாராளுமன்றத் தில் தி.மு.க. போராடியிருந்தாலோ, உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தாலோ கச்சதீவு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருக் கும். ஆனால், கலைஞர் அதை செய்யவில்லை.

மு.க.ஸ்டாலின் அவரது உரை யில் இன்னொரு உண்மையை ஒப புக்கொண்டிருக்கிறார். சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களை எப்போதெல்லாம் சந்திக்கிறோமோ, அப்போதெல்லாம் தேர்தல் அறிக்கை யில் அதனை மீட்டெடுக்க வேண் டும் என்று மத்திய அரசை வலி யுறுத்தி தி.மு.க. குரல் கொடுத்து வருகிறது என்பது தான் மு.க.ஸ்டா லின் உதிர்த்த முத்து. கச்சதீவு தாரை வார்க்கப்பட்ட பிறகு கிட்டத தட்ட 14 ஆண்டுகள் தமிழகத்தை தி.மு.க ஆட்சி செய்திருக்கிறது.

18 ஆண்டுகளுக்கு மேலாக மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்திருக்கிறது. அப்போதெல் லாம் மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்திருந்தால் கச்சதீவை மீட்டி ருக்க முடியும். ஆனால், தி.மு.க வுக்கு என்னென்ன துறைகள் வேண்டும் என்பதற்காக மத்திய அரசுக்கு அளித்த நெருக்கடியில் பததில் ஒரு பங்கைக் கூட கச்சதீவை மீட்பதற்காக கலைஞர் அளிக்க வில்லை. மொத்தத்தில் கச்சதீவு மீட்கப்படும் என தேர்தல் அறிக்கை யில் கூறியதைத் தவிர கச்சதீவை மீட்பதற்காக தி.மு.க. துரும்பைக் கூட அசைக்கவில்லை என்பது தான் உண்மை என ராமதாஸ் தெரிவித் தார். (செ-12)

## அரச கூட்டங்களில் போசாக்கான உணவு

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் போசாக்கான உணவு அல்லது பழச்சாறு வழங் கும் தேசிய கொள்கையொன்று அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் அனு மதிக்கப்படும் 68 வீதமானவர்கள் தொற்றா நோயினால் பாதிக்கப் பட்டவர்களாவர்.

இதனை தடுக்கும் நோக்கி லேயே இக்கொள்கையை பிரகடனப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று அவர் மேலும் தெரி வித்தார்.

அண்மையில் அரசாங்க வைத் தியர்கள் சங்கத்துடன் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அமைச்சர் இதனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


## காணி விற்பனைக்கு

ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவனில் பாடசாலை மற்றும் கோவில் அருகில் 17 பரப்பு 10 குளி அளவுள்ள வீடு, கிணற்றுடன் கூடிய விவசாயத் திற்கு ஏற்ற காணி, பகுதி யாகவோ முழுமையாகவோ விற்பனை செய்யப்படும்.

தொடர்புகளுக்கு : 0774014328 (4230)



## கண்ணீர் அஞ்சலி

(4231)

திருமதி சச்சிதானந்தமுதலி பகவதியம்மா



எமது தோழி ஐ.சறோஜினிதேவி அவர்களின் அன்புத் தாயார் திருமதி சச்சிதானந்தமுதலி பகவதியம்மா 16.04.2016 அன்று காலமடைந்தார். அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவ்ரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். ஓம் சாந்தி

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை நல்லூர்.ப.நோ.கூ.சங்கம்

# மீள்குடியேற்றத்துக்கு இடையூறாகவுள்ள இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும்



## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**எமது மக்கள் நீண்டகாலமாக கஷ்டப்பட்டுள்ளார்கள். போர் முடிந்த பின்னரும் மக்கள் மீள்குடியேறவில்லை. இராணுவப பிரசன்னம் குறைக்கப்படவேணடும். இராணுவம் தமது பொறுப்பில் தமது பாதுகாப்புக்கு பயன்படுத்தாத காணிகளை கூட தம்வசம் வைத்துள்ளார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

தாமும் பயன்படுத்தாமல் மக்களையும் பயன்படுத்த விடாமல் வைத்திருக்கிறார்கள். இராணுவத்தினர் பாதுகாப்பு தவிர்ந்த ஏனைய கருமங்களுக்காக இராணுவத்தினர் பொதுமக்களின் காணிகளை பயன்படுத்தும் நடவடிக்கை இனியும் தொடரக்கூடாது.

தற்போதைய அரசால் எந்தவொரு நடவடிக்கையும் எமது மக்களுக்கு செய்யப்படவில்லை என்று கூறமாட்டேன். பல விடயம் நடைபெற்றது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்திருந்தால் இது நடந்திருக்காது. இதே போன்ற நிலை 100 மடங்காக அதிகரித்து நாட்டு நிலை இன்னும் மோசமாக இருந்திருக்கும். இன்று அவர்கள் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அதை மக்கள் உணர வேண்டியது அவசியம்.

மக்களின் கஷ்டம் தொடர முடியாது.இம்முறை யாழ்ப்பாணத்துக்கு வந்த போது முன்னரை விட பல விடயங்கள் மேலதிகமாக அறிந்திருக்கிறேன்.அவை தொடர்பான நடவடிக்கைகள் இனி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடம் ஜெனிவா தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுவது நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கேட்டபோது.

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். உண்மை அறியப்பட வேண்டும். அதன் அடிப்படையில் நீதி பெறப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் கிடைக்க வேண்டும்.

நடைபெற்ற சம்ப வங்கள் இனி நடைபெறக் கூடாது. அதற்கு தக்க நடவடிக்கைகள் உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும்.

இவை எல்லாம் ஏற்படுத்துவதற்கு முக் கியமான வழி முடிவு ஒரு நிர ந்தரமான நியாயமான அரசி யல் தீர்வு ஜூன் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 32ஆவது அமர்வு நடைபெறவுள்ளது.

அதில் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வாய் மூல அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

அதில் இலங்கை அரசு ஐப்பசி மாதம் 2015 ஆம் ஆண்டு நிறை வேற்றப் பட்ட தீர்மானத்தை எந்த அளவுக்கு நிறைவேற்றி யுள்ளது என்பது தொடர்பான அறிக்கை வாய்மூல அறிக்கையில் அவர் கூற வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஜனாதிபதியை இரகசியமாக சந்தித்துப் பேசினார் மகிந்த

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் இரகசியமாகச் சந்தித்துப் பேசியிருப்பதாக, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் செயலகத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர், இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் போது, சில அரசியல் விவகாரங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக, மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவுடனான உறவுகள், மற்றும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள சில சட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட சில் உடன்பாடுகள் குறித்தும், இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ தெரிவித்துள்ளது. (இ-5)

## எம்மை வழிநடத்த எந்தத் தகுதியும் தினேஷ் குணவர்த்தனவுக்கு இல்லை

### சம்பந்தன் எம்.பி. காட்டம்

எம்மைவழிநடத்ததினேஸ குணவர்த்தனவுக்கு எந்தத் தகுதியும் இல்லை, உரிமையும் இல்லை. நாம் எமது இலக்கை அடைவதை தடை செய்வதற்கு இவரைப்போன்று பலர் முயற்சிக்கிறார்கள் என எதிர்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது எதிர்க்கட்சி தலைவர் தமிழ் மக்களுக்காக மட்டும் குரல் கொடுக்கிறார் நாட்டு மக்களுக்காக பேசுவதில்லை என மகிந்த அணி எம்.பி தினேஷ் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார் என்பது தொடர்பாக கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தினேஷ் குணவர்த்தன பொது எதிர்க்கட்சி உறுப்பினர் என தன்னை வர்ணித்து கொள்கிறார். அவர் கூறும் ஒவ்வொரு கருத்துக்கும் நான் பதில் கூறவேண்டிய தேவை இல்லை.வடகிழக்கு இந்த நாட்டை சேர்ந்த ஒரு பிரதேசம். வடகிழக்கு தொடர்பாக நான் பாராளுமன்றில் பேசினால் அது நாட்டின்உடையஒருபகுதியை பற்றிதான் பேசுகிறேன் என்று அர்த்தம். எனவே நாட்டைப் பற்றி தான் நான் பேசுகிறேன் தினேஷ் குணவர்த்தன வடகிழக்கை பற்றி பேசுகிறாரா? தனது சொந்த பகுதியை பற்றி பேசுகிறார்.

நாங்கள் எமது நாட்டையும் சகல மக்களை பொறுத்த வரையில் நாங்கள் மிகவும் அக்கறையாக இருக்கிறோம் பேச வேண்டிய நேரங்களில் பேசுகின்றோம் இனிமேலும் பேசுவோம் என தெரிவித்தார்.

அதே நேரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பு இணக்கப்பாட்டு அரசியலுடன் தான் தற்போது உள்ளது சாதாரணமாக பெறக் கூடிய விடயத்தை கூட இது வரை செயற்படுத்தவில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கப்பார்க்கிறார்கள். நாம் எமது இலக்கை நோக்கிச்செல்கிறோம். அதை தடை செய்வதற்கு தென்பகுதியில் பலர் இருப்பதை போன்று எமது பகுதியிலும் பலர் இருக்கிறார்கள்.அதைப்பற்றி நாம் கண்டுகொள்ளப்போவதில்லை என தெரிவித்தார். (இ-9)

## ஈக்குவடோரில் 7.8 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம்; 77 பேர் பலி!

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடோரில் நேற்று முன்தினம் நள்ளிரவு ரிக்டரில் 7.8 என்ற அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதில் 77பேர் வரை பலியாகியுள்ளதாகவும் பலர் படுகாயம் அடைந் துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரிக்டர் அளவில் 7.8 என பதிவான இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 77 பேர் வரை பலியாகியுள்ளதாகவும், பலர் படுகாயத்துடன் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜப்பான் நேற்று முன்தினம் அடுத்தடுத்து ஏற்பட்ட தொடர் நிலநடுக்கத்தில் 77 பேர் பலியானதை தொடர்ந்து ஈக்குவடோரிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஈக்குவடோரில்உயிரிழப்புகள் மட்டுமின்றி வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள் என பலவும் பலத்த சேதத்திற்கு உள்ளாகின.

கடற்கரை ஓரமாக ஏற்பட்ட இந்த நில நடுககத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின்னர் அது திரும்ப பெறப் பட்டது.

இது குறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஈக்குவடோர் தலைநகரான Quito என்ற நகரிலிருந்து 107 கி.மீ தொலைவில் 10 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.



நள்ளிரவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து நிகழ்ந்த சேதாரங்களை சீர்படுத்தும் பணியில் அந் நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ-5)

## மோ.சைக்கிளில் பொலிஸார் ரோந்தில் ஈடுபட வேண்டும்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதிகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் ரோந்து பணியில் ஈடுபடவேண்டும் என்று பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு மோட்டார் சைக்கிள் ரோந்துப் பணிகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.


இதே போன்று வடமராட்சிப் பகுதிகளிலும் இடம் பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு பொலிஸார் மோட்டார் சைக்கிள் ரோந்தில் ஈடுபடவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

குற்றச் செயல் ஒன்று இடம்பெறுவது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்தும் நேர காலத்திற்கு அவர்கள் செல்வதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே மோட்டார் சைக்கிள் ரோந்துப் பணியில் பொலிஸார் ஈடுபடுவார்களாயின் தொலைபேசி அழைப்புக் கிடைத்து 5 நிமிடத்தில் அவ்விடத்திற்கு பொலிஸார் செல்லக்கூடிய நிலை இருக்கும் எனச் சுட்டிக்காட்டப் பட்டள்ளது. (இ-60)

# வோரா, விஜய் அரைச் சதம்

# கிங்ஸ் லெவின் பஞ்சாப்புக்கு முதல் வெற்றி தோனியின் புனேக்கு 2ஆவது தோல்வி



அதிரடி வீரர் கிளென் மக்ஸ்வெல் இறுதிக்கட்ட ஓவர்களில் காட்டிய அதிரடியான துடுப்பாட்டம் கைகொடுக்க தோனியின் புனேயை, கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 8 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது.

இந்தியாவில் 9ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதன் 10ஆவது லீக் போட்டி பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் நேற்று நடந்தது.

இப்போட்டியில் பஞ்சாப்-புனே அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற புனே அணியின் தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**டு பிளசிஸ் அரை சதம்**

இதன்படி களமிறங்கிய புனே அணிக்கு ரஹானே (9) ஏமாற்றினார். பீற்றர்சன் (15), திசார பெரேரா (8) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய டு பிளசிஸ் (67) அரைச் சதமடித்தார். ஸ்ரீவ் ஸ்மித் (38) ஓரளவு கைகொடுத்தார். அணித் தலைவர் தோனி (1), இர்பான் பதான் (2) ஏமாற்றினர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் புனே 7 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்தது.

அஷ்வின் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார். பஞ்சாப் அணி சார்பில் பந்துவீச்சில் மோகித் சர்மா 3, சந்தீப் சர்மா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**மக்ஸ்வெல் அதிரடி**

153 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பாடக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு முரளி விஜய், வோரா ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது.

இவ்ஜோடி ஆரம்ப விக்கெட்டில் 12.2 ஓவர்களில் 97 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது.

இந்நிலையில் வோரா 51 ஓட்டங் களில் அன்கிட் சர்மாவின் பந்து வீச்சில் எல்பிடபிள்யூ ஆனார்.

வோராவின் ஆட்டமிழப்பின் பின் முருகன் அஷ்வின் சுழல் ஜாலம் காட்டினார்.

இவரது பந்துவீச்சில் முரளி விஜய் (53), ஷோன் மார்ஷ் (4), அணித் தலைவர் மில்லர் (7) ஆட்டமிழக்க சிக்கல் ஏற்பட்டது.

எனினும் ரவிச்சந்திரன் அஷ்வின் வீசிய 18ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்த மக்ஸ்வெல் பஞ்சாப் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.


இறுதியில் பஞ்சாப் அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

மக்ஸ்வெல் (32), சகா (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

புனேயின் பந்துவீச்சில் முருகன் அஷ்வின் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் வோரா தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் நடப்பு ஐபிஎல் தொடரின் பஞ்சாப் அணி முதல வெற்றியை பதிவுசெய்ததுடன், புனே அணி இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.



## ஜடேஜாவின் திருமண விழாவில் துப்பாக்கிச் சூடு – பொலிஸ் விசாரணை

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவின் திருமணம் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

ரவீந்திர ஜடேஜாவுக்கும், ராஜ்கோட்டை சேர்ந்த பொறியியலாளர் ரீவா சோலங்கிக்கும் கடந்த பெப்ரவரி மாதம் திருமண நிச்சயார்த்தம் நடைபெற்றது.

இந்நிலையில் இவர்களின் திருமணம் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தற்போது நடைபெற்று வரும் ஐபிஎல் போட்டியில் புதிதாக இணைந்த குஜராத் லயன்ஸ் அணிக்காக ஜடேஜா விளையாடி வருகிறார்.

திருமண நிகழ்ச்சியில் விருந்தினர்களுக்கு முன்பு ஜடேஜா தனது வாள் சுற்றும் திறமையை வெளிப்படுத்தினார்.

ஜடேஜாவின் திருமணக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, அவரது உறவினர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

திருமணக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, அவரது உறவினர்கள் துப்பாக்கியால் சுட்டு கொண்டாடியதாகப் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சம்பவம் குறித்து ராஜ்கோட் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உரிமம் பெற்ற துப்பாக்கியாக இருந்தாலும் தற்காப்புக்காக மட்டுமே சுட வேண்டும் என்பது சட்ட நடைமுறை.

இந்த நடைமுறைகளை மீறும் போது 3 ஆண்டுகள்வரை தண்டனை அளிக்க சட்டத்தில் வழிவகை உள்ளதாகக் கூறப்படுகிறது.



## 48 பந்துகளில் சதமடித்தார் டி ஹொக் பெங்களூரை பந்தாடியது டில்லி

குயின்ரன் டி ஹொக் - கருண் நாயர் இணை 3ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 134 ஓட்டங்கள் உதவியுடன் விராட் ஹோலியின் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை, சகீர் கானின் டில்லி டேர்டெவில்ஸ் அணி 5 பந்துகள் மீதமிருக்கையில் 7விக்கெட்டுக்களால் வீழ்த்தியது.

இந்தியாவில் 9ஆவது ஐ.பி.எல் தொடர் நடக்கிறது.

இதன் 11ஆவது லீக் போட்டியில் பெங்களூர் - டில்லி அணிகள் நேற்று பெங்களூருவில் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் சகீர் கான் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பெங்களூர் அணியின் கிறிஸ் கெய்ல் டக் அவுட்டானார். அதன் பின் இணைந்த அணித் தலைவர் ஹோலி, டி வில்லியர்ஸ் ஜோடி எதிரணி பந்துவீச்சை பதம்பார்த்தது.

இருவரும் அரை சதம் கடந்தனர். டி வில்லியர்ஸ் 33 பந்தில் 55 ஓட்டங்கள் எடுத்தார். ஷமி வேகத்தில் ஹோலி 48 பந்துகளில் 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தன் பங்குக்கு வோட்சன் (33) அதிரடி காட்டினார். சர்பராஸ் கான் (1) நிலைக்கவில்லை.

பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்கள் எடுத்தது.

களத்தில் ஜாதவ் (9), டேவிட் வைஸ் (5) இருந்தனர்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் மொஹமட் ஷமி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

192 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு களமிறங்கிய டில்லி அணிக்கு ஐயர், சாம்சன் ஏமாற்றினாலும் 3ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த டி ஹொக் - கருண் நாயர் 86 பந்துகளில் 134 ஓட்டங்களை பகிர்ந்து வெற்றியை இலகுவாக்கியது.

இறுதியில் டில்லி 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 192 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் டி ஹொக் 108 (51 பந்., 15 பவுண்., 3 சிக்ஸ்) கருண் நாயர் (54), டுமினி (07) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில் வோட்சன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக டில்லி அணியின் வெற்றிக்கு வித்திட்ட டி ஹொக் தெரிவானார்.



# புதிய அரசமைப்புக்கான மக்களின் கருத்து! 30 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

**புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழு நாடளாவிய ரீதியில் பெறப்பட்ட மக்களின் கருத்துகள் மற்றும் தமது யோசனைகளை உள்ளடக்கிய அறிக்கையை எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளது.**

புதிய அரசமைப்புக்கான மகக்ள் கருத்தறியும் குழு வின் தலைவர் லால் விஜேநாயக்க இதனைத் தெரிவித்தார்.

"நாங்கள் கடந்த மூன்று மாதகாலமாக நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்துகளை தற்போது நாம் முன்மொழியவுள்ள யோசனை யில் உள்ளடக்கும் செயற்பாட் டில் ஈடுபட்டுள்ளோம். மக்க ளின் முழுமையான கருத்து களை உள்ளடக்கியதாக அறிக கையைத் தயாரிக்க வேண்டி யுள்ளது. பொதுமக்களைத் தவிர்த்து நாட்டின் ஏனைய தரப்பினரிடமும் நாம் கருத் துகளைப் பெற்றுக் கொண் டோம். தற்போது அறிக்கை தயா ரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த அறிக்கை தமழ், சிங்க ளம் மற்றும் ஆங்கிலத்தில் தயா ரிக்கப்படும். அறிக்கையைப் பூர ணப்படுத்தி இம்மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதியிட மும், பிரதமரிடமும் ஒபபடைக் கத் திட்டமிட்டுள்ளோம்" என்று லால் விஜேநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசையா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 16 |
| - | - |
| 11 | 04 |
| - | - |
| 1928 | 2016 |

யாழ் அனலைதீவை பிறப்பிடமாகவும் யாழ் நல்லூரரை நிரந்தர வசிப்பிட மாகவும் கொண்ட பரமேஸ்வரி இராசையா அவர்கள் 16.04.2016 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை இராசையா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவ சம்பு வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகளும், லம்போதர நாதன் (லண்டன்), இராசலிங்கம் (சிட்னி), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் விமலாதேவி (நல்லூர்) ஆகியோரின் அன்பு தாயாரும், புஸ்பமணி தம்பித்துரை (லண்டன்), கனகசபை (கனடா), காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, செல்லத்துரை, தம்பித்துரை (கலைவாணி), பொன்னம்மா மற்றும் இராசம்மா, கமலாம்பிகை, சிவரூபி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பராசக்தி, ஜெயதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், முரளி, சங்கர், சிவகாமி (லண்டன்), சேந்தன், குகன் (சிட்னி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரவின், அரந்தன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.04.2016 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீட்டு முகவரி:
290/ 14 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:-
இ.லம்போதரநாதன்-021 205 4018
இ.இராசலிங்கம்-021 205 4018
இ.விமலாதேவி-021 205 4018

(4226)



## முதலாம் ஆண்டு நினைவு



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 | 30 |
| 06 | 04 |
| 1958 | 2015 |

### வரணி K.T. வேலுப்பிள்ளை சிவநாதன் (சிவாக்குட்டி)

திதி வெண்பா

சீராரு மன்மதத்துச் சித்திரைமா தப்பூர்வபக்கம்
பாராய் துவாதசியாய்ப் பார்திதியிற்- பேரார்
வரணியான் வேலுப்பிள்ளை சிவநாதன் சேர்ந்தார்
மரணியான் மாணடிகள் வாய்த்து.

ச.தங்கமாமயிலோன்

(4148)

மனைவி பிறேமா, மகன்மார் சுஜன், கஜன்
ஆகியோருடன் நாங்களும் நினைவுகூருகிறோம்.

தங்கவேல் மாளிகை,
உரும்பிராய்.

K.T.Y. சன்முகநாதன்
குடும்பம் (சகோதரன்)


## இராசி பலன்

18.04.2016
(சித்திரை 05, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி பின்னிரவு 5.23மணிவரை
பூரம் பின்னிரவு 12.12மணிவரை
சுபநேரம் 12.03-1.33மணிவரை
இராகுகாலம் 7.33-9.03மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம் அவிட்டம் | | |
| | | | குரு ராகு சந் |
| | சனி செவ் | | |

**மீனம்**
நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள்,அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கிய மான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்**
சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்,எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப காரிய பேச்சுக்கள் முடிவாகலாம்.

**இடபம்**
சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு, பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்**
பொ நல ஈடுபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், பொல்லாத வர்கள் உங்களை விட்டு விலகுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்**
குடும்பத்தினரிடையே அந்நி யோன்னியம் அதிகரிக்கும் நாள், புதியதொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், கௌரவமான சம்பவங்கள்இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம். குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,பண தேவை பூர்த்தியாகும்,வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்**
எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், போசன சுகக் குறைகள் ஏற்படலாம்.

**சிம்மம்**
குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர் பயகுங்கள் உருவாகும், அடுத் தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகு தியான நாள்.

**தனுசு**
மருத்துவச் செலவுகள் குறை ந்து மன நிம்மதியைக் கொடு க்கும், எதிர்பாக இருந்த வர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்**
தொழில்வளர்ச்சி மேலோ ங்கும் நாள், விருந்தினர்கள் வருகையுண்டு,தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்**
ஆடம்பரப் பொருட்கள் வாங் குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, இயல்பான வாழ் க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கன்னி**
சுப காரியச்செலவுகள் ஏற்பட லாம், விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் காரியங்கள் சாதிக்க வேண்டியநாள், ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம்.

# தமிழர்களை அடக்கி ஆளவே அரசாங்கம் நினைக்கின்றது

## த.தே.ம.முன்னணியின் செயலாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் தமிழர்களை தொடர்ந்தும் அடக்கி ஆளவே தற்போது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரது கைதுதொடர்வதாக சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தொடர்ந்தும் தமிழ் மக்களை பய பீதிக்குள் வைத்திருப்பதையே நல்லாட்சி என முகமூடி அணிந்துள்ள இந்த அரசு விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

நுணாவிலில் கடத்தப்பட்ட தனது மகனை மீட்டு தருமாறு கோரி அவரது தாயார் மனிதவுரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்திருந்தார். இதன் போது அங்கு வருகை தந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து.தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் இருந்ததை போன்றே தற்போதும் காட்டாட்சி தொடர்கின்றது. இதனை தான் முல்லைத்தீவில் கிராம சேவகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் காட்டுகின்றது. இராணுவ ஆட்சி நடப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ளது. வடக்கின் பொருளாதாரம் மற்றும் மதத்தினை சிதைப்பதற்கான நோக்கத்திற்காகவே இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்றால் என்ன? இலங்கை மீது இன்னொரு நாடு படையெடுத்து வரப்போகின்றதா?

பின்பு என்ன தேசிய பாதுகாப்பு? தேசிய பாதுகாப்பிற்கு பிழையான அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது. தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி நிலை கொள்ளச் செய்யப்படுகின்ற பாதுகாப்புத் தரப்பினர் இங்குள்ள எமது மக்களது அடையாளங்களை சிதைப்பதற்கும் எமது மக்கள் மீது மீண்டும் ஒரு வலிந்த யுத்தத்தை தொடர்வதற்குமே முயற்சித்து வருகின்றனர்.

யுத்தம் தற்போது நிறைவடைந்துள்ளது. மக்கள் நிம்மதியாக உள்ளனர் என இலங்கை அரசாங்கம் கூறி வருகிறது. ஆனால் வடக்கில் புத்த சிலைகள் அமைத்தல், சிங்கள குடியேற்றங்கள் என எமது தாயகம் சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றது. இது தவிர எமது முன்னாள் போராளிகள் மீண்டும் கைது செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து கொண்டு செல்கின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நிபந்தனை அற்று ஆதரவளித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன செய்கின்றது? இங்கு நடைபெறுவது என்ன என்று இவர்களுக்கு தெரியவில்லையா? எமது போராளிகள் கைது செய்யப்படுவது தெரியவில்லையா? எமது மக்கள் தற்போது படுகின்ற துன்பங்களுக்கு தனியே தென்னிலங்கை அரசு மட்டுமல்ல, நிபந்தனை எதுவும் இன்றி ஆதரவளித்த கூட்டமைப்பும் தான் பொறுப்பு.

எமது மக்கள் தமக்கு எதிராக நடைபெறும் மறைமுக யுத்தத்திற்கு எதிராக தாமாகவே ஒன்று திரண்டு போராடுவதே ஒரே வழி.

நீங்கள் நம்பி வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பிய அரசியல்வாதிகள் எதுவும் செய்யவில்லை. இனியும் செய்வார்கள் என்று நம்பி ஏமாறுவதில் அர்த்தமில்லை.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு சர்வதேசம் இலங்கை மீது அழுத்தத்தை நீக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், மீண்டும் அந்த சட்டத்தை பயன்படுத்தி கைதுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த கைதுகள் சட்டவிரோதமான முறையில் இடம் பெறுகின்றன. நுணாவிலில் இறுதியாக இடம்பெற்ற கைதுக்கு உரிய முறையில் பயங்கரவாத குற்றத்தடுப்பு உரிமை கோரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## தாவடிச் சந்தியில் நேற்று



(யாழ்ப்பாணம் )

தாவடி சந்திப் பகுதியில் உள்ள கடைத்தொகுதிக்கு முன்னால் சடலம் ஒன்று நேற்றுக் காலை கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இ.துரைசிங்கம்(வயது-56) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்தில் இருந்து கடிதம் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதுடன் தனது மரணத்திற்கு எவரும் உடந்தையாக இருக்கவில்லை எனவும் எவரையும் விசாரணை செய்ய வேண்டாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் நீதவானின் வருகையை அடுத்து உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## வர்த்தக நிலையத்தை உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

வடமராட்சி கரவெட்டி கோவில் சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. கோவில் சந்தை பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக உள்ள பலசரக்குக் கடையின் சீற்றினை கழற்றி உள் நுழைந்த திருடர்கள் தொலைபேசி மீள்நிரப்பு அட்டை, சிகரெட், பால்மா வகை உள்ளிட்ட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட் களை திருடியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பம் தொடர்பில் மறுநாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-60)

## வியாபாரிகளுக்கான அறிவித்தல் பருத்தித்துறையில் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபையினரால் வியாபாரிகள், விவசாயிகள், குத்தகைக்காரருக்கான அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 4 வீதம் மட்டுமே வரி அறவிடப்படவேண்டும். விவசாயிகள், சில்லறையாக தமது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்ய விரும்பின் அதற்கான இடத்தினை ஒதுக்கிக் கொடுத்து இடத்திற்கான வரியினை மட்டும் செலுத்த வேண்டும். விலை நிர்ணயத்திற்காக எவருக்கும் தரகுப் பணம் செலுத்த தேவையில்லை போன்ற விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளருக்கு அறிவிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ

## காலத்தின் அழைப்பு



காலத்தின் அழைப்பு எனற தலைப்பிலான முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு நாளை மறுதினம் புதன்கிழமை 20 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு (கலட்டிச் சந்தி) யாழ்ப்பாணம், 213, பிறவுண் வீதியிலுள்ள சுகதாமம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வானது பிரம்ம குமாரி ராஜா யோகா அமைப்பினால் விசேட முக்கிய பிரமுகர்களுக்கான விசேட அழைப்பின் பேரிலான நிகழ்ச்சியாகும்.

மேலும் அவுஸ்திரேலியா, தென்கிழக்கு ஆகிய நாடுகளிலுள்ள பிரம்மகுமாரி ராஜயோக அமைப்புக்களின் இயக்குநரும் , பிரம்ம குமாரிகளின் நல்லுலகிற்கான நிறுவனத்தின் பணிப்பாளருமான ராஜயோகினி பி.கே. டாக்டர் நிர்மலா கஜாரியாவின் சிறப்பு விரிவுரை நிகழ்ச்சியும் விசேட வீடியோ படக்காட்சியும் நடைபெறவுள்ளது.

மேலும் இந்நிகழ்வானது காலத்தின் அழைப்பு என்ற தலைப்பில் இன்றைய கால கட்டத்தில் குடும்பம், நிர்வாகம் மற்றும் சமூகம் சார்ந்த சவால்களை எதிர்நோக்குவதற்கு உள்ளார்ந்த விடயங்கள் தொடர்பான விசேட நிகழ்வாக அமையும். (இ)

## வடக்கு கால்நடை அமைச்சால் கோழிக்குஞ்சுகள் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

கிராமப்புற மக்களின் போசாக்கு மட்டம் மற்றும் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் கோழிக்குஞ்சுகளை விநியோகிக்கும் திட்டத்தை வடமாகாண கால்நடை அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதனை வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று முன்தினம் சனிக்கிழமை வேலணையில் தொடக்கி வைத்துள்ளார்.

வேலணையில் கமநல சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற தொடக்க நிகழ்ச்சியில் முதற்கட்டமாக வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 117 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் 700 குடும்பங்களுக்கு ஒருமாத வயதுடைய 200 கோழிக்குஞ்சுகளும்,561 குடும்பங்களுக்கு ஒருநாள் வயதுடைய 30 கோழிக்குஞ்சுகளும் வழங்கி வைக்கப்படஉள்ளது. இதற்கென வடக்கு விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 5.38 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுவரும் கோழிக்குஞ்சுகள் நாட்டுப்புறக் கோழிகளையும் உயர் இனக்கோழிகளையும் கலந்து உருவாக்கப்பட்ட கலப்பினம் ஆகும். இது சுவையாலும், போசணையாலும் நாட்டுக்கோழிகளின் முட்டைகளுக்கு ஒப்பான முட்டைகளை இடுவதுடன் நாட்டுக்கோழிகள் இடுவதைப்போல இரட்டிப்பு மடங்கு எண்ணிக்கையில் முட்டைகளை இடவல்லது. அத்தோடு உயரினக் கோழிகளைவிட அதிக நோய்எதிர்ப்பு சக்தியையும் கொண்டுள்ளன. இதனாலேயே கால்நடை அமைச்சு போசாக்கு மட்டம் மற்றும் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் திட்டத்தில் இப்புதியரக கோழிக் குஞ்சுகளை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் ஐந்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடக்க நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரப் பணிப்பாளர் சி.வசீகரன், பிரதி கால்நடை உற்பத்திச் சுகாதாரப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

## புத்தக அன்பளிப்பு

குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியால நூல் நிலையத்திற்கு சிங்கப்பூர் வாசியான கந்தையா கிருஷ்ணன் மாணவர்களுக்கு கற்றல் தேவைகளுக்கான ரூபா 25000/- பெறுமதியான புத்தகங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார். (இ-136)

## வடமராட்சியில் மழை பொழிந்தது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் நேற்று முன்தினம் பெரும்பாலான பகுதிகளில் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் தொடர்ச்சியாக மழை பொழிந்தது. (இ-52)




## விளையாட்டு நிகழ்வும் இசை நிகழ்ச்சியும் இன்று

புது வருட தினத்தை முனனிட்டு யாழ். பொலிஸ் நிலையத்தால் இன்றைய தினம் விளையாட்டு நிகழ்வும் இசை நிகழ்ச்சியும் யாழ். மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் இடம்பெறுவதுடன் மாலை இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (இ-9)

# எதியோப்பியாவில் 140 பேர் படுகொலை

## 39 குழந்தைகள் கடத்தல்

(அடிஸ் அபாபா)

**எதியோப்பியாவில் தெற்கு சூடான் எல்லையில் காம் பெல்லா மாகாணத்தில் 140 பேரை படுகொலை செய்த தெற்கு சூடான் கும்பல் 39 குழந்தைகளை கடத்திச் சென்றுள்ளது.**

எதியோப்பியாவில் தெற்கு சூடான் எல்லையில் காம் பெல்லா மாகாணம் உள்ளது. இங்குள்ள முகாமில் தெற்கு சூடானில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து அங்கிருந்து வந்த அகதிகள் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தெற்கு சூடானில் இருந்து காம்பெல்லா மாகாணத்துக்குள் ஆயுதங்களுடன் எதியோப்பியாவுக்குள் ஒரு கும்பல் புகுந்தது. அவர்கள் கண்ணில் பட்டவர்களை யெல்லாம் தாக்கினர்.

பின்னர் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார்கள். அதில் 140 பேர் பலியாகினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

இவர்கள் தவிர 39 குழந்தைகளை கடத்திச் சென்றனர். இத்தகவலை எதியோப்பியா தகவல் தொடர்பு துறை அமைச்சர் கெடாசெவ் ரெடா தெரிவித்தார்.

தெற்கு சூடானைச் சேர்ந்த 'முர்லே' என்ற பழங்குடியின மக்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார். சம்பவம் குறித்து அறிந்த பொலிஸார் விரைந்து சென்று பதில் தாக்குதல் நடத்தினர். அதில் 60 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே துணை ஜனாதிபதி ரியக் மாசர் தனக்கு எதிராக புரட்சி நடத்தி ஆட்சியை கவிழ்க்க முயன்றதாக ஜனாதிபதி சல்வா கீர் குற்றம் சாட்டினார். அதனை துணை ஜனாதிபதி பாசர் மறுத்துள்ளார். குடி பெயர்ந்த பழங்குடியினர் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)



சூறாவளி தாக்குதலில் உருகுவே இராச்சியத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 200 பேருக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதோடு பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சூறாவளி தாக்குதலில் 400 இற்கு அதிகமான கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதில் பாடசாலைகள் மற்றும் மதஸ்தானங்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

## ஆந்திராவில் 118°F வெயில் ஒரேநாளில் 24பேர் மரணம்

இந்தியாவின் ஆந்திரா, தெலுங்கானா வில் சில நாடகளாக வெயில் சுட்டெரிக்கும் நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் 24 பேர் பலியாகினர். ஆந்திரா, தெலுங்கானாவில் கடந்த சில நாட்களாக கோடை வெயில்சுட்டெரிக்கிறது.

ஆந்திராவின் 13 மாவட்டங்களிலும் 110 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்தியது. விஜயவாடாவில் 118 டிகிரி வெயில் பதிவானது. பகலில் அணல் காற்று வீசுவதால் மக்கள் வெளியே செல்ல தயங்குகின்றனர். வெயில் கொடுமைக்கு ஏற்கனவே 100 இற்கும் மேற் பட்டவர்கள பலியானார்கள். இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 24 பேர் பலியாகி விட்டனர். கடப்பா, கர்னூல் மாவட் டத்தில் தலா 7 பேரும், சித்தூரில் 4 பேரும், அனந்தபுரம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் தலா 3 பேரும், விஜயநகரம், குண்டூரில் தலா 2‚னர்.

குண்டூர் மாவட்டத்தில் பேருந்தில்பயணம் செய்த எர்ரபாளையத்தைச் சேர்ந்த திருப்பதியய்யா வெயில் தாங்காமல் பேருந்திலேயே மயங்கி விழுந்து உயிரிழந்தார். புற்று நோயாளியான இவர் வைத்தியசாலைக்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டு இருந்த போது பரிதாப முடிவு ஏற்பட்டது.

தெலுங்கானா மாநிலத்தில் 103 டிகிரிக்கு வெயில் கொளுத்துகிறது. பல மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வெயில் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டன (இ-5)

## பள்ளத்தாக்கில் திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது பேருந்து

### 4 பேர் பலி; 25 பேர் படுகாயம்




உத்தரகாண்ட் மாநிலத்தில் மலைப்பாதையில் சென்ற பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் பலியாகினர்.

உத்தரகாண்ட் மாநிலம் ாம்நகரில் இருந்து நேற்று ிக்னிக்கல் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு பேருந்து சென்றது. பிற்பகல் 1.30 மணியளவில் பவுரி மாவட்டம் தூமாகோட்-நைனிதண்டா இடையே மலைப் பாதையில் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடிய பேருந்து, 100 ஆழ பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்தது.

தகவல் அறிந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது 3 உடல்களை மீட்டதுடன், காயமடைந்திருந்த 26 பேரையும் மீட்டு நைனிதண்டா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அதில், ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

சம்பவ இடத்தில் வேறு உடல்கள் கிடக்கிறதா? என மீட்புக்குழுவினர் தொடர்ந்து தேடி வருகின்றனர். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா:27
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:GAQ/அரசதொழில்
தொ.இ: B/5750

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 10
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/ பிரான்ஸ் PR
தொ.இ: B/5751

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 40செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: ME, BS/ பொறியியலாளர் அமெரிக்கா
தொ.இ: B/5753

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 22 செவ் 7 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:O/L/ ஜேர்மன்
தொ.இ: B/5755

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 23செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSc/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா
தொ.இ: G/5789

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 38செவ் 7 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5791

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 23செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/ இந்தியா
தொ.இ: G/5792

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 95சூரிசெவ் 1 இல்
உயரம்: 152cm
தகைமை/தொழில்:Diloma/ஆசிரியர்
தொ.இ: G/5795

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# தமிழீழ விடுதலை போராட்டத்தின் பின்னால் நியாயம் இருந்ததை எவரும் மறுக்க முடியாது

## கிளிநொச்சியில் இரா.சம்பந்தன்





(பனிக்கன்குளம்)

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னால் ஒரு நியாயம் இருந்தது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் கூட்டமைப்புக் காரியாலயமான அறிவகத்தில் நேற்று முன்தினம் காலை மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரவிக்கையில், "இந்த நாட்டில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுகின்ற போது நிச்சயமாக ஆயுதப்போராட்டத்தை நீண்ட காலமாக நடத்தியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளும் அதில் பங்காளிகளாக இருந்துள்ளார்கள் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

ஏனென்றால் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னால் ஒரு நியாயம் இருந்தது. யுத்தம் நடைபெற்ற காலப் பகுதிகளிலும் சரி தற்போதும் சரி அதனை நான் பல தடவைகள் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறேன். போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு நியாயம் இருந்தது. இன்றைக்கும் இந்தத் தேசியப் பிரச்சினைக்கு, தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை இலங்கை அரசாங்கமும் சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றால் அந்தப் போராட்டத்தின் பின்னணியில் இருந்த நியாயத்தை அவர்களும் புரிந்துகொள்கின்றார்கள் என்பது தான் அதனுடைய அர்த்தமாகும்.

தற்பொழுது யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் இந்த நாட்டிலே வன்முறை ஏற்படுவதை நாங்கள் விரும்பவில்லை. வன்முறை ஏற்பட்டால் அதன் மூலமாக கூடிய பாதிப்புக்கள் ஏற்படுவது எமது மக்களுக்கே. கடந்த கால வன்முறைகளால் அதிகமான பாதிப்புகளை எதிர்நோக்கியவர்கள் எமது மக்கள்தான்.

நாட்டில் சமாதானமாக, பேச்சுவார்த்தை மூலமாக, புரிந்துணர்வின் மூலமாக, நல்லிணக்கத்தினூடாக பேசி உலகத்தில் பல் வேறு நாடுகளிலே பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். அதேபோல மக்களிடையே இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டு பிராந்தியங்கள், மாகாணங்கள் தங்களுடைய கருமங்களை, தமது மக்களுடைய தேவைகளை தாமே பூர்த்திசெய்யக்கூடிய வகையில் அரசியல் தீர்வு காணப்பட்டு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு மிகவும் நாகரிகமான முறையில் ஆட்சி நடைபெற்று வருகின்றது. அந்த மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் சுதந்திரமாக வாழ்வதைப் போலவே இந்த நாட்டில் எமது மக்களும் வாழவேண்டும் என்ற ஆட்சிமுறையையே நாம் எதிர் பார்க்கிறோம். அதனையே தான் நாம் சர்வதேசத்திடமும் வலியுறுத்தி வருகின்றோம். அதற்காக நாம் உழைத்து சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் நாம் பெற்றுள்ளோம்.

எங்களுடைய மக்களுடைய சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு ஒருமித்த நாட்டுக்குள் எமது மக்களது இறைமை மதிக்கப்பட்டு போதிய அதிகாரங்களுடன் சமூக, பொருளாதார, கலாசார ரீதியாக எங்களுடைய உரிமைகளை நாங்கள் அடையக்கூடிய வகையில், எங்களுடைய அபிலாசைகள் நிறைவேற்றக்கூடிய வகையில், ஒரு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்ற கருத்தை நாங்கள் வலியுறுத்தி முன்வைத்திருக்கின்றோம்.

அந்த நிலைப்பாட்டைச் சர்வதேசமும் ஏற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கத்திடம் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றது. அப்படியான அரசியல் தீர்வு ஏற்படுமாகவிருந்தால் இந்த நாட்டு மக்களிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்" என்று மேலும் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் முற்பகல் 10 மணியளவில் மக்களைச் சந்தித்து மக்களது குறைகளைக் கேட்டறிந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், கிழக்கு மாகாண பொருளாதார அமைச்சர் துரைரட்ணசிங்கம், வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராசா, வடமாகாணசபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரியரத்தினம், ஆனோல்ட், சயந்தன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இச் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூகத்தினர், பிரதேச மக்கள் தமது தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர். (3-15-281)




## வவுனியா நகரில் அகற்றப்படாத கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம்



(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து கடந்த ஒரு வாரமாக அகற்றப்படாத கழிவுகளால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நகரசபையின் எல்லைக்குட்பட்ட வைரவபுளியங்குளம், மன்னார் வீதி என்பவற்றில் கடந்த ஒரு வாரமாக கழிவுகள் அகற்றப்படவில்லை.

காமினி மகா வித்தியாலயம் முன்பாக உள்ளவீதியோர சந்தைக கழிவுகள் கூட அகற்றப்படாத நிலையில் இருப்பதால் அதில இருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் ஒரு மணி நேரம் பெய்த மழையினால் அக் கழிவுகள் பரவலடைந்துள்ளதுடன் போக்குவரத்துக்கு இடையூறுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இளநீர் கோம்பைகள், அழுகிய மரக்கறிகள், உணவுகள், போத்தல்கள் என்பன அகற்றப்படாத நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (3-250)

## தாண்டிக்குளம் முதல் நொச்சிமோட்டை வரையான அரச நிலங்களை அபகரிக்கும் தனிநபர்கள்

### கட்டட நிர்மாணப் பணிகளும் இடம்பெறுவதாக குற்றச்சாட்டு

வவுனியா, தாண்டிக்குளம்-நொச்சிமோட்டை வரையிலான பகுதிகளில் உள்ள அரச திணைக்களங்களுக்கு சொந்தமான நிலங்கள் தனியாரால் அபகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளம் தொடக்கம் நொச்சிமோட்டை வரையிலான பகுதியில் உள்ள ஏ9 பிரதான வீதிக்கும், யாழ். புகையிரதப் பாதைக்கும் இடையிலான தாழ் நிலப்பகுதி தனிநபர்களால் படிப்படியாக அபகரிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பகுதிக் காணிகள் வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் புகையிரதத் திணைக்களம் என்பவற்றுக்கு சொந்தமானது என்பதுடன மழைகாலங்களில் நீர் வழிந்தோடும் பகுதியாகவும் உள்ளது. ஆனால், கடந்த சில மாதங்களாக வர்த்தக நிலையங்களை அமைக்கும் நோக்கில் சில தனிப்பட்டவர்கள் அந்நிலங்களில் மண்போட்டு நிரவி கட்டட நிர்மாண வேலைகளை மேற கொணடு வருகின்றனர். இதனால் மழை காலங்களில் நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும், புகையிரதப் பாதை மற்றும் ஏ9 வீதி விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் போது பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப் புள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (3-250)

## முல்லை. காத்தவராயன் கூத்தில் எட்டு கலாமன்றங்கள் பங்கேற்பு

வன்னிக் குறோஸ் கலாச்சாரப் பேரவைஒழுங்கு செய்த முல்லை மாவட்ட கலைஞர்களுக்கான மாபெரும் காத்தவராஜன் சிந்துநடைக் கூத்து போட்டி நேற்று முற்பகல் 10 மணிக்கு வித்தியானந்தா கல்லூரி கேட்போர்கூடத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது

வன்னிக் குறோஸ் கலாச்சாரப் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம் பெறும் இந்தப் போட்டி இரவு பத்து மணிவரை இடம் பெறவுள்ளது

இந்தப் போட்டியிலே துணுக்காய் மல்லாவியை சேர்ந்த தமிழ்த் தாய் கலாமன்றம் பெரியபுளியங்குளத்தை சேர்ந்த சுந்தராலய கலாமன்றம் கூழாமுறிப்பை சேர்ந்த அண்ணா கலாமன்றம் பொன்னகர் முள்ளியவளையை சேர்ந்த பாரதிகலாமன்றம் பொண்ணகர் முள்ளியவளை இளந்தளிர் கலாமனறம் புதுக்குடியிருப்பு சிறீ முத்துமாரி கலாமன்றம்புதுக்குடியிருப்பு இயலிசை நாடகமன்றம் வேணாவில் புதுக்குடியிருப்பு கலைமகள் கலாமன்றம் உள்ளிட்ட 8 கலாமன்றங்கள் இப்போட்டியிலே பங்குபற்றுகின்றன

இந்த நிகழ்வில் வன்னி பாராளுமனற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் முல்லைத்தீவு வலயக்கலவிப் பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் (3-281)

# நல்லாட்சி அரசாங்கமும் தமிழ் மக்களின் கலாசாரத்தை அழிக்கும் சதியை தொடர்கிறது

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கிறார் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

(பனிக்கன்குளம்)

**தமிழ் மக்களின் கலாசாரத்தை திட்டமிட்டு சீரழிக்கும் நடவடிக்கைகள் நல்லாட்சி அரசாங்கத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றம்சாட்டியுள்ளார்.**

இதனால் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள அவர், நல்லாட்சி என்ற சொல்லை மாத்திரம் பயன்படுத்திக்கொண்டு தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுவதை ஆட்சியில் உள்ளவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கமும் தமிழ் மக்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்கவே முயல்வதாக குற்றம்சாட்டும் நாடாளுமன்ற உறுப்பினர். எனினும் தற்போதைய அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் வழங்கியுள்ள இறுதி சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த பெற்றோரின் குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கிவைக்கும் நிகழ்வில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் முல்லைத்தீவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட உடையார்கட்டு வடக்கு கிராமசேவையாளர் பிரிவின் மூங்கிலாறு வடக்கு கிராமத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தில் அமைக்கப்பட்ட நூல் நிலையக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

இதன்போது போரினால் அவயவங்களை இழந்த பெற்றோரின் பிள்ளைகள் 80 பேருக்கு சுவிஸ் வாழ் பிரஜையொருவர் வழங்கிய கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார். (3-281)

# மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா







வருடாவருடம் இடம்பெறும் திருவள்ளுவர் விழா, இம்முறை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மஹா.தர்மகுமார சர்மா தலைமையில் நேற்று முன்தினம் இரண்டு கட்டங்களாக நிகழ்வு இடம்பெற்றது.

விழாவின் முக்கிய அம்சங்களாக சிறப்பு பட்டிமன்றம், கிராமிய நடனம், இளங் கலைஞர்கள் கௌரவிப்பு, தமிழறிவுப் போட்டி உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றன. குறிப்பாக இளம் கலைஞர்கள் கௌரவிப்பின்போது, ஊடகத்துறைக்கான விருது மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஆர். லெம்பேட்டிற்கும், எழுத்தியல் துறை விருது மன்னார் அமுதனுக்கும், இயல்துறை விருது சோ.றோகன் ராஜிற்கும், இசைத்துறை விருது சி.சிலஸனுக்கும், குறும்படத்துறை விருது அ.நிஸாந்தனுக்கும், கவித்துறை விருது ஜே.ஆர்.மயூரனுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதியும் யாழ்.தமிழ்ச்சங்க தலைவருமான பேராசிரியர் தி.வேல்தம்பி, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமேல், முசலி பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரன், நானாட்டான் பிரதேச செயலாளர் எம்.பரமதாசன், மன்னார் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்ரியான், மன்னார் நகர சபை செயலாளர் எக்ஸ்.எல்.றெனால்டோ, கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் வே.இறைபிள்ளை, மன்னார் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சி.கனகாம்பிகை, மன்னார் உதவி கல்விப் பணிப்பாளர் பெப்பி லெம்பேட், மன்னார் ஆங்கில வள நிலைய முகாமையாளர் எஸ்.சண்முகலிங்கம், மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். (3)





***நாம் இலட்சிய நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு உண்ணாப்புலவில் பத்து மாணவர்களுக்கு மாதாந்த கல்வி ஊக்குவிப்பு உதவியாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கலந்து கொண்டார்.***

***(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)***

# பிரித்தானிய மகாராணி இனியும் எங்களை ஆளக்கூடாது

பிரித்தானிய மகாராணியான இரண்டாம் எலிசபெத்தை தலைவி பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய உள்ளதாக ஜமைக்கா நாடு அதிரடியாக அறிவித்துள்ளது.

உலகில் உள்ள 75 சதவீத நாடுகள் அனைத்தும் பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்து தான் சுதந்திரம் பெற்றுள்ளது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் பிரித்தானிய நாட்டிலிருந்து சுதந்திரம் பெற்று சுய அதிகாரத்துடன் இயங்கி வருகின்றன.

ஆனால், ஜமைக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா உள்ளிட்ட 15 நாடுகள் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்று இருந்தாலும் கூட, அந்த நாடுகளுக்கு இன்றளவும் அதிகாரபூர்வ ராணியாக இரண்டாம் எலிசபெத் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார்.

இந்நிலையில், பிரித்தானிய மகாராணி இனியும் எங்களுக்கு தலைவியாக இருப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் என்றும், எங்களுடைய நாட்டிற்கு தலைவராக ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்ய நாங்கள் முடிவு செய்துள்ளதாக ஜமைக்கா ஆளுநர் ஜெனரலான பேட்டிரக் ஆலன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

மேலும், மகாராணியை தலைவி பொறுப்பிலிருந்து நீக்கும் அறிவிப்பை மகாராணியின் 90-வது பிறந்த நாளான ஏப்ரல் 21ஆம் திகதிக்கு ஒரு நாள் முன்னதாக அறிவிப்போம் என தெரிவித்துள்ளார்.

வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிகா நாடுகளுக்கு மத்தியில் உள்ள இந்த ஜமைக்கா நாட்டிற்கு பிரித்தானிய மகாராணி கடந்த 2002ம் ஆண்டு தான் கடைசியாக பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்த கூடுதல் மத்திய படை அரசு முடிவு!

காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியை ஏற்படுத்தவும், மேலும் உயிரிழப்புகள் ஏற்படாமல தடுத்து பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக கூடுதல் மத்திய படை அனுப்பப்படவுள்ளது.

காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தை சேர்ந்த சிறுமி ஒருவரை இராணுவ வீரர்கள் சிலர் துஷ்பிரயோகம் செய்ததாக புகார் எழுந்ததை தொடர்ந்து, பாதுகாப்பு படையினருக்கு எதிராக உள்ளூர்வாசிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதில் பாதுகாப்பு படையினர் மீது கல் வீச்சு நடைபெற்றதால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. கடந்த 4 நாட்களுக்கும் மேலாக அங்கு நடந்து வரும் இத்தகைய சம்பவங்களில் இதுவரை 5 பேர் கொல்லப்பட்டனர். இதனால் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இந்தநிலையில் மத்திய உள்துறை செயலாளர் ராஜீவ் மகரிஷி தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில் பாதுகாப்புத்துறை அமைச்சகம், உளவுத்துறை, உள்துறை மற்றும் மத்திய பாதுகாப்பு படையை சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியை ஏற்படுத்தவும், மேலும் உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுத்து பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக கூடுதல் மத்திய படையை அனுப்பி வைப்பது என இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முன்னதாக இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மாநில அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என மத்திய அரசு உறுதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# SLEAS-விடய ஆய்வு அணுகு முறை

# கல்வி நிர்வாகம் தொடர்பான சம்பவக் கற்கைக்கான விடைகள்

## 16.04.2016 இல் வெளிவந்த வலம்புரியில் SLEAS சம்பந்தமான கேள்விக்கான விடை

I.பாடசாலை அபிவிருத்தித் திட்டமிடல் உள்ளடக்கப்பட வேண்டிய படிமுறைகள்

1. சூழ்நிலை பகுப்பாய்வு
2. கொள்கைகள், நோக்கங்கள், இனம் காணுதல்.
3. இடைக்கால/ மூலோபாயத் திட்டம்
4. ஓராண்டில் செயற்படுத்தப்படும் திட்டம்
5. நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு மதிப்பீடு

II.சூழ்நிலைப் பகுப்பாய்வு

1.கல்வி நோக்கங்கள்
2.மாணவர் தேவைகள்
3. பாடசாலைத் தேவைகள்
4.பாடசாலையின் சுற்றுச் சூழல்
5.SWOT பகுப்பாய்வு

III திட்டக் குறிப்புக்கள்

1.குறிப்பானது-S
2.அளவிடக்கூடியது-M
3.அடையக்கூடியது-A
4.யதார்த்தமானது-R
5.காலத்துக்கேற்றது -T

IV.கண்காணிப்பு- கண்காணிப்பு எனப்படுவது திட்டத்தை நடைமுறைப் படுத்துகையில் ஒழுங்கு முறையாக தகவல்கள் சேககரித்து திட்டமிடப்பட்ட நோக்கங்கள் இலக்கு களை நோக்கித் திட்டம் பயணிக்கிறதா என்பதை ஆராய்ந்து பலவீனங்கள், குறைபாடுகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றுக்கான பரிகாரங்கள் மேற்கொள்ளல். இதற்காக குறிகாட்டி (Indicators) பயன்படுத்தப்படலாம். இது ஒரு தொடர் செயன் முறையாகும். 02 புள்ளிகள்

மதீப்பீடு- மதிப்பீடானது குறிகாட்டியைப் பயன்படுத்தி திட்டத்தின் இலக்கு நோக்கம் அடையாளப்பட்டுள்ளதா என ஆராய்ந்தறிவதாகும். திட்டம் தயாரிக்கப்பட்டு இறுதியில் அது போதுமானதா என்பதைக் கவனத்திற் கொள்வதற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வேளையில் இடையிடையே நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்றனவா என்பதைப் பரிசீலிப்பதற்கும இறுதியில் பெறுபேற்றிற்கு அமையத் திட்டத்தின் அடைவை அளவிடுவதற்கும் எதிர்கால திட்டத்திற்கான பின்னூட்டலைவழங்குவதற்கும் மதிப்பீடு பயனளிப்பதாகும்.

03 புள்ளிகள்

மொத்தப்புள்ளிகள் 05

அ) தர்க்க ரீதியான திட்ட வடிவ அணுகுமுறை

திட்டத்தின் ஒவ்வொரு செயற்றிட்டத்தின் கீழும் ஒரு நிரலில் இடைத் தொடர்பு தலையீடுகளை இனங்கண்டு அதன் கீழ் இறுதிப்பெறுபேறு, நோக்கம், முடிபு என்பனவும் அவற்றை அடைவதற்குப் பயன்படுத்தப்படும் உபாயங்கள், வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் என்பனவும் விபரிக்கப்படும்.

இன்னொரு நிரல் மேலுள்ள தலைப்புக்கேற்ற செயல், அடைவு குறிகாட்டியைக் காட்டும் இறுதிப் பெறுபேற்றைக் காட்டும் குறிகாட்டி, நோக்கம் நிறைவேற்றப்படும் குறிகாட்டி, முடிவுக்கான குறிகாட்டி ஒவ்வொரு வருடத்திற்குமுரிய பௌதீக இலக்குகள் என்பனவும் காட்டப்படும் அடு த்த நிரலில் அளவு சரியான வையா என்பதை நோக்கும் முறை விளக்கப்படும். இறுதி நிரலில் எழக் கூடிய தடைகள் காட்டப்படும்.

3புள்ளிகள்

ஆ) கான்ட் வரைபடம்

திட்டத்தின் வேலைத்திட்டம்/ செயற்றிட்டத்தின் -உபாயங்கள் பிரதான செயற்பாடு, கால எல்லை, செலவு நிதி மூலம் அடைவு குறிகாட்டி, பொறுப்புக்கூற வேண்டியவர்களின் பதவி என்பவற்றைக் காட்டும் (வரைபடத்தைச் சரியாகக் காட்டியிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளவும்

02 புள்ளிகள்

மொத்தப்புள்ளிகள்

05 (5X5= 25 புள்ளிகள்)

2.I திட்டமிடல் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள்.

1 திட்டமிடல் பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துவதுடன் அது தொடர்பான ஆவணங்களை வழங்கி பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கு அறிவுறுத்தல்

2. பாடசாலைகளுக்குச் சென்று திட்டச் செயன்முறையை அவதானித்தலும் ஆலோசனை வழங்கலும்.

3.கலந்துரையாடப்பட்ட திட்டத்தை ஆய்வு செய்து அதனை மேம்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குதல்.

3X5=15 புள்ளிகள்

II.விடயம்-வட்டவளை வித்தியாலய அதிபரின் உரையின் பின்னர் அவரை அலுவலகத்துக்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு அறிவுறுத்தியமை

அதிபரை தனியாக சந்தித்து சுருக்கமாகக் கலந்துரையாடி விடயங்களை விளக்க முடியும். கூட்டம் நடைபெற்ற சந்தர்ப்பங்களில் அதிபரின் குறைபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டிருப்பின் அதிபர் இக் கட்டான நிலைமைக்கு உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அவர் கோபத்தினால் எதிர்ப்பை வெளிபடுத்தவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்

(5 புள்ளிகள்)

(15+10=25 புள்ளிகள்)

3.பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

1. ஆசிரியர்கள் அதிக அளவு லீவு எடுத்தலை நீக்கல்

❖ ஆசிரியர்கள் எடுக்கும் லீவு விபரம் காட்டும் வரைபடம் ஒன்றில் அடையாளமிட்டு அனைவரும் காணக்கூடிய விதத்தில் வைத்திருத்தல்

❖ தனிப்பட்ட முறையில் அந்த ஆசிரியர்களுடன் கலந்துரை யாடி அவர்களின் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான செயலொழுங்கு முறையை தயாரிப்பதனூடாக மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தல்.

❖ குறிப்பிட்ட நாட்களை விடக் குறைந்த அளவு லீவினை எடுத்த ஆசிரியர்களை வருட இறுதியில் பரிசு அல்லது பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்தல்.

❖ பாடசாலையை விரும்பத்தக்க கவர்ச்சி தரும் இடமாக ஆக்குதல்

❖ லீவு பற்றி சுற்றறிக்கை யில் அடங்கியுள்ள ஏற்பாடுகளை விளக்குதல்

(இவற்றுள் 2 அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள் இரண்டு குறிப்பிட்டிருப்பின் 05 புள்ளிகள்)

II.பெற்றோர்களைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களில் பங்கு பெறச் செய்தல்

1.கூட்டத்தை மாலை நேரங்களில் அல்லது விடுமுறை தினங்களில் பெற்றோருக்கு வசதியான தினத்தில் நடத்துதல்

2. கூட்டம் பற்றி போதுமான அளவு அறிவிப்பு வழங்குதல்- பிள்ளைகளிடம் பெற்றோர் பங்குபற்றுதல் கட்டாயமானது என்பதை உணரச் செய்தல்

❖ கூட்டத்துக்கு விருந்தின ராக பிரபலம் பெற்ற ஒருவரை அழைத்தல்

❖ முடியுமானால் கூட்டத்திற்கு முன்னர் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சி ஒன்றை நடத் துதல்

❖ கூட்டம் நிதி சேகரிப்பதற்கானது அல்ல, பிள்ளைகளின் கல்வி பற்றிய கலந்துரையாடலுக்கே என்பதைக் கவனத்தில் கொள்ளச் செய்தல்.

(இவற்றுள் 2 அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் இரண்டு குறிப்பிட்டிருப்பின்

(05 புள்ளிகள்)

III. பாடசாலையின் கழிவறைகளைத் தூய்மையாக பராமரிக்க முடியாமை

❖ வகுப்புக்களின் எண்ணிக்கைக்கேற்ப கழிவறைகளை ஒதுக்கி அவற்றைத் தூய்மையாக பராமரிப்பதற்கு மாணவர்களிடம் ஒப்படைத்தல்

❖ ஆரம்ப வகுப்புக்களுக்கு பெற்றோரின் உதவியைப் பெறுதல்

❖ சுகாதார பாட வேளைகளில் கழிவறையைப் பயன்படுத்தல் அதன் முக்கியத்துவம் பற்றிக் கவனம் செலுத்துதல்

❖ அனைத்துக் கழிவறைகளுக்கும் நீர் வசதிகளை வழங்குதல்

❖ பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் நிதியிருப்பின் அதிலிருந்து கொடுப்பனவு செலுத்தி ஒருவரை நியமித்தல்

(இவற்றுள் 2 அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள் இரண்டு குறிப்பிட்டிருப்பின்

05 புள்ளிகள்

IV. மழை காலங்களில் வகுப்பறைக்குள் வெள்ளம் புகுவதால் ஏற்படும் இடையூறுகள்

❖. கூரையில் ஒழுகும் இடங்களைப் பார்த்தல், இதற்குத் தேவையான பொருட்களைப் பண்புத்தர உள்ளீட்டுக்கான நிதியிலிருந்து பெறுதல்; உழைப்பினை இயலுமான பெற்றோரிடமிருந்து பெறுதல்.

❖ வகுப்பறையில் மழைத் தூறல் புகாது தடுப்பதற்கு பண்புத்தர உள்ளீடுகள் நிதியிலிருந்து மூங்கில் தட்டிகளை வாங்குதல்.

(5புள்ளிகள்)

V.பண்புத்தர உள்ளீட்டு நிதியைச் செலவிடுதல்

❖. சுற்றறிக்கையை நன்கு கற்றறறிந்து கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து அதற்கேற்ப தேவையானவற்றுக்கு நிதியைச் செலவு செய்தல்.

❖ பிரச்சினை உண்டென உணரும் சந்தர்ப்பங்களில் வலயக்கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து விடயங்களை விளக்கி விசேட அனுமதியைப் பெறுதல்.

❖ வேறு அதிபர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களைப் பெறுதல். (5புள்ளிகள்)

(5×5= 25புள்ளிகள்)

4. I. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி என்ற எண்ணக்கருத்தினை விளக்குவதற்கு

(5புள்ளிகள்)

II.பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியினை மேம்படுத்தப் பயன்படுத்தக் கூடிய உபாயங்கள்.

❖ ஆசிரியர் கூட்டங்களில் ஆசிரியர் வாண்மை விருத்தி பற்றிய தலைப்புக்களை முன் வைத்து கலந்துரையாடல்.

❖ ஆசிரியர்களைக் கொண்ட பாடக்குழுக்களையும் பாட இணைப்பாளர்களையும் நியமித்து வாரத்துக்கு ஒரு தடவை கூடி பாடத்திட்டத்திட்டமிடல் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடல்.

❖ வெளி வளவாளரை அழைத்து கலந்துரையாடல் நடத்துதல்.

❖ இணையத்தளம் மூலம் விடயங்களைப் பெறுவதற்கு வசதிகளை வழங்கி ஏனைய ஆசிரியர்களுடன் அத் தகவலைப் பரிமாற்றிக் கொள்ளுதல்.

❖ செயல் மூல ஆய்வினை நடத்தி விளைவுகளைப் பகிர்ந்து கொள்ளல்.

❖ முன் மாதிரிப்பாட அவதானிப்புக்கு இடமளித்தல்.

❖ புதிய ஆசிரியர்களுக்கு மூத்தோர் வழிப்படுத்தல் முறையின் கீழ் பயிற்சி அளித்தல்.

❖ சுய மதிப்பீடு, சகபாடிகள் மதிப்பீடு முறையினை அறிமுகம் செய்தல்.

(10புள்ளிகள்)

(இவற்றுள் 3 அல்லதுவேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங் கள் 3 விளக்கப்பட்டிருப்பின்

(10 புள்ளிகள்)

III.கந்தவன் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் பற்றாக் குறை

❖ அதிபர் ஒரு வகுப்பறையையும் ஏனைய ஆசிரியர்கள் இருவரும் இரு வகுப்புக்கள் வீதம் பொறுப்பேற்றல். தரம் 1,2 தரம்3,4 இற்கும் பல்தரக் கற்பித்தலை பயன்படுத்துதல்.

❖ ஆசிரியர் லீவு எடுக்கும் தினங்களில் அந்த ஆசிரியரால் ஒப்படைகள் அல்லது செயற் பாடுகள் என்பனவற்றை மேற் கொள்ள ஆலோசனைகள் வழங் குதல். அல்லது அத்தகைய தினங்களில் பாடசாலை சமூகத்திலுள்ள பொருத்தமான ஒருவரை அழைத்து உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

(10 புள்ளிகள்)

ஒவ்வொரு வினாவினதும் பகுதிகளுக்குரிய புள்ளிகளைத் தனித்தனியாக காட்டி மொத்தப் புள்ளியை உரிய நிரலில் குறிப்பிடுதல்.

(5+10+10= 25புள்ளிகள்)

(முற்றும்)

**ஆசிரிய வாண்மை அபிவிருத்தி நிறுவகம்**

# விலகியுள்ளேன் இணையவில்லை



## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் விளக்கம்

ஈ.பி.டி.பியிலிருந்து விலகியது உண்மையே. ஆனால் அரசாங்கத்துடன் இணைவதைப் பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் விளக்கமளித்துள்ளார்.

அவர் அளித்துள்ள நேர்காணலில்,

கேள்வி:-நீங்கள் ஈ.பி.டி.பியிலிருந்து விலகி, புதிய அரசுடன் இணைந்து கொள்ளப்போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. இது பற்றிய உண்மை நிலையைக் கூற முடியுமா?

பதில்-விலகியது உண்மை. ஆனால், புதிய அரசுடன் இணைவதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை.

கேள்வி:- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலும் பிறகு, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிலும் இணைந்து செயற்பட்ட நீங்கள் இன்று பிரிந்து செல்லத் தீர்மானித்ததற்கு என்ன காரணம்?

பதில்:-பாடசாலையை விட்டு விலகிய நாட்களில் கூர்மையடைந்திருந்த தேசிய விடுதலை உணர்வு, என்னை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைய வைத்தது. அப்போது, தேசிய விடுதலைக்கான ஒரு போராளியாக, தேசிய விடுதலையை வேண்டி நிற்கும் மக்களுக்கான விடுதலைப்படையின் உறுப்பினர் என்ற அளவிலேயே என்னால் சிந்திக்கவும் செயற்படவும் முடிந்தது. இங்கே, தேசிய விடுதலையுடன் இணைந்ததான சமூக விடுதலையின் அவசியத்தையும் புரிந்து கொள்ள முடிந்தது. இதுவே, என்னுடைய அரசியல்பாதையை தீர்மானிக்கும் அடிப்படையாக அமைந்தது.

தேசிய விடுதலைப்போராட்டத்தின் நகர்வின் பரிமாணங்கள், பல்வேறு வகையாக மாற்றமடைகின்ற காலங்களில் இந்த அடிப்படையில் நின்றே நான் தீர்மானங்களை மேற்கொண்டேன். மக்கள் நலன்களை முதன்மைப்படுத்திய அரசியல் வழிமுறையில் ஈடுபட்ட காரணத்தினால், நீண்டகாலம் ஆயுதப் போராட்டத்திலும் அதன் பின்னான ஜனநாயக நீரோட்டத்திலும் என்னுடைய தீர்மானங்கள் இருந்தன.

இந்த அடிப்படையிலேயே நான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பவற்றில் செயலாற்றி வந்திருக்கிறேன்.

கடந்த 2010 தேர்தலில் நான் நன்கு அறியப்படாத ஒருவராக இருந்தபோதும் அன்றைய சூழலில் மக்கள் என்னைத் தமது பிரதிநிதியாக அங்கீகரித்திருந்தனர். இந்தக் காலகட்டத்தில் மிக மோசமான யுத்தம் மற்றும் இடப்பெயர்வுக்குள் சிக்குண்டு, ஏதுமற்றவர்களாக மீள் குடியமர்ந்த மக்களின் வாழ்க்கை என்னை மிகவும் பாதித்தது. இந்த நிலையில் இந்த மக்களுடைய நலன்களுக்காகச் செயற்படுவது எனது தார்மீகப் பொறுப்பாகும் என உணர்ந்தேன். இதுவே எனது முதற் கடமையாகக் கொண்டு கடந்த ஐந்து வருடங்களும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாட்டு வரையறைக்குள் மிகக் கடினமாக இந்த மக்களுடைய தேவைகளை நிறைவுசெய்வதற்காக உழைத்தேன். இந்த மக்களும் என்னைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டமையை நான் உணர்ந்திருந்தேன். ஆனாலும் மக்களுடைய உணர்வுகளும் தெரிவும் வேறாக இருந்ததைத் தேர்தலில் உணர்ந்து கொண்டேன். இந்த நிலையில் மக்கள், என்னிடம்வேறு விடயங்களையும் எதிர்பார்க்கின்றனர் என்பதை உணர்ந்து கொண்டதன் அடிப்படையிலேயே நான் என்னுடைய அரசியல் நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும் என்கிற ஒரு அவசியத்திற்குள் தள்ளப்பட்டேன். இன்றும் இந்த மக்கள் என்னுடன் மிகவும் சுமுகமான அன்பான ஒரு உறவைக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே மக்கள் நலன்களுக்காக, மக்கள் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது எனக்கு அவசியமாயிற்று.

கேள்வி:-கடந்த பாராளுமன்றத் தேர்தலில் உங்களுக்கு ஏற்பட்ட தோல்வியே இந்தப் பிரிவுக்குக் காரணமாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாமா?

பதில்:-இதைப்பற்றி ஏற்கனவே விரிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால், தேர்தல் வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால், இந்த விடயத்தை ஒரு யதார்த்த நிலைப்பாட்டில் நின்று தீர்மானிக்க வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

கேள்வி:-அப்படியென்றால் உங்களுடைய புதிய அரசியல் நிலைப்பாடு என்ன?

பதில்:- மக்களுடைய உணர்வுகளில் தமக்கான நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற நிலைப்பாடு மிக நீண்டகாலமாகவே இருக்கிறது. இது ஒரு வகையில் அவர்களுடைய மன அமைவாக மாறியிருக்கிறது. இதில் எந்தச் சமரசத்துக்குப் போவதையும் அவர்கள் விரும்பவில்லை. எனவே, இன்றைய உலக ஒழுங்கின் அடிப்படையில் சமூகங்களுக்கான சமத்துவ, பன்மைத் துவத்தை ஏற்றுக்கொண்டு அதனூடான சுயநிர்ணய அங்கீகாரத்தை அவர்கள் இப்போதும் வேண்டி நிற்கின்றனர். இதுவே அவர்களுடைய முதன்மையான உணர்வாகவும் இருக்கிறது.

பன்மைத்துவம் என்பது, இனங்களுக்கிடையே மட்டுமல்ல, இனங்களுக்கிடையே காணப்படும் சமூகக் கூறுகளிலும் பிரதிபலிக்க வேண்டும் என்பதே உண்மையாகும். இந்த அடிப்படையில் சாதி, பிரதேச, மத, பால் நிலை சமத்துவங்களையும் வேண்டி நிற்கின்றனர். இதனை அங்கீகரிக்கும் ஒரு சமூக நீதிக்கட்டமைப்புக்குள் மட்டுமே உண்மையான பன்மைத்துவமும் இனங்களுக்கிடையிலான பரஸ்பர அங்கீகாரமும் ஏற்படும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்படுகின்ற நலிவுற்ற மக்களுக்குரிய விசேட ஏற்பாடுகளும் நன்மைகளும் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் சூழலிலேயே பன்மைத்துவத்தின் ஊடான சமத்துவம் சாத்தியமாகும்.

இதுவே, சுய நிர்ணய உரிமையை அர்த்தமுடையதாக்கும். இவற்றையே நான் அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வையும் சமூக நீதியையும் உருவாக்குவதற்கான ஒரு சட்டவாட்சி முறையை ஏற்படுத்துவதற்காக உழைப்பது என்னுடைய இலக்காகும்.

கேள்வி:- இதற்கு உங்களுடைய செயற்பாடுகள் எப்படியாக அமையும் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளலாமா?

பதில்:-இது ஒரு பாரிய பணி. பலருடைய அர்த்தமுள்ள பங்களிப்புகள் சேர்ந்தாலே இதைச் சாத்தியமாக்க முடியும். இன்று தமிழ் பேசும் மக்கள், தங்களுடைய அரசியல் தலைமைகளை ஐக்கியப்படுமாறு கோருகின்றனர். ஆனால், அந்த ஐக்கியம் என்பது, எல்லோருடைய கருத்துக்களையும் ஏற்றுக் கொள்கின்ற நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு, சரியான தீர்மானங்களை நோக்கிய விவாதங்களாக அமைய வேண்டும். இதன் மூலமே ஒரு உண்மையான ஐக்கியத்தை உருவாக்க முடியும். இந்த அடிப்படையில் இன்று ஐக்கியப்படும் நிலைப்பாட்டை வலியுறுத்தி, ஒரு பொதுமைப்பாடுடைய அரசியல் தீர்மானத்தை நோக்கி நகர்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். அத்தோடு கடந்தகாலங்களைப் போன்று மக்களுடைய நலன்களை தேவைகளை நிறைவு செய்வதில் என்னால் ஆற்றக்கூடிய பங்களிப்பை எப்போதும் வழங்கிக் கொண்டிருப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கைக்குண்டு பொதி மீட்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதூர் ஆறாம் குறுக்கில் உள்ள வீடொன்றிலிருந்து 3 சிறிய கைக் குண்டுகள் கொண்ட பொதியொன்று, நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர் நீரிணைப்பைப் பெறுவதற்காக நிலத்தை மண்வெட்டியால் தோண்டியபோது, குறித்த குண்டுப் பொதியைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதையடுத்து, மாவட்ட குற்றத் தடயவியல் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் குண்டுப் பொதியை மீட்டு செயலிழக்கச் செய்வதற்காக குண்டு செயலிழக்கச் செய்யும்பிரிவினருக்கு அறிவித்துள்ளனர். இதுதொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# செய்தித்துளிகள்

## விபத்தில் 13 பேர் காயம்!

நுவரெலியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியா விக்டோரியா பூங்காவிற்கு அருகாமையில் மோட்டார் பந்தய போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-5)

## 11 காட்டு பன்றிகளை கடத்திய நபர்கள் கைது!

இறைச்சியை பெற்றுக்கொள்வதற்காக 11 காட்டு பன்றிகளை ஏற்றி சென்ற லொறி ஒன்று திருக்கோவில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை திருக்கோவில்-சாகம பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

திருக்கோவில்-சாகம பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன சோதனையின் போதே குறித்த லொறியையும் அதனுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மூவரும் திருக்கோவில்-சாகம பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்களை அக்கறைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக திருக்கோவில் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

## ஆற்றில் மூழ்கி 2 இளைஞர்கள் பலி

நிட்டம்புவ கொன்கஸ்வத்த பிரதேசத்தில் நீராடச் சென்ற ஒரு குழுவைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கிய இளைஞர் மீட்கப்பட்டு வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிரிந்திஓய மஹல்ஒலுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர். மேலும், திஹாரிய பிரதேசத்தின் அத்தனகலு ஓய ஆற்றில் நீராடச் சென்றவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-5)

## வாகன நெரிசலை குறைக்க சுரங்கப்பாதை நிர்மாணம்

நீண்ட காலமாக கண்டி நகர பிரதேசங்களில் நிலவி வரும் வாகன நெருக்கடிகளைப் போக்குவதற்கு விரைவில் தென்னக்கும்பர பிரதேசத்திலிருந்து கெட்டம்பே வரையில் சுரங்கப்பாதை ஒன்றினை அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் இத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

குண்டகசாலை தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற வீதி அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனை தெரிவித்தார். (இ-5)

## பெண்ணை காப்பாற்ற முயன்ற விமானப்படை வீரர் மரணம்

கினிகத்தேனை பகுதியில் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற பெண்ணை காப்பாற்ற முயன்ற விமானப்படை வீரர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை, கினிகத்தேனை வழியாக ஓடும் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற 36 வயது மதிக்கத்தக்க பெண் நீரில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்ட விமானப் படை வீரர், அப் பெண்ணைக் காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த பெண்ணைக் காப்பாற்றிய அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பலியான விமானப் படை வீரர் கினிகத்தேனை - யட்டிபேரிய பிரதேசத்தை சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க எஸ்.டீ.மனுக்க இஷான் சில்வா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் தெளிகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என விசாரணைகளை மேற்கொண்டு வரும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை சம்பவத்தில் உயிர் தப்பிய குறித்த பெண் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5)

உ
சிவமயம்



# ஏழாலை அருள்மிகு கண்ண
# புனராவர்த்தன அஷ்டபந்
# மஹா கும்பாபிஷேக சிற



### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை

அருள் ஆட்சி புரிந்து வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளித்து கொடுத்துக் கொண்டிருக்கும் கண்ணகை அம்மனு க்கு பஞ்ச குண்ட பக்ஷ புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் சித்திரை மாதம் அத்த நட்சத்திரமும் புதன்கிழமையும் கூடிய சுப முகூர்த்த வேளை மகா கும்பாபிஷேகம் நிகழ அம்பிகை திருவருள் பாலித்துள்ளாள்.

ஆலயத்தல் ஏற்பட்டுள்ள பழுதுகளை திருத்தவும் வர்ணங்களைப் புதுப்பிக்கவும் மெய்யடியார்களின் வேண்டுதலை நிறைவு செய்யவும் சம்ரோஷன மகா கும்பாபிஷேகம் சிறந்ததாகும். இப் பிரதேசத்தல் பல ஆலயங்களின் மத்தியில் துவிதள விமானம் கொண்ட ஆலயமும் சிற்ப வேலைகளுடன் சிறப்புடன் காட்சி அளித்துக் கொண்டிருக்கும் ஆலயமாக விளங்குகின்றது. கண்ணகை அம்மாள் தாய்க்குத் தாயாக நின்று திருவருள் புரிந்து கொண்டிருப்பது இவ் ஆலயத்திற்கு பெருமையாகும். பல விருட்சங்களின் மத்தியில் சோலையுடன் கூடிய வீதியிலே அம்மன் வீற்றிருப்பது மிக மிக மேலானது. இவ்வூர் மக்கள் இவ்வாலயத்தைப் பேணிக் காத்து வழிபட்டு வருவது மட்டுமன்றித் திருப்பணிச் சபையும் இணைந்து திருப்பணிகளை நிறைவேற்றியும் வைத்துள்ளமை பெரும் பேறாகும்.

தொடர்ந்து இவ் ஆலயம் சீரும் சிறப்புமாக வருவோருககு வரம் கொடுத்து நோய் நொடி இன்றிக் காக்க வேண்டும் என்று பிரதம குருவாகிய அடியேன் பிரார்த்திக்கின்றேன்.

ஸர்வே ஜனகா சுகினோ பவந்து

**சாதக ஞானபானு சிவஸ்ரீ. ந.கேதீஸ்வரக்குருக்கள், பத்ததி வித்தக சிரோன்மணி கும்பாபிஷேக கிரிஜா ஜோதி, அநுராதபுரம்.**



### நல்லை ஆதீனகுருமுதல்வரின் ஆசிச்செய்தி

வேண்டுவோர்கெல்லாம் வேண்டும் வரம் அளித்து மக்களை தன் அபயக்கரத்தில் காத்து நிற்கும் ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்மாள் ஆலயம் இன்று பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் அருள எம்பெருமாட்டி அருள் பாலித்துள்ளாள். அந்த வகையில் அம்பாளின் இந்நிகழ்வில் சிறப்பு அமைய ஆசியுரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆலயங்கள் நிறைந்திருக்கும் ஏழாலையில் வாழும் அனைத்து மக்களுக்கும் எம்பெருமாட்டி இன்னல்களைத் தீர்த்து எம் இளைய தலைமுறையை சிறப்புடையதாய் பண்பாடு ,கலாசார சீலர்களாய் வாழ வழி செய்வாள் என்பது திண்ணம்.

அந்த வகையில் ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்மாள் ஆலய பஞ்ச குண்ட கும்பாபிஷேகம் சிறப்புற அமைந்திட எனது ஆசிகளைத் தெரிவிப்பதுடன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அனைத்து அடியார்களும் அம்பாளின் அருளாசியை பெற்றுய்யும் வண்ணம் பணிவாக வேண்டி அமைகின்றேன்.

சுபமஸ்து

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாச்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர் ,நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்**



### சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல அருள்மிகு கண்ணகை அம்பாள் தன்னிடம் அன்பு பூண்டு வாழும் அடியார்கள் அனைவருக்கும் நலம்பல நல்குவது உலகறியும்.

மேலும் நடைபெற இருக்கும் திருக் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நலமே நிறைவாகி அனைவருக்கும் நல்லவை நல்க பிரார்த்திப்போமாக.

**தம்பையா திருஞானசம்பந்தர்**
**ஏழாலை வடக்கு, ஏழாலை, தலைவர்,**
**அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்.**



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

சிவபூமி என்று சிறப்பிக்கப்படும் இலங்கை சக்தி வழிபாட்டின் தொன்மைக்கும் உரிய ஞான பூமியாகத் திகழ்கின்றது. இலங்கையில் வரலாற்றுத் தொன்மையும் வழிபாட்டுச் சிறப்பும் மிக்க சக்தி ஆலயங்கள் பல காணப்படுகின்றன. இலங்கையில் சக்தி வழிபாடு பல்வேறு நிலைகளில் நிகழ்கின்றது. சக்தி வழிபாட்டின் ஒரு நிலையாக இலங்கையின் சக்தி வாய்ந்த தெய்வமாக கண்ணகை அம்பாள் விளங்குகின்றாள்.அந்த வகையில் சைவமும் தமிழும் புராதன பெருமையுடன் விளங்கும் கண்ணகை அம்பாளுக்கு பல வருடங்களின் பின் மஹாகும்பாபிஷேகப் பெருவழிபாடு 20.04.2016 இல் நடைபெறுவதை அறிந்து மட்டற்ற மனநிறைவு அடைகிறோம். சிறு கோயிலாக கும்பநாயகியாக விளங்கிய இத் திருத்தலம் இன்று பெரும் கோயிலாகக் காட்சி தருகின்றது.

வற்றாப்பளைக் கண்ணகை அம்பாளோடு தொடர்புபட்டதான இவ் வாலயத்தில் பங்குனித்திங்கள் விழா தீமிதிப்புடன் பக்திப் பெருவிழாவாக நடைபெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இராசாபூசகர், கார்த்திகேசுபூசுகர், சுந்தரலிங்கம் பூசகர் என இவ்வால யத்தில் பூசகர் மரபு தொடர்ந்து வருகின்றது.

ஆலயத் திருப்பணிச் சபையினர் அல்லும் பகலும் உழைத்து இக் கும்பாபிஷேகத் திருப்பணியைச் சிறப்பாக செய்வதனைக் கண்டு இறையருளை வியக்கின்றோம். இக் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாகவும் இப் பணியில் ஈடுபட்டோர் நலம் பெறவும் அம்பிகையின் பொன்னான திருவடிகளை வாழ்த்தி வணங்குவோம்.

**பேராசிரியர் மா.வேதநாதன்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.**



### ஏழாலை கிராம சேவக அலுவலர் ரி.சசிகலா அவர்களின் வாழ்த்துச்செய்தி


தெய்வீகமும் திருவருளும் நிறைந்து விளங்கும் ஏழாலைப் பதியிலே பழைமையும் பெருமையும் நிறைந்த ஓர் ஆலயமாக இக் கண்ணகை அம்மன் கோயில் விளங்குகின்றது. எமது ஏழாலைக் கிராமமானது ஆலயங்களால் தன்னிறைவு பெற்ற கிராமம். அத்தன்னிறைவோடு நின்று நிலைக்கும் ஆலயங்களில் இவ்வாலயமும் ஒன்றாகும். சிறப்பான எழில்தரு மரங்களின் நிழல் சூழ்ந்த பகுதியிலே ஏழாலையின் முக்கிய மையங்கள், சேவை நிலையங்கள் என்பவை குவிந்துள்ள பகுதியில் பெருந்தமிழ்ச் சான்றோர் சி.வை.தாமோதரனார் பிறந்த எழிற் பூமியில் நூற்றாண்டுக்கு மேலாக இவ் ஆலயமும் நிலைத்துள்ளமை எமது மண்ணுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

சக்தி வழிபாடு என்பது இன்று உலகம் முழுமைக்கும் பொதுமைப்பட்ட வழிபாடாக வழிபடப்பட்டு வருகின்றது. அவள் தாயாக, தன்னை நாடி வரும் அன்பர்கள் நோய் தீர்க்கும் தயாள பகவதியாகவும் தனிப்பெருங்கருணைக் கடலாகவும் விளங்குகின்றாள். அத்தகைய சக்தித் தெய்வம் எமது ஊரின் கண்ணும் உறைந்து கண்ணகை அம்மனாக அருளளிப்பது எமது பேறாகும். நீண்ட காலமாக ஆகமம் சாராக் கிரியை நெறிகளோடு யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ளவர்களின் உடல், உள நோய்களைப் போக்கி வைத்த இவ்வாலயம் இன்று பெருவளர்ச்சி பெற்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

அதற்கமைய கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காணும் இவ்வாலயத்தின ஆன்மீக, சமயப் பணிகள் மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல அம்பிகை அருள்புரிய வேண்டுகின்றேன்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற யாம்
இத் தாய்த் தெய்வத்தின் தனிப் பெருங் கருணையைப்
பெற்று உய்தி பெறுவோமாக...

உ
அம்பாள் து



### திருக்குடத் திருமஞ்சன விழாக்காணும் ஏழால
### ஆலய வரலாறும் வ



சிவாகமங்கள் குறிப்பிடும் கும்பாபிஷேக வகைகளி
ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயத்
9.15 மணிமுதல் 10.45 வரை நடைபெறவிருக்கின்
ஆதரவில் சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக்குருக்களின் தலைமையில் கிரி
எண்ணெய்க்காப்பு 19.04.2016 செவ்வாய்க்கிழமை காலை 7 மண

தமிழையும் சைவத்தையும் வளர்த்த சி.வை.தாமோதரம்பிள்
சமீபமாகவுள்ள ''துவரை கலட்டி'' என்ற இடத்தில் அமைந்துள்
பழைமையினையும் மகிமையினையும் உடையது.

வற்றாப்பளை அம்மனே இங்கும் வந்து கோயில் கொண்டவள
வரலாறு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரு.தா
பார்வதி, தம்பர் தாமோதரம்பிள்ளை, வைத்திலிங்கம் செல்லர், வேலு
விசாகப் பொங்கல் திருநாளன்றைக்கு வற்றாப்பளை சென்று கண்
இற்றைக்கு ஒரு நூறாண்டிற்கு முன்னர் வழமைபோல இவர்கள் வற்
பாய்க்கப்பல் மூலம் வல்வெட்டித்துறையை நோக்கித் திரும்பிக்
வீசியதனால் படகு திசைமாறிச் சென்று வல்வெட்டித்துறையை
பிரயாணஞ் செய்தவர்கள் ஊண், உறக்கமின்றி மிகவும் கஷ்ட
வை.செல்லர் என்பவர் இனிமேல் வற்றாப்பளைக்குச் செல்வதில்லை

ஆனால் திரு.தா.இராசா அவர்கள் அம்மனை மறந்தாரில்லை. அ
எனும் இடத்தில் இவர் ஆட்டு மந்தைகளுக்குக் காவலாக இருந்த வேளை
ருக்குக் காட்சி கொடுத்து மறைந்தருளினாளாம். இதன்பின்னர் இப்
டிக்குச் சிறு கோயிலமைத்துக் கும்பம் வைத்து பூசை செய்து வரலா
வைகாசி விசாகப் பொங்கல் திருநாளன்று மாத்திரம் கோவிலின் கிழ
மற்றைய தினங்களில் தெற்கு வாயிற் புறமாகவே பூசகர் உட்சென்று
திங்களிலும் அம்பாளுக்கு விசேடமாகப் பூசை செய்து உருவாடுவார்.
அவை எண்ணில் அடங்காதவை. இம்மகானின் சமாதி உசத்தியோ

இவருக்குப் பின்னர் இவரது சகோதரரன திரு. கார்த்திகேசு பூச
பொறுப்பையேற்றுத் தமையனார் போலவே உருவாடுதல் முறை
முதல்முறையாக 1965 ஆம் ஆண்டு அம்பாளுக்குக் கும்பாபிஷே
சுப்பிரமணியர், நந்தகோபாலர்,வைரவர், வீரபத்திரர், நவக்கிர
கோயில்கள் எடுக்கப்பட்டன. இவரின் சமாதி ஆலயத்தின் வடக்குப்

கார்த்திகேசுப் பூசகருக்குப் பின்னர் அவரின் புதல்வர் திரு.சுந்
24.03.1986 அன்று இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.
(அமரர்) ஒரு பக்திப் பாமாலையைப் பாடியுள்ளார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் முக்கியமான விழாக்களில் பா
பொங்கலும் அலங்காரத் திருவிழாவும் குறிப்பிடத்தக்கன. பங்
நடைபெற்று வருகின்றது. இதில் தீமிதிப்பும் அன்னதானமும் சிறப்புக்
விளக்கேற்றி'' நடைபெறும் அலங்காரத் திருவிழாவின் போது
மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரே
நவராத்திரியும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தின் முக்கிய விழாக்கள், புனருத்தாரண வேலைக
அன்று பெரியார் திரு. தம்பையா திருஞானசம்பந்தர் அவர்களின் முய
தான சபை'' என ஒன்றும் அமைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு இன்றுவ
சபையின் முதல் தலைவர் அமரர் திரு.சுப்பிரமணியம் கனகராசா அ
பல இவ்வூர் இளைஞர்கள் தங்களை இணைத்துக்கொண்டு வேக

**முருகேசு கௌரிகாந்தன்,முதுநிலை விரிவுரையா**


## ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வாழ்த்துவோர்.

ஏஞ்சல் உணவகம்
கட்டுவன் றோட், தெல்லிப்பழை.

ஜீவன் மல்ரி சொப்

டினு மல்ரி சொப்- தெல்லிப்பழை

தர்ஷன் களஞ்சியம்

துர்க்கா மல்ரி சென்ரர்

சிறீஸ்கந்தராசா ஸ்ரோர்ஸ்

சுதன் ஆட்டோ சேவை

கண்ணகை அம்மன் ரான்ஸ்போர்ட்

சயந்தன் ஸ்ரோர்ஸ்

சிவம் மல்டி ஸ்பொட்- குப்பிளான்

பிரணிதா அரைக்கும் ஆலை

சிவகுரு
லெக்ரிக்கல் ஹாட்வெயர்

கேதீஸ் ஸ்ரோர்ஸ்


ரஞ்சித் உணவகம்

ன் பல்பொருள்
மருதனார்மடம்

சுரேஷ் ஸ்ரோர்ஸ்

காந்தி ஸ்ரோர்ஸ்
அன் அரைக்கும் ஆலை

# ...கை அம்பாள் தேவஸ்தான
# ...ந்தன பஞ்சகுண்டபக்ஷ
# ...றப்புமலர் -18.04.2016



உ

...பாள் துணை



## ...ம் ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் ...மாறும் வழிபாடும்

...ிக வகைகளில் ஒன்றான புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்
...ள் ஆலயத்தில் எதிர்வரும் 20.04.2016 புதன்கிழமை காலை
...றவிருக்கின்றது. தேவஸ்தான சபையைச் சேர்ந்தவர்களின்
...மையில் கிரியைகள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.
...ாலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.
...மோதரம்பிள்ளை அவர்கள் பிறந்து வளர்ந்த இடத்திற்கு மிக
...அமைந்துள்ள இவ்வாலயம் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட

...கொண்டவளாகக் கூறப்படுகிறது. இதனால் இதன் ஆரம்பகால
...றது. திரு.தாமோதரம்பிள்ளை இராசா, தாமோதரம்பிள்ளை
...சல்லர், வேலு சின்னத்தம்பி ஆகியோர் வருடாவருடம் வைகாசி
...சென்று கண்ணகை அம்மனைத் தரிசித்து வருவது வழக்கம்.
...இவர்கள் வற்றாப்பளைக்குச் சென்று அம்மனைத் தரிசித்துவிட்டு
...த் திரும்பிக்கொண்டிருந்தார்கள். இடைவழியில் புயற்காற்று
...ந்துறையை அடைவதற்கு மூன்று நாட்கள் எடுத்தது. அதிலே
...கெவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் மனமுடைந்த
...செல்வதில்லை என சத்தியம் செய்துவிட்டார்.
...தாரில்லை. அவ்வருடமே ஒருநாள் நள்ளிரவில் "இராமாவெளி"
...ருந்த வேளை, அம்பாள் ஒளி பொருந்திய மூதாட்டி வடிவெடுத்து இவ
...பின்னர் இப்பெரியார் "துவரை கலட்டி" என்ற இடத்தில் எம்பிராட்
...சய்து வரலாயினார். திரு.இராசாப் பூசகர் காலத்தில் வருடத்திலே
...காவிலின் கிழக்கு வாயிற்கதவு திறக்கப்பட்டு பூசை நடைபெறும்.
...ர் உட்சென்று பூசை நிகழ்த்தி வருவார். வாரத்தில் வெள்ளியிலும்
...டருவாடுவார். அம்பாள் மூலம் பல அற்புதங்களை நிகழ்த்தினார்.
...தி உசத்தியோடை மயானத்தில் உள்ளது.
...ர்த்திகேசு பூசகர் அவர்கள் (09.08.1910-18.09.1985) ஆலயப்
...தல் முறை மூலமாகத் தமது தொண்டை ஆற்றிவரலாயினார்.
...கும்பாபிஷேகம் செய்வித்தார். இவர் காலத்திலேயே விநாயகர்,
...ர், நவக்கிரகங்கள், சனீஸ்வரன் ஆகிய தெய்வங்களுக்கும்
...தின் வடக்குப் பிரகாரப் பக்கமாக உள்ளது.
...ல்வர் திரு.சுந்தரலிங்கம் அவர்கள் பூசகர் பொறுப்பை ஏற்றார்.
...டைபெற்றது. இவ்வாலயத்தின் மீது திரு.இ.கதிரைமலைநாதன்

...ாக்களில் பங்குனித் திங்கள் குளிர்த்தியும் வைகாசி விசாகப்
...க்கன. பங்குனிக்குளிர்த்தி 1942 ஆம் ஆண்டு தொடக்கம்
...மும் சிறப்புக்குரியவை. வைகாசி விசாகப் பொங்கல் "தண்ணீரில்
...வின் போது அம்பாள் வீதியுலா வர விரும்பவில்லை. வசந்த
... ஆகியோரே உலாவருவர். இவற்றைவிட திருவெம்பாவையும்

...ண வேலைகள் என்பவற்றைக் கவனிப்பதற்கென 08.06.1980
...ர்களின் முயற்சியால் "அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்
...பட்டு இன்றுவரை தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இச்
...கணகராசா அவர்களாவார். இச்சபையில் அண்மைக்காலத்திலே
...ாண்டு வேகமாகப் பணியாற்றி வருவதும் பாராட்டுக்குரியது.
...விரிவுரையாளர், யாழ். தேசியகல்வியியற் கல்லூரி.



### பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

தமிழர்களாகிய திராவிடர்கள் பெண்களுக்கு வழங்கிய உச்சமான மதிப்பும் மரியாதையும்தான் தாய்த்தெய்வ வழிபாடானது. கண்ணகி அல்லது கண்ணகையம்மன் வழிபாடு என் பது தமிழர்கள் கற்பு என்பதற்கு அம்மன் கொடுத்த முக்கியத்துவத்தின் விளைவு என்று தெரிகிறது. **பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்** என்ற குறளும் இதனை உறுதிசெய்கின்றது.

சைவசமயத்தில் கண்ணகி வழிபாடு காணப்படுவது எமது சமய நடைமுறைகளை ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் மேற்கொள்ள உதவும். இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ்ச் சைவர்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள கண்ணகையம்மன் ஆலய வழிபாட்டு முறைமைகள் இதனை நன்கு எடுத்துக்காட்டும். இப்போது கும்பாபிஷேகம் நடைபெறும் ஏழாலைக் கண்ணகை அம்மன் ஆலயமும் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையினை உடைய அற்புத ஆலயமாகும்.

இக்கண்ணகைக்கு அவளின் பக்தர்கள் ஆலயத் திருப்பணிச் சபையின் நெறிப்படுத்தலிலே பெருஞ்செலவில் கோவிலெடுத்து குடமுழுக்கை மேற்கொள்வது சமூகத்துக்கு முன்னுதாரணமானது. சமூக ஒற்றுமையினையும் நன்கு காட்டுகிறது. இத்திருப்பணியில் இணைந்து கொண்ட அனைவருக்கும் அம்பாளின் திருவருள் நன்கு கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன் இவர்களின் இப் பெருங்கைங்கரியங்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி

கண்ணகி வழிபாடுதான் சைவசமயத்தில் கண்ணகை அம்மன் வழிபாடானது. மானிடப் பெண் தனது ஆற்றல் மீதியால் தெய்வீக நிலையினை எய்திய பரிணாமம்தான் இது. சிங்கள மக்கள் இவளைப் "பத்தினித் தெய்யோ" என்று வழிபாடாற்றுகின்றனர். இவ்வழிபாட்டுக்கு மூல இலக்கியம் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் தமிழ்நாட்டின் தேசிய காப்பியம் என்று கூறப்படுவதுண்டு.

சோழநாட்டில் பிறந்த கண்ணகி பாண்டியநாடு சென்று நீதியை நிலைநாட்டி, அங்கிருந்து சேரநாடு சென்று தெய்வநிலையை அடைந்து பின்னர் இலங்கை வந்து, இலங்கையின் பல பாகங்களிலும் கோயில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள் என்பதுதான் வரலாறு. கண்ணகி வழிபாடு தோன்றிய தமிழ்நாட்டில் இன்று அவ்வழிபாடு அருகிய நிலையில் இலங்கையில் நிலை பெற்றுவிட்டமை. எமக்கும் பெருமை சேர்ப்பதே இவ்வழிபாட்டு நிலைபேற்றுக்கு ஏழாலையின் கண்ணகை அம்மன் அடியார்களும் பாரிய பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள் என்பதை உலகுக்கு நன்கு எடுத்தியம்புவதாகவும் நடைபெறவிருக்கும் திருக்குடத் திரு முழுக்குத் திகழ்கின்றது.

சமூக நிலையில் சிங்கள- தமிழ்மக்களுக்குப் பாலமாக விளங்கும் இவ்வழிபாடு இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ்மக்களையும் ஒருங்கிணைத்து, அவர்களை மேநிலைக்கு நெறிப்படுத்த வேண்டுமென்று அம்பாளை வேண்டிக்கொண்டு இப்பாரிய பணியில் ஈடுபட்டுள்ளவர்களது முயற்சிகளை உளமாரப் பாராட்டுவதுடன் கும்பாபிஷேகப் பெருவிழா இடையூறு எதுவுமின்றிச் சிறப்பாக நடைபெறவேண்டுமென்று எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.



### கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்தின் வடபால் விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் தெற்கு பிரதேசம் சைவத்தமிழ்ப் பாரம்பரியங்களை நிறைவாகக் கொண்டது. இப் பிரதேசத்தில் ஆலயங்களுக்குக் குறைவில்லை. நாளாந்தம் சடங்குகள், கிரியைகள், விழாக்கள் விரதங்கள் நிறைவாக நடைபெறுகின்றன. ஆலயங்களை நிலைக்களமாகக் கொண்டு கலை, பண்பாட்டுப் பாரம் பரியங்களைக் கடைப்பிடிக்கின்ற கிராமங்களுள் ஏழாலையும் ஒன்றாகும்.

ஏழு ஆலயங்களின் முதன்மையால் ஏழாலை எனப் பெயர் கொண்ட எம்மூரிலுள்ள அருள்மிகு கண்ணகை அம்பாள் கிராமிய வழிபாட்டின் மூலம் அனைவருக்கும் அருள் ஒளி பரப்பி வருகின்ற நீண்டகால அருட்பாரம் பரியத்தைக் கொண்டது. இவ் அம்பாளுக்கு 2016.04.20 ஆம் திகதி புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதனை முன்னிட்டு பத்திரிகையில் வெளிவருகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கமைய எம் முன்னோர்கள் ஊர்கள் தோறும் கோவில்கள் அமைத்து நித்திய, நைமித்திய பூசைகள் செய்தனர். நைமித்திய பூசைகளில் ஒன்றான மஹா கும்பாபிஷேகம் சமய, சமூக மேம்பாட்டின் அடித்தளமாகும். எங்கும் நிறைந்துள்ள இறை சக்தியைக் குறித்த திருவுருவத்தினுள் கொண்டுவரும் பெரும் முயற்சியாகும்.

நீண்டகால இடைவெளிக்கும் பின் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெறுகின்ற பெருஞ்சாந்தி எனப்படும் இக் கும்பாபிஷேகம் ஊர் மக்களின அயராத உழைப்பின் இறுதிப்பயன் ஆகும். இதன் மூலம் ஏழாலைக் கிராம மக்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் நிறைவாகக் கிடைக்க வேண்டும். இப் பெரிய கைங்கரியத்தை நிறைவேற்ற நீண்டகாலமாகப் பாடுபட்ட பரிபாலன சபையின் விடா முயற்சியைப் பாராட்டுவதோடு அம்பிகையின் அருட்கடாட்சம் அவர்களுக்கும் குறைவின்றிக் கிடைக்க வேண்டுமென அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு; அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

திரு.பொ.சந்திரவேல்,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், உடுவில்.



### யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் எமது இனத்தின் இரு கண்கள் எனலாம். சைவநெறி அன்பையும் அறத்தையும் போதித்து மனித வாழ்வுக்கு அர்த்தம் செறிந்த வாழ்க்கை முறையைக்காட்டி நிற்கின்றது. சமயத்தைப் பேணுவதில் ஆலயங்கள் முதன்மையானவை. ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையும் வளர்த்தெடுக்கப்படவும் வேண்டியவையும்.

இலங்கை மணித் திருநாட்டின் வடபுலத்தே யாழ்ப்பாணத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அழகுடனும் வற்றாத வளத்துடனும் அமையப் பெற்ற ஏழாலையில் அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயமானது கடந்த மூன்று தலைமுறைகளுக்கு முன்னதாக சைவப்பெரியார் இராசா என்பவரின் முயற்சியினால் தொடங்கப்பட்டு அவரின் பின் சிவத்திரு கார்த்திகேசு அவர்களால் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் கட்டியெழுப்பப்பட்டது. இங்குள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மனின் தீவிர பக்தர்கள் வருடந்தோறும் வடமராட்சி கரையோரங்களிலிருந்து படகுகள் மூலமாக பல கஷ்டங்களை அனுபவித்து முல்லைத்தீவு பெருங்கடலினூடாகப் பயணித்து வற்றாப்பளை அம்மனைத் தரிசித்து அம்மனின் அருளைப் பெற்று வருவது காலங் காலமான மரபாக இருந்துள்ளது. கடற்பயணங்களின் போது ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்க இங்கு ஏழாலையில் வாழ்ந்த தனது பக்தரொருவரின் கனவில் தோன்றிய கண்ணகை அம்மன் ஏழாலையிலேயே தனக்கொரு ஆலயமமைத்து வழிபடுமாறு கூறியதையடுத்து இவ் ஆலயம் நூறாண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுத் தொடர்ச்சியாக கண்ணகை அம்மன் வழிபாடு நடைபெற்று வந்துள்ளதாக அறிய முடிகின்றது.

யுத்த சூழ்நிலைகளால் இவ்வாலயமானது சரிவரப் பராமரிக்க முடியாது போனதாயினும் 2011 ஆம் ஆண்டு மீண்டும் ஆலய புனருத்தாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுத் தற்போது 20.04.2016 இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக பெரியார்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் மஹா கும்பாபிஷேக விழா மிகவும் சிறப்புற அமையப் பிரார்த்திப்பதோடு கண்ணகை அம்பாளின் அருள் ஆசிகளை அனைவரும் பெற்று நிறைவான வாழ்வை வாழ்வோமென வாழ்த்துகின்றேன்.

த.சித்தார்த்தன்
யாழ். மாவட்ட பா.உறுப்பினர்.

### உடுவில் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

*ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்ட மெல்லாம்*
*பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்கக்*
*காத்தாளை அங்கையில் பரிசாங்குசமும் கருப்பு வில்லும்*
*சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே*



எனது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அமைதியும் இயற்கை அழகும் கொண்ட ஏழாலைக் கிராமத்தின்கண் அம்பாள் வழிபாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ள ஆலயம் தான் ஏழாலை அருள்மிகு கண் ணகை அம்பாள் ஆலயமாகும்.சிவபெருமானின் வேறாகாத திருவருளே சிவசக்தி. இறைவனின் அருளையே பெண்மை உருவாகவும் தாய்மைத்தன்மையாகவும் கொண்டு பண்டைக்காலந்தொட்டு வழிபட்டு வருகின்றோம். மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது என்பதே வழிபாட்டின் சாராம்சமாகும். ஏழையிடமும் பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் இறைவனைக் காண்பவனே உண்மைப்பக்தன் என்ற இச்செய்தியையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

மேற்படி ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் மிகவும் பக்திபூர்வமாக நடைபெற இருக்கின்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்பெருஞ்சாந்தி விழாவை நடத்த வேண்டும் எனத் திருவுளங்கொண்டு பலவழிகளிலும் ஆக்கமும் ஊக்கமுமளித்த கண்ணகை அம்பாள் தேவஸ்தான சபையினருக்கும் மற்றும் அம்பாளின் அடியார்கள் மற்றும் ஏழாலையம்பதி மக்கள் அனைவருக்கும் அம்பாளின் திருவருள் கடாட்சமும் அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கப்பெற்று நலமாக நீடூழிவாழ அம்பாளின் பாதக்கமலங்களை வணங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வாழ்க...

திரு.முத்துலிங்கம் நந்தகோபாலன்,
பிரதேச செயலாளர், உடுவில்




### ஆலயத்தின் பூசகர் திரு. கார்த்திகேசு சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

திருக்குட முழுக்குக் காணும் எங்கள் குலதெய்வமாகிய கண்ணகை அம்மன் வழிபாடு **அவனருளாலே அவன் தாள் வணங்கி** என்ற மணிவாசகரின் அருள் வாசகத்திற்கு முன்னுதாரணமானது. இறைவனை எவ்வாறும் வழிபாடு செய்யலாம் என்று தவத்திரு சிவயோக சுவாமிகள் கூறியது போலவே எமது கண்ணகை அம்மன் வழிபாடு இங்கே உருப்பெற்று இன்று ஆகமம் சார்ந்த ஆலய அமைப்பு மற்றும் கிரியைகள் சார்ந்ததாக பரிணாமம் பெற்றுள்ளது.

முதலில் எமது பெரிய தந்தையாராகிய இராசாப்பூசகரில் தான்அம்பாள் தங்கி நின்று அக் காலத்தில் பலருக்கும் தரிசனம் செய்யும் வாய்ப்பருளி அவர்களின் இன்னல்களைத் தீர்த்தாள். அதன் பின் அவரின் சகோதரரும் எனது தந்தையாருமாகிய திரு. கார்த்திகேசு அவர்கள் இராசாப் பூசகர் வழியில் அம்பாளுக்கு எனவே தம்மை அர்ப்பணித்து பெருமுயற்சியெடுத்து அம்பாள் ஏனைய பரிவார தெய்வங்களுடன் வீற்றிருந்து அருள்புரிய ஒரு கருவியாகத் திகழ்ந்தார். அத்தகையவருடன் கூட இருந்த தவப்பயனால் எமக்கும் அம்பாளுக்கும் பூசை புரியும் மேன்மை கொள் சந்தர்ப்பங்கிட்டியது. ஐந்தாண்டுகட்கு மேலாக பாலாலயத்தில் குடிகொண்டிருந்த அம்பாளும் பரிவார மூர்த்திகளும் இப்போது முன்னையதிலும் பார்க்கச் சிறந்ததாக ஆலயத்தில் குடிகொண்டருள் புரியத் தற்போது திருவருள் கைகூடியிருக்கின்றது. இதற்கு அம்பாளின் அருட்பார்வைக்குட்பட்ட தேவஸ்தான சபையினரும் எமது பிரதேச இளைஞர்களும் ஏனைய அம்பாளின் அடியார்களும் மேற்கொண்ட தீவிரமும் அர்ப்பணிப்புமே காரணமென்று தெரிகின்றது. இவ்வனைவருக்கும் அம்பாளின் திருவருட்கடாட்சம் கிடைப்பதாக.

(4219)

# எமக்கு வீடு வேண்டும்



நிரந்தர வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் தமது பெயர் கள் உள்ளடக்கப்படவில்லை என குடிசைகளில் வாழும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறுபாதிப்புக்குள்ளான தாக தெரிவிக்கப்படும் ஐந்து பயனாளிகள் தொடர்பான விபரம் முதற் கட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கரவெட்டி தெற்கு ஜே/365 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட ஐந்து பயனாளிகளின் பெயர்களே இவ்வாறு இணைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

க.தியாகராசா, வ.நாகேந்திரம், க.சீனியன், வ.விஸ்வராசா, வ.தண்டாயுதம் ஆகியோருக்கே பெயர் பட்டியல் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் க.தியாகராசா என்பவரின் வீடு 1987 ஆம் ஆண்டு வன்செயலால் சேதமடைந்தது. இதன் பின்னர் உறவினர் வீடுகளில் அடிப்படை வசதி இல்லாமல் வாழ்ந்து வருவதாகவும் தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படாமை குறித்து 30. 03. 2016 அன்று யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இம்முறைப்பாடு 04.04. 2016 அன்று HRC/JA/079 எனும் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. வடமாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. வ.விஸ்வராசா என்பவரும் வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தற்போது கரவெட்டியில் தங்கியுள்ளார். எனவே நிரந்தர வீடுகள் இன்றி வசிப்போருக்கும் உறவினர்களின் வீடுகளில் வசிப்போரும் இவ் வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டமை வேதனையளிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (இ-60)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார் மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 100 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 | 80 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 100-140 | 120 | 100 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 100 | 60 | 60 | 100 | -50 |
| கரட் | 100 | 100 | 80 | 80-200 | 160 | 80 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 20 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 35 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 80 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 130 | 100 | 120 | 120 | 200 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 80 | 120 | 70 |
| கறிமிளகாய் | 80 | 100 | 50 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 300-500 | 400 | 400 |
| போஞ்சி | 250 | 200 | 100 | 120 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 20 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 270 | 400 | 300 | 300 | 600 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 20-30 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 140 | 250 | 100 | 140 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 220 | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 30 | 50 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ்காந்தி படுகொலை 158

ராஜீவ்காந்தியுடன் மரணம் அடைந்தவர்களில் அந்தப் பெண்ணைத் தவிர அனைவரும் அடையாளம் காணப்பட்டனர். அந்தப் பெண் மட்டும் யார் என்று தெரியவில்லை. காரணம் குண்டு வெடித்ததில் அந்தப் பெண்ணின் அடி வயிறு அப்படியே பிய்த்துக் கொண்டு போயிருந்தது. அவளது தலை தனியே துண்டிக்கப்பட்டு 15 அடி தூரத்தில் கிடந்தது. கையும் துண்டிக்கப்பட்டிருந்தது.

அந்த பெண் வெடிகுண்டைத் தன் இடுப்பில் மறைத்து கட்டியபடி வந்து இருக்க வேண்டும் என்றும் தற்கொலைப் படையைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும் என்பதும் தெரிய வந்தது.

அவள் தன் இடுப்பில் வெடிகுண்டை கட்டி வைத்திருந்து 'வெடிக்கச் செய்தால்தான் அவளது வயிற்றுப்பகுதி சின்னா பின்னமாகச் சிதறியும் தலை துண்டாகியும் இறந்திருக்கிறாள் என்று கண்டறியப் பட்டது.

**சி.பி.ஐ.விசாரணை**

ராஜீவ்காந்தி கொல்லப் பட்டபோது தமிழ்நாட்டில் ஆளுனர் ஆட்சி நடந்தது. இந்தச் சம்பவம் நடந்ததற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான் தி.மு.க. அரசை சந்திர சேகரின் அரசு டிஸ்மிஸ் செய்திருந்தது. அப்போது தமிழ்நாட்டில் பீஷ்மநாராயணசிங் ஆளுனராக இருந்தார்.

ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரணை நடத்த மத்திய புலனாய்வுத்துறை பொலிஸார் (சி.பி.ஐ.) விசாரணைக்கு உத்தர விடப் பட்டது. சி.பி.ஐ. கூடுதல் இயக்குனர் கார்த்திகேயன் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக்குழு அமைக்கப்பட்டது.

கொலை நடந்த இடத்தில் ஒரு கமரா கண்டெடுக்கப்பட்டது. அதை இயக்கிய புகைப்படகாரர் ஹரி பாபுவும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

ராஜீவ் நிகழ்சிகளை புகைப்படம் எடுக்க கொலையாளிகளே அவரை ஏற்பாடு செய்திருந்தனர். கண்டெடுக்கப்பட்ட கமராவில் இருந்த புகைப் படங்கள் கொலையாளிகளைக் காட்டிக் கொடுத்தன. வெடிகுண்டுப்பெண்ணின் பெயர் தனு என்பது பின்னர் தெரிய வந்தது.

**ஒற்றைக்கண் சிவராசன்**

பதிவாகியிருந்த படங்களில் குர்தா, பையாமா அணிந்து பத்திரிகை நிபுணர்போல காட்சியளித்த இன்னொரு நபரும் காணப்பட்டார்.

அவன் தான் தனுவைக் கொண்டு வந்து ராஜீவ் காந்தியைக் கொலை செய்தான் என்பது உறுதி செய்யப்பட்டது.

அவனைப்பற்றிய சில துப்புகள் கிடைத்தன. அவனுடைய பெயர் ஒற்றைக்கண் சிவராசன். 1983 ஆம் ஆண்டு டெலோவில் இருந்தவன்.

மனக்கசப்பு ஏற்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்புக்குத் தாவினான். புலன் விசாரணையில் ராஜீவ்காந்தி கொலையில் ஒவ்வொரு புதிராக அவிழத் தொடங்கியது.

நாட்டையே உலுக்கிய ராஜீவ்கொலை வழக்கில் பிரபாகரன் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப் பட்டார்.

புகைப்படக்காரர் ஹரி பாபு ராஜீவ்காந்தியோடு சேர்ந்து உயிரிழந்து விட்டாலும்கூட இந்தக் கொலை வழக்கில் துப்பு துலக்க அந்த கமராதான் உதவியது.

கொலை நடந்த நாளில் ஒற்றைக்கண் சிவராசன், தனு, நளினி, சுபா இன்னொரு பெண் ஆகியோர் அடங் கிய கொலைக்குழு ஸ்ரீ பெரும்புத்தூர் சென்றது. அங்கு அவர்கள் 2 குழுக்களாகப் பிரிந்தனர்.

ஒற்றைக்கண் சிவராசனும் தனுவும் புகைப் படக்காரர் ஹரிபாபுவுடன் மேடை அருகே நின்று கொண்டனர்.

நளினி, சுபா மற்றும் இன்னொரு பெண் (இவள் குண்டு வெடிப்பில் பலியாகி விட்டாள்) ஆகியோர் மேடைக்கு முன்னால் தரையில் அமர்ந்து இருந்தனர்.

ராஜீவ்காந்தி மேடைக்கு அருகே வந்த சிறிது நேரத்தில் சிவராசன், சுபா ஆகியோர் அந்த இடத்தை விட்டு அகன்றனர். சிறிது நேரத்தில் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டார்.

**நளினி கைது**

இது தொடர்பாக 1991 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் திகதி நளினியின் சகோதரன் பாக்கியநாதன், தாய் பத்மா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அந்த வழக்கில் முதலில் கைதானவர்களும் அவர்களே.

14 ஆம் திகதி நளினியும் அவருடைய கணவர் முருகனும் பிடிபட்டனர்.

ஜுன் 28 ஆம் திகதி சிவராசன், சுபா மற்றும் அவர்களின் கூட்டாளிகள் டாங்கர் லொறி மூலம் பெங்களூருக்குத் தப்பிச் சென்றனர்.



தன் அருகே மனித வெடிகுண்டு இருப்பதை அறியாத ராஜீவ், கோகிலா படித்த கவிதையைக் கேட்டு மகிழ்கிறார்

(தொடரும்)

# சம்பூரில் திரவ எரிவாயு மின் திட்டம்!

## இந்தியா, ஜப்பானுடன் பேச அரசு முடிவு

(கொழும்பு)

**சம்பூரில், அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள, அனல் மின் நிலையங்களுக்குப் பதிலாக, இயற்கை திரவ எரிவாயு மின் நிலையங்களை அமைப்பது தொடர்பாக இந்தியாவுடனும் ஜப்பானுடனும் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்தவுள்ளது.**

இலங்கை மேலதிக அனல் மின் நிலையங்களை அமைக்கக் கூடாது என்று சக்தி மற்றும் சூழலியல் நிபுணர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து வரும் நிலையிலும் அனல மின் திட்டத்துக்கு சம்பூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையிலுமே, இந்த மாற்றுத் திட்டம் குறித்து அரசாங்கம் பேச்சுக் களை நடத்தவுள்ளது.

திரவ எரிவாயு மின் திட்டம் மற்றும் ஏனைய சாத்தியமான நிலையான தீர்வுகளை நோக்கி, நகர முடியும் என்று அரசாங்கம் நம்புவதாக, இலங்கையின் மின்சக்தி அமைச்சின் செயலர் சுரேன் பதேகொட தெரிவித்துள்ளார.

ஜப்பானின் அனல் மின் திட்டத்தை திரவ எரிவாயு மின்திட்டமாக மாற்ற முடியும் என்றும் ஆனால், உலகளவில் திரவ எரிவாயுவின் கேள்வி அதிகரித்துள்ளதால், அதன் விலை பெருமளவில் உயரக்கூடும் என்றும், அது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே நீண்டகால நோக்கில் 100 வீதம் மீள்சுழற்சி செய்யத்தக்க நிலையான திட்டம் ஒன்றையே பின்பற்ற வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# இலங்கை ஆதிவாசிகள் கிரிக்கெட்டில் ஆர்வம்;வெளிநாடு செல்வதற்கு வாய்ப்பு

வெளிநாடுகளிலுள்ள ஆதிவாசிகளுடன் கிரிக்கெட் விளையாடுவதற்கு தங்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு இலங்கை ஆதிவாசிகள் விளையாட்டுத்துறை அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுடன் தாங்கள் கிரிக்கெட் போட்டியை நடத்த தயாராகவுள்ளதாக ஆதிவாசிகளின் கிரிக்கெட் குழுத் தலைவரும் தம்பான ஆதிவாசிகளின் உரிமைகளுக்கான மத்திய நிலையத்தின் பிரதானியுமான ஊரு வரிகேலாகே ஹீன்பண்டா அத்தோ தெரிவித்துள்ளார்.



தங்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கமோ, தனியார் நிறுவனங்களோ முன் வருமாயின் அதனையிட்டு தாங்கள் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தங்களது கிரிகெட் துறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு விளையாட்டுத்துறை அமைச்சரிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தண்டிக்கும் அதிகாரம் வழங்குமாறு கோருகின்றது கோப் ஆணைக்குழு

தண்டிக்கும் அதிகாரத்தை வழங்குமாறு பொது முயற்சியாண்மை குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு (கோப் ஆணைக்குழு) கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை ஆணைக் குழுவின் அமரவுகளின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதியொருவரை பிரசன்னமாகச் செய்யுமாறு ஆணைக்குழுவின் தலைவர் சுனில் ஹந்துனெத்தி, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.எழுத்து மூலம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டின் சட்டத்தையும் அரசியல் அமைப்பினையும் மீறி செயற்படும் அரச நிறுவன அதிகாரிகளை ஆணைக் குழுவிற்கு அழைத்து விசாரணை நடத்தி நேரடியாகவே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கோப் ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தி வரும் அரச நிறுவனங்களில் பல்வேறு நிதி மோசடிகள் மற்றும் சட்டவிரோத நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் போது சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் பிரசன்னமாகியிருந்தால் தண்டனை குறித்த தீர்மானங்களை எடுப்பது இலகுவாக அமையும் என்ற காரணத்தினால்இவ்வாறுயோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சபாநாயகர் கரு ஜயசூரிய சட்டமா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தி விசாரணைகளின் போது சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதி ஒருவரையும் விசாரணைகளில் பிரசன்னமாக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக நாடாளுமன்ற வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# தலைக்கு எண்ணெய் தடவும் தேசிய வைபவம் ஜனாதிபதி தலைமையில்



(கொழும்பு)

புதுவருட சம்பிரதாயங்களின் வண்ணம் தலைக்கு எண்ணெய் தடவும் அரச வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பயாகல சிறீ புஷ்பாராம விகாரையில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்றது.

மத அனுட்டானங்களின் பின்னர் தலைக்கு எண்ணெய் தடவும் சம்பிரதாயத்தை நிறைவேற்றி நேற்று முற்பகல் 10.41 மணிக்கு அமையப்பெற்ற சுப நேரத்தின் போது பெந்தர, வலல்லாவிட்ட கோரளைகளின் தலைமைத் தேரர் திரிபிட்ட காச்சார்ய சங்கைக்குரிய மலேகொட நந்த நாயக்க தேரர் ஜனாதிபதியின் தலைக்கு எண்ணெய் தடவினார்.

இதன்போது மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதி உள்ளிட்ட பொதுமக்களை ஆசீர்வதித்தனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### எல்லாம் நன்மைக்கே!

பெரியவர்கள் அடிக்கடி கூறும் சித்தாந்தம் இது.

ஓர் உயிரிழப்பைக்கூட இந்தச் சித்தாந்தத்தின் படி எடுத்துக் கொள்ள முடியுமா?

முடியாது. இருந்தாலும் இப்படி ஒரு Positive approach சொல்லப்படுகின்ற அனுகூல அணுகுமுறையுடன் உலகில் வாழாவிட்டால் வாழ்க்கையில் சலிப்பும் விரக்தியும் வேதனையும் தான் மிஞ்சும். ஏன் – வாழ்வதே கடினமாகி விடும்.

இந்தச் சித்தாந்தத்தைக் கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. அதிலுள்ள அர்த்தத்தை எண்ணிப்பார்ப்போம்.

பரீட்சையில் தோல்வி அடையும் இரு மாணவர்களுள் ஒருவர் அடுத்த வருடம் தேறிவிடுவோம்என்ற நம்பிக்கையுடன் படிக்கத்தொடங்குகிறார்.மற்றொரு மாணவரோ உலகில் எவருக்குமே நேராத அவமானம் தனக்கு நேர்ந்து விட்டதாக எண்ணுகிறார். தனக்கும் படிப்புக்கும் சரிப்பட்டு வராது என்ற முடிவுக்கு வருகிறார்.

பாதிப்பு ஒன்றுதான். ஆனால் இருவரும் அதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் எவ்வளவு வேறுபாடு பார்த்தீர்களா?

மனதின் அபார ஆற்றல் இது. ஏன்– மோசமான தன்மை என்று கூடச் சொல்லலாம். நடப்பது எதுவாக இருந்தாலும் நாம் எப்படி எடுத்துக் கொள்கின்றோமா அந்தக் கோணத்திலேயே அது வேலை செய்கிறது.

நமக்கு துன்பங்களே நேராத வண்ணம் காலத்தை ஓட்டி விட வேண்டும் என்று விரும்புவது எத்தகைய பேதமை?

எந்த ஒரு நன்மையிலும் ஒரு தீமை இருக்கிறது. நன்மை இன்று நாம் நினைக்கும் 99 சதவீதங்களில் தீமை இருக்கத்தான் செய்கின்றன. நன்மையின் சுகத்தை அனுபவிக்கும் நமக்கு அதனால் விளைய்ப் போகும் தீமைகள் பற்றி எண்ணத்தோன்றுவதில்லை விரும்புவதில்லை.ஆனால் நீறு பூத்த நெருப்பெனவும் இலைமறை காயெனவும் நிச்சயம் இருக்கும்.. அது இனிப்பு கெடுதலைத் தருவது போன்றது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதே போல்

எந்த ஒரு தீமையிலும் நன்மை அல்லது நன்மை நிச்சயம் ஒளிந்து கொண்டிருக்கும்– கசப்பு நன்மையைத் தருவதைப்போல் இவற்றை சிந்தித்துக் கண்டுபிடிக்க வேண்டும் என்று மறைமுகமாக வற்புறுத்துவதே மேற்கூறிய சித்தாந்தம்.

நட்டத்தில் இலாபம் என்னும் என்னுடைய பழைய கட்டுரையை படித்துப் பார்ப்பதோ நினைவுக்குக் கொண்டு வருவதோ உபயோகமாக இருக்கும். பெரியவர்கள் அப்படிச் சொல்லிச் சென்றதன் பொருள் புரியும்.

நமக்கு சோதனைகள் ஏற்படும் போதெல்லாம் இந்த சித்தாந்தத்தை ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டு மேற்கொண்டு ஆக வேண்டிய வேலைகளைப் பார்ப்பது தான் உத்தமமான வழி.

லேனா தமிழ்வாணன்




# ஜோஜியும் பூனைகளும்






ஜோஜி குட்டிக்குப் பாடம் படிப்பதைவிட படம் வரைவது ரொம்பப் பிடிக்கும். அதுவும் பூனைகள் வரைவது என்றால் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். எப்போதும் பூனைகளைத்தான் வரைந்து கொண்டிருப்பான். சின்ன பூனை, பெரிய பூனை, குண்டு பூனை என அவனைச் சுற்றி எல்லாமே பூனைகள்தான்.

அன்றும் அப்படித்தான். வகுபறையில் பாடத்தை கவனிக்காமல் பூனை வரைந்து கொண்டிருந்தான் ஜோஜி. கோபமடைந்த ஆசிரியர் ஜோஜியின் அப்பாவை வரவழைத்தார். அவனைப் பற்றி புகார் சொன்னார். ஜோஜியின் அப்பா அவனைப்பள்ளியை விட்டு நிறுத்தினார். அவருக்குத் தெரிந்த விவசாய நண்பரிடம் அவனை வேலைக்கு அனுப்பினார்.

அங்கேயும் ஜோஜி பூனைகளை விடவில்லை. வயலில் கீழே கிடந்த குச்சியை எடுத்துத் தரையில் பூனைகளை வரைந்தான். விவசாயிக்குக் கோபம் வந்தது. ஜோஜியை இனி மேல் வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

கவலையுடன் வீட்டுக்கு வந்த ஜோஜியை புத்த மடத்தில் சேர்த்தார் அவனது அப்பா. அங்கேயும் சுவர் முழுக்க பூனைகளை வரைந்தான் ஜோஜி. பொறுமையிழந்த மடத் தலைவர், ஜோஜியை அழைத்தார். "நீ திருந்தணும்னுதான் உங்கப்பா இங்க அனுப்பினார். ஆனா நீ திருந்தறா மாதிரி தெரியலையே. இனிமே உனக்கு இங்க இடமில்ல" என்று சொல்லி அவனை வெளியே அனுப பிவிட்டார்.

ஜோஜிக்கு என்ன செய்வதென றே தெரியவில்லை. சோர்வுடன் மடத்தை விட்டுக் கிளம்பினான். களைப்பாக இருந்ததால் வழியில் இருந்த பாழடைந்த புத்த விகாரையில் இரவு தங்கிவிட்டுப் பிறகு வீட்டுக்குச் செல்லலாம் என நினைத்தான்.

அங்கேயும் பூனைகள் அவனை விடவில்லை. அங்கிரு ந்த திரைச்சீலைகளில் கரித்து ண்டால் பூனைகளை வரைந தான். பிறகு சிறிய மேடையில் ஏறிப் படுத்துக்கொண்டான். நள்ளிரவில் யாரோ தட்டுமுட்டு சாமான்களை உருட்டும் சத்தமும் கேட்டது. கண் ணை இறுக்கமாக மூடிக்கொண்டு தூங்கினான் ஜோஜி.

மறுநாள் காலை கண் விழித்த போது அந்த புத்த விகாரைக்குள் பெரிய எலி ஒன்று இறந்து கிடந்தது. அதைப் பார்த்த ஜோஜிக்கு அதிர்ச்சி. எலி இறந்த செய்தி ஊர் முழுவதும் பரவியது. அனைவரும் இறந்து போன எலியைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

காரணம் இத தனை நாட்களாக அவர்களது வயலை நாசம் செய்த எலிதான் அது. எலி எப்படி இறந்தது என ஜோஜியிடம் கேட்டார்கள். தனக்கு எதுவும் தெரியாது என்றான்.

அப் போதுதான் அவன் வரைந்த பூனை ஓவியத்தைக் கிராம மக்கள் பார்த்தனர்.

அதில் ஒரு பூனை மட்டும் ஜோஜி வரைந்த இடத்தில் இருந்து திசை மாறி அமர்ந்திருந்தது. அந்த அதிசயத்தைக் கண்ட மக்கள் ஜோஜியைக் கொணடாடி னார்கள். அவனுடைய பூனைகளையும் பாராட்டினார்கள்.

ஜோஜிக்கு எதுவுமே புரியவில்லை. ஆனால் அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. தன்னுடைய பூனைகளை மற்றவர்கள் பாராட்டுவதை இப்போது தான் பார்க்கிறான்.

ஜோஜி இப்போதும் சின்ன பூனை, பெரிய பூனை, குண்டு பூனைகளை வரைந்து கொணடிருக்கிறான்.

04.2016
18

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1025 - போலெஸ்லாவ் குரோப்றி போலந்தின் முதல் மன்னனாக முடி சூடினான்.
- 1797 - நியுவியெட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை வென்றனர்.
- 1835 - ஆஸ்திரேலியாவில் மெல்பேர்ண் நகரம் அணிமக்கப்பட்டது.
- 1880 - மிசூரியில் வீசிய புயல் காற்றினால் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- 1906 - அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நகரில் 3,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1909 - ஜோன் ஆஃப் ஆர்க் பத்தாம் பயஸ் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டாள்.
- 1912 - கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூ யோர்க் வந்து சேர்ந்தனர்.
- 1930 - பிபிசி வானொலி தனது வழமையான செய்தி அறிக்கையில் இந்நாளில் "எந்த செய்திகளும் இல்லை" என அறிவித்தது.
- 1941 - ஜெர்மனியப் படைகள் ஏதன்சை நெருங்கும் போது கிறீஸ் பிரதமர் அலெக்சாண்ட்ரொஸ் கொரிசிஸ் தற்கொலை செய்து கொண்டார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: டோக்கியோ நகர் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் ஹெலிகோலாந்து என்ற சிறு தீவின் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.
- 1949 - அயர்லாந்து குடியரசு சட்ட்ம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1954 - கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1958 - இலங்கையில் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவடைந்தது.
- 1980 - சிம்பாப்வே குடியரசு (முன்னாள் ரொடீசியா) அமைக்கப்பட்டது. கனான் பனானா அதன் முதல் ஜனாதிபதியானார்.
- 1983 - லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 63 பேர் கொல்லப்பட்டனர்.
- 1993 - பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இசாக் கான் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையைக் கலைத்தார்.
- 1996 - லெபனானில் ஐ.நா. கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 106 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள

- 1838 - பவுல் எமில் புவபோதிரான், பிரெஞ்சு வேதியியலாளர. (இ. 1912)
- 1858 - தோண்டோ கேசவ் கார்வே, இந்தியக் கல்வியாளர். (இ. 1962)
- 1858 - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர. (இ. 1917)
- 1884 - ஜான் ஆன்வெல்ட், எசுத்தோனிய அரசியல்வாதி. (இ. 1937)
- 1941 - மைக்கல் டேனியல் ஹிக்கின்ஸ், அயர்லாந்தின் 9 ஆவது அரசுத்தலைவர்
- 1967 - மரியா பெல்லோ, அமெரிக்க நடிகை, பாடகி

### இறப்புகள்

- 1859 - தாந்தியா தோபே, இந்திய இராணுவத் தளபதி. (பி. 1814)
- 1916 - ஜி. சுப்பிரமணிய ஐயர், இந்திய இதழியலாளர். (பி. 1855)
- 1955 - ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், செருமனிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1879)

### சிறப்பு நாள்

- ஈரான் - இராணுவ நாள.
- சிம்பாப்வே - விடுதலை நாள். (1980)
- **உலக மரபுடைமை நாள் (உலக பாரம்பரிய நாள்)**

### உலக பாரம்பரிய தினம்

உலகில் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு இனமும் பல்வேறு வகையான பாரம்பரிய பெருமைகளை வளர்ந்து வரும் வேகமான காலத்தில் காப்பதற்காக ஏப்ரல் 18 ஆம் திகதியை உலக பாரம்பரிய தினமாக (World Heritage Day) அறிவிக்கப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு துனிசியாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஏப்ரல் 18 ஆம் நாள் சர்வதேச நினைவிடங்கள் (International Day for Monuments and Sites) தினமாக கொண்டாட பரிந்துரைத்தது. அடுத்த ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் இதனை அங்கீகரித்தது. இதுவே பின்னாளில் உலக பாரம்பரிய தினமாக மாறியது.

# தங்கத்தில் பாதைகள் அமைத்தாலும் கல்விக்கொள்கையே நாட்டுக்கு முக்கியம்

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தங்கத்தினால் பாதைகள் அமைக்கப்பட்டாலும் சரியான முறையில் கல்விக் கொள்கைகள் வகுக்கப்படாவிட்டால் அந்த நாட்டில் பயனில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஹொரகொல்ல பண்டாரநாயக்க ஞாபகார்த்த நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தங்கத்தில் பாதைகள் அமைத்தாலும் கல்வி முறைமை கிரமமாக இல்லாவிட்டால் அந்தநாடு வெகு தூரம் செல்லாது.

தேர்தல்களில் ஆட்சி மாற்றம் ஏற்படும். அநேகமாக அரசாங்கங்கள் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியது. எனது அரசாங்கம் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியது.

நாம் ஆட்சிக்கு வந்தது எங்களது அடிமடிகளை நிரப்பிக்கொள்ள அல்ல, நாட்டை நல்ல நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்ற நோக்கிலாகும். எனினும், 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலபபகுதியில் கல்வித் துறை பாரியளவில் பின்னடைவை எதிர்நோக்கியது.

தற்போதைய அரசாங்கம் கல்வியின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு கல்விக்கான ஒதுக்கத்தை ஆறு மடங்கினால் உயர்த்தியுள்ளது.

எனினும் பணம் மட்டும் செலவழித்து பயனில்லை பணத்தை எவரேனும் களவாடக்கூடும்.

கல்வித்துறையின் செயற்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# துமிந்தவுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

## பந்துல ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

பதிவுத் தபாலில் விசேட கடிதமொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்து இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக பந்துல தெரிவித்துள்ளார்.

சொந்தக் கையெழுத்தில் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளரான எனக்கு அறிவிக்காமல் தொகுதியில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண அமைச்சர் காமினி திலகசிறிக்கு கடிதம் ஒன்றின் மூலம் கூட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு துமிந்த திஸாநாயக்க உத்தரவிட்டமை, கூட்டத்தில் பங்கேற்றமை, உரையாற்றியமை என்பன கட்சி ஒழுக்க விதிகளுக்கு புறம்பானதாகும்.

எனவே துமிந்த திஸாநாயக்கவிற்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கடிதம் ஊடாக ஜனாதிபதியிடம் கோரியுள்ளதாக பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆவணத்தின் பிரதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர்களான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பந்துல தெரிவித்துள்ளார். (இ-5)

# எல்லோரும் விசுவாசமாக செயற்பட்டால் இந்த வருடத்திற்குள் நிரந்தரத் தீர்வு

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் நம்பிக்கை

எல்லோரும விசுவாசமாக செயற்பட்டால் இந்த வருடத்துக்குள் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு வரும் என்பது எனது கணிப்பாக உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தேர்தல் வாக்குறுதியின் போது 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என நான் தெரிவித்தமை எனது கணிப்பு மாத்திரமே. தீர்வை கொடுப்பது நான் அல்ல. தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதில் ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது.சில விடயங்கள் நடைபெறவேண்டும்.

எனது கணிப்பின்படி முதலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு போயுள்ளார். மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்திருக்கிறார். அவர் இந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை காண்பதற்கு விரும்புகிறார் என்பது எனது கணிப்பு. அவருக்கு உதவியாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்துள்ளார். அவருக்கும அதே சிந்தனை தான உள்ளது என்பதும் எனது கணிப்பு.

மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஒரு பெரும்பான்மையை அடையாவிட்டாலும் கூட எமது உதவியுடன் 3:2 பெரும்பான்மையை அடைய முடியும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தாமதம் ஏற்படவில்லை. எல்லோருமவிசுவாசமாக செயற்பட்டால் இந்த வருடத்துக்குள் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு வரும் என்பது எனது கணிப்பு. தீர்வு வந்தால் நன்மை என்று நான் நினைக்கிறேன். அதன்மூலம் பிரச்சினைகள் அதிகம் நீடிக்கப்படாமல் தீர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 695

Search for people, places and things Nagendram Home

விது விது




காஜா கல்யாணி




பேரின்பநாயகம் பிரதீப்




டி வில்லியர்ஸ் டி சஜி




நிக்கம் சேகா




கிரி செல்வராஜ்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# “துர்முகி” வருட இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

## ஆடி 18 இல் தேடி வரும் யோகம்!



ஆடி 18-ஷ் தேடி வரும் யோகம்!

**தன்னம்பிக்கையும், தைரியமும் கொண்டு பொன்னான வாழ்வை அமைத்துக் கொள்ளும் மேஷ ராசி நேயர்களே!**

நன்மைகளை எல்லாம் புத்தாண்டு வழங்கிடுமா? நண்பர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைத்திடுமா? செல்வ வளம் எப்படியிருக்கும்?, சிந்தித்த காரியங்களைச் செயலாக்க முடியுமா? என்பது போன்ற எண்ணங்கள், வருடம் பிறப்பதற்கு முன்பே உங்கள் மனதில் பிறந்துவிடும்.

ஆதாரமாக விளங்கும் கிரக நிலைகளை அறிந்துகொண்டு, அதற்கேற்ற பரிகாரங்களைச் செய்தால் வேதனைகள் அகலும். வெற்றிக்கனியையும் விரைவில் எட்டிப் பிடிக்கலாம்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி மாதம் 31-ஆம் திகதி புதன் கிழமை அன்று மாலை நேரத்திலேயே நிகழ்கின்றது. அன்றைய ஆங்கிலத் திகதியின் கூட்டுத்தொகை (13.4.2016) சனிக்குரிய “8” என்ற எண் ஆதிக்கத்தில் வருகின்றது. 3, 6-க்கு அதிபதியான புதனுக்குரிய கிழமையில், திருவாதிரை என்ற ராகுவுக்குரிய நட்சத்திரத்தில், மிதுன ராசியில் துர்முகி ஆண்டு அடியெடுத்து வைக்கின்றது.

புத்தாண்டின் கிரக நிலைகள் அற்புதமாக இருக்கின்றது. ஆயினும் அஷ்டமத்துச் சனியும், செவ்வாயும் சேர்க்கை பெற்று அதிக விரயங்களை வழங்கும் விதத்தில் இருக்கின்றது. உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிய, ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்த வேண்டிய ஆண்டு இது. வீண் விரயங்களிலிருந்து விடுபட விழிப்புணர்ச்சி தேவைப்படும்.

மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக் கொணர வைக்கும் குரு பகவான், ஆண்டின் தொடக்கத்தில் சிம்மத்தில் சஞ்சரித்து அதன் சிறப்பான பார்வையை உங்கள் ராசியில் பதிக்கின்றார். எனவே நன்மைகள் வரிசையில் வந்து நிற்கும். நாடிவந்த துயரங்கள் ஓடி ஒளியும்.

என்ன இருந்தாலும் பார்க்கும் குரு வக்ர இயக்கத்தில் அல்லவா இருக்கின்றார் என்று நீங்கள் நினைக்கலாம். உங்கள் ராசியைப் பொறுத்தவரை 9, 12-க்கு அதிபதியானவர் குரு பகவான். விரய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் பலமிழந்து பார்க்கும் பொழுது வீண் விரயங்கள் மாறும்.

காணி நிலம் வாங்கியாவது வீடு கட்ட வேண் டுமே என்ற கவலை மாறும். தொலைபேசி மூலம் வரும் பொன்னான தகவலால் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் மனையில் கேட்க வழி பிறக்கும். தங்கு தடைகளை அகற்றும் குருவை கும்பிட கோவிலுக்குச் செல்ல வியாழக்கிழமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். குருவிற்குப் பிடித்த கொண்டக்கடலையை நைவேத்திய மாக படையுங்கள். குருவிற்கு உகந்த நாளில், உங்கள் வயதுக்கேற்ற விதத் தில் முல்லைப்பூ மாலையை தொடுத்து குரு பகவானுக்கு அணிவிப்பது நல்லது. மற்ற நாட்களில் வாசமலர் மாலை சூட்டி அர்ச்சனைகள் செய்தால் யோசனைகள் அனைத்தும் வெற்றி பெறும்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை**

இக்காலத்தில் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்கள் இல்லம் தேடிவரப் போகின்றது. அசையும் சொத்துக்களும், அசையாச் சொத்துக்களும் வாங்கிச் சேர்க்க் முன் வருவீர்கள். குடும்பத்தில் வாக்கு வாதங்கள் அதிகரித்தாலும் ஒற்றுமை குறையாது. பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் கூட கட்டுக்கடங்காத செலவு வந்து சேரும்.

விரய ஸ்தானத்தில் தனாதிபதி சுக்ரன் உச்சம் பெற்றிருக்கின்றார். இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். புத்திர ஸ்தானத்தில் ராகு குருவோடு வீற்றிருக்கின்றார். எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் பஞ்சம ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார்.




ஆண்டின் தொடக்கத்தில் இதுபோன்ற கிரக நிலைகள் அமைந்திருப்பதால் வேண்டிய நற்பலன்கள் கிடைத்தாலும் வேதனைகளும் இடையிடையே ஆட்கொள்ளும்.

உற்றார், உறவினர்களின் உள்ளம் அறிந்து பேசுவதும், விட்டுக் கொடுத்துச் செல்வதும் தான் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் வழி என்பதை அறிந்து கொள்ளுங்கள். உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் விலையுயர்ந்த பொருட்கள் பழுதாகிப் போகும் முன்பு அதைக்கொடுத்து விட்டுப் புதிய பொருட்களை வாங்க முன் வரலாம்.

புத்திர ஸ்தானத்தில் ராகு இருப்பதால் பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்களில் தாமதம் ஏற்படலாம். தன்னிகரற்ற தம்பதியர்களாக இருந்தாலும் கூட குழந்தைப் பிறப்பில் தாமதம் ஏற்படலாம். சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் இருப்பதால் முறைப்படி நாகசாந்தி செய்து கொள்வது நல்லது.

12-க்கு அதிபதியான குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் “கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்” என்பதற்கு ஏற்ப, எதிர்பாராத விதத்தில் இனிய பலன்களும் இல்லத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் பெரிய தொகை கொடுக்கும் பொழுது சற்று சிந்தித்துக் கொடுப்பது நல்லது.

உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட உபத்திரவங்கள் குறையும். மேலதிகாரிகளின் ஆதரவோடு இலாகா மாற்றங்கள், இடமாற்றங்கள் கூட ஒரு சிலருக்கு கிடைக்கும். விருப்ப ஓய்வு பெறுவதை தவிர்ப்பது நல்லது.

துர்முகி வருடம் ஆடி மாதம் 1 ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப் பெயர்ச்சியின் விளைவாக நல்ல மாற்றங்களை சந்திக்கப் போகின்றீர்கள். 12-க்கு அதிபதியான குரு பகவான் 6-ல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகங்கள் செயற்படும். எனவே அனைத்து கார்ரியங்களிலும் வெற்றி கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

“ஆறில் குரு, ஊரில் பகை” என்ற பழமொழி உண்டு. ஆனால் உங்களைப் பொறுத்தவரை குரு தன் வீட்டைத்தானே பார்ப்பதால் குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் பகை நட்பாகும். பாசக்கரம் மிக்கவர்கள் நேசக்கரம் நீட்டுவர். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சேரும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள அகலும். உத்தி யோகத்தில் பணி நிரந்தரம் ஏற்படலாம்.

**ஆறில் குரு வரும் பொழுது உங்கள் ஆற்றல் பளிச்சிடும்.**

குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்குப் பணம் வந்து சேரும். உறவினர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பிரச்சி னைகள் அகலும்.

ஆரோக்கியத் தொல்லை அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்ள முயற்சிப்பீர் கள். குருவின் பார்வை பதியும் இடங்கள் 2, 10, 12 ஆகிய இடங்களாகும். அதற்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் புனிதமடைந்து எதிர்பார்த்த நற்பலன்கள் நடைபெறும்.

“இரண்டினை குரு தான் பார்த்தால் திரண்டிடும் செல்வம்” என்பார். எனவே, பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். “பத்தினை குருதான் பார்த்தால் முத்தான தொழில்கள் வாய்க்கும்” என்பர். அந்த அடிப்படையில் பழைய தொழில்களை பைசல் செய்துவிட்டுப் புதிய தொழில் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொண்டும், பொல்லாத நண்பர்களின் சகவாசத்தை விலக்கிக்கொண்டும் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் உங்கள் வாழ்க்கை ஒளிமயமானதாக அமையும்.

குடும்ப உறுப்பினர்களில் யாருடைய ஜாதகம் 10-ம் இடம் வலுப்பெற்றிருக் கிறதோ அவர்கள் பெயரில் புதிய தொழில் தொடங்க முன்வரலாம்.

“பன்னிரெண்டை குருதான் பார்த்தால் பயணத்தால் பலன் கிடைக்கும், இனிய தொரு வாகனங்கள் எதிரில் வந்து நிற்கும்”. அந்த அடிப்படையில் பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். எதிர்ப்புகள் விலகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலம் குழப்பங்களில் இருந்து விடுபடும் காலமாகும். அலைச்சல் கூடினாலும் ஆதாயம் உண்டு. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். தொகையை வைத்துக்கொண்டு காரியத்தைச் செய்ய இயலாது. காரியத்தை தொடங்கி விட்டால் காசு, பணம் தானே வந்து சேரும்.

சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். தடைகளை முறியடிக்க ஆலய வழிபாட்டில் அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும். பொன், பொருளை அடகு வைக்கும் சூழ்நிலை அதிகரிக்கும். சனி தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குவதால் மாற்றுத் தொழிலால் ஏற்றம் காணலாம்.

பங்குதாரர்களில் மாற்று இனத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். உதிரி வருமானங்கள் தடைப்படலாம். கட்டியவீடு பாதியில் நிற்கிறதே என்று கவலைப்படுவீர்கள். வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். குருவின் வக்ர காலத்தில் குரு பகவானையும், சனியின் வக்ர காலத்தில் சனி பகவானையும், தீபம் ஏற்றி வழிபட்டால் செல்வ நிலையில் உயர்வு கிட்டும். செயற்பாடுகளில் வெற்றி உருவாகும்.

**அக்கினி நட்சத்திரம்**

சித்திரை 21 ஆம் திகதி(4.5.2016) முதல் அக்கினி நட்சத்திரம் தொடங்குகிறது. வைகாசி 15ஆம் திகதி (28.5.2016) அக்னி நட்சத்திரம் முடிகிறது. இக்காலத்தில் மங்கல நிகழ்ச்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**அட்சய திருதியை**

9.5.2016 திங்கட்கிழமை அட்சய திருதியை நாளாகும். இதில் ஆபரணங்கள் மட்டுமல்லாமல் நமது தசாபுத்திக்கு ஏற்ற பொருட்களை வாங்கலாம். இந்த நாள் வளர்ச்சி தரும் நாளாகும். எனவே மங்கல காரியங்களை செய்யலாம்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி வருடத்தில் மேஷ ராசியில் பிறந்த பெண்களுக்கு சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறி

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

குறிகள் தென்படும். துணிந்து சில முடிவுகளை எடுத்து குடும்ப பெரியவர்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். ஆடி 18-க்கு மேல் கன்னி ராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை பலத்தால் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். இல்லத்தில் அமைதி கூடும்.

புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவி கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிர்ஷ்டக் காற்று அலை மோதும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. துர்முகி ஆண்டில் துன்பங்கள் தூளாக துர்க்கையை வழிபாடு செய்வது நல்லது.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து செல்வ முத்துக்குமரனை வழிபட்டால் செல்வ நிலை உயரும். கந்தர் அனுபூதி பாராயணம் செய்தால் வந்த துயர் வாயிலோடு நிற்கும்.

நாளை இடபம்

# மக்கள் தெரிவு நாமமாக எலிபன் ஹவுஸ் சோடா

தொடர்ந்து வெற்றி வாகை சூடிய வண்ணமுள்ள எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா, தொடர்ச்சியான பத்தாவது ஆண்டாகவும், "ஆண்டின் சிறந்த பான வர்த்தக நாமம்" விருதை வெற்றியீட்டியுள்ளது. இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் (SLIM) மற்றும் நீல்சன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2016 மக்கள் விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது இந்த விருது கிறீம் சோடாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு மக்கள் விருதுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது முதல், இந்த உயர் விருதை எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை குறிபிடத்தக்கது.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் (SLIM) மற்றும் நீல்சன் கம்பனி ஆகியவற்றின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் விருதுகள் என்பதன் மூலமாக, நுகர்வோரின் தெரிவுகள் பதிவு செய்யப்பட்டு, அதிகளவு தெரிவைப் பெற்ற நாமங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பொது மக்கள் இந்த வெற்றியாளர்களை தெரிவு செய்கின்றமையால், தமக்கு விருப்பமான வர்த்தக நாமங்கள், நபர்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவற்றை தெரிவு செய்திருந்தனர்.

வெற்றியாளர்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டிருந்த நேருக்கு — நேர் கருத்துக்கணிப்புகளை நீல்சன் மேற்கொண்டிருந்தது. இதில் 15 — 60 வயதுக்குட்பட்ட ஆண்? மற்றும் பெண் இரு பாலாரும் நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் 5 மாதங்களுக்கு இவ்வாறு நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா என்பது இலங்கையர்கள் மத்தியில் அதிகளவு வரவேற்பைப் பெற்ற நாமம் என்பது மட்டுமின்றி, ஏனைய எந்தவொரு பான நாமத்தையும் விட சுமார் ஒரு தசாப்த காலமாக அனைவர் மத்தியில் அதிகளவு விருப்பத்துக்குரிய நாமமாக உள்நாட்டு சந்தையில் திகழ்ந்த வண்ணமுள்ளது.

நாடு முழுவதும் நீல்சன் முன்னெடுத்திருந்த கருத்துக்கணிப்பின் மூலம் இது தெரியவந்திருந்தது. எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா 2016 மக்கள் விருதுகள் வழங்கலில் விருதை பெற்றுக் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க விடயம் தொடர்பில் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் பிஎல்சியின் பானங்கள் பிரிவின் தலைமை அதிகாரியும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பதில் தலைவருமான தமிந்த கம்லத் கருத்து தெரிவிக்கையில்,

"இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற பானமாக 10 வருட காலமாக எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா தொடர்ந்து மக்களின் தெரிவாக அமைந்துள்ளது. இவை அனைத்தும் நிலைபேறான வாடிக்கையாளர் அர்ப்பணிப்பு மற்றும் எமது நீண்ட கால மற்றும் புதிய வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சிகரமான ஈடுபாடு போன்றன அமைந்துள்ளன.

அவர்களின் தொடர்ச்சியான அன்பு மற்றும் உதவி இன்றி எம்மால் இவை எதையும் முன்னெடுத்திருக்க முடியாது. இதற்காக நாம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்

# 10-வது தடவையும் விருது வென்ற செலிங்கோ



2016 SLIM நீல்சன் மக்கள் விருது விழாவில் தொடர்ந்து பத்தாவது தடவையாகமிகவும் விருப்புக்குரியமக்கள் விருதை வென்று செலிங்கோ காப்புறுதி தனது கூட்டாண்மை உறுதியை மீண்டும் தக்கவைத்துள்ளது. இந்த விருது இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தால்(SLIM) வழங்கப்படும் மிகவும் கீர்த்தி மிக்க ஒருவிருதாகும்.

10 வருடங்களுக்கு முன் இந்த விருது வழங்கும் நிகழ்வுஅறிமுகம் செய்யப்பட்டது முதல் செலிங்கோ காப்புறுதி இந்த மக்கள் விருதை வருடாந்தம் வென்று அளப்பரிய சாதனை படைத்துள்ளது.

இலங்கை மக்களின் சிந்தனை களில குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய தனிநபர்களையும் நிறுவ ணங்களையும் அங்கீகரிக்கும் வகையில் SLIM நீல்சன் மக்கள் விருதுவழங்கப் படுகின்றது.

இலங்கை நிறுவனங்களின் வருடாந்த கூட்டாண்மை கலண்டரில் மிகவும் எதிர்ப்பார்க்கப்படும் ஒரு நிகழ்வாகவும் இந்தவைபவம் அமைந்துள்ளது. காரணம் இங்கு விருதுக்கு உரியவர்கள் மக்களால் தெரிவுசெய்யப் படுகின்றனர். நீல்சன் ஸ்ரீலங்கா நிறுவனம் நாடுமுழுவதும் பரவலாக நடத்தும் ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் விருதுக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

செலிங்கோ காப்புறுதிக்கு உரிய விருதை இம்முறைசெலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பெட்ரிக் அல்விஸ் மற்றும் செலிங்கோலைஃப் காப்புறு தியின் வர்த்தகஅபிவிருத்தி பொதுமுகா மையாளர் ஜோ ஜயவர்தன ஆகியோர் வோடர்ஸ் ஹெட்ஜில் இடம்பெற்ற கோலா கலமான நிகழ்வில் பெற்றுக் கொண்டனர்.

நாடுமுழுவதும் 15 முதல் 60 வயதுக்கு இடைப்பட்ட இருபாலார் மத்தியிலும் தரத்தை அடிப்படையாகக் கொண்ட நேரடி நேர்காணல்கள் மூலம் இந்தத் தெரிவுகள் இடம்பெறுகின்றன. இதற்கென கட்டமைப்புடன் வடிவமைக்கப்பட்ட கேள்விக் கொத்து ஐந்து மாத காலத்துக்கு பயன்படுத்தப் படுகின்றது. இந்தகேள்விக் கொத்தின் மூலம் தமது விருப்புக்குரிய வர்த்தக முத்திரைகள் மற்றும் நபர்களைக் குறிப்பிடுமாறு மக்கள் கேற்கப்படுகின்றனர். இதில் அதிகூடிய விருப்பை பெறுகின்றவர்களே வெற்றியா ளர்களாகத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

# கடன் சுமையில் தத்தளிக்கும் நாடுகள்

2015-ம் ஆண்டில் மிகப்பெரிய கடன் சுமையை சந்தித்த நாடு கிரீஸ். கிரீஸ் நாட்டின் பொருளாதார நெருக்கடி அந்நாட்டு மக்களை மட்டும் அல்லாமல் ஐரோப்பிய யூனியன் தொடங்கி பல்வேறு நாடுகளையும் ஆட்டம்காணச் செய்தது.

இதைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வந்தது. கிரீஸ் மட்டும்தான் அதிகமான கடன் சுமையில் இருக்கிறதா என்று தேடிப் பார்க்கையில் உலகின் பல நாடுகள் யூகிக்க முடியாத அளவிற்கு கடன் சுமையில் உள்ளன.

கீரிஸ் நாட்டை விட ஜப்பான் அதிக கடன் சுமையில் இருக்கிறது. அமெரிக்கா தனது ஜிடிபியில் 104.5 சதவீதம் கடன் சுமையில் இருக்கிறது.

அதிக கடன் சுமையில் உள்ள நாடுகளின் ஜிடிபி மற்றும் மொத்த ஜிடிபியில் கடன் சதவீதம் அருகில் காட்டப்பட்டுள்ளது.

அதிக கடன் சுமையில் உள்ள நாடுகளின் ஜிடிபி மற்றும் மொத்த ஜிடிபியில் கடன் சதவீதம்

| | ஜிடிபி (கோடி டாலர்) | மொத்த ஜிடிபியில் கடன் சதவீதம் |
|---|---|---|
| ஜப்பான் | 411600 | 243.2% |
| கிரீஸ் | 9300 | 173.8% |
| லெபனான் | 8112.2 | 139.7% |
| இத்தாலி | 217400 | 132.5% |
| போர்ச்சுக்கல் | 19800 | 128.8% |
| அயர்லாந்து | 22700 | 122.8% |
| அமெரிக்கா | 17,96800 | 104.5% |
| சிங்கப்பூர் | 29400 | 103.8% |
| பெல்ஜியம் | 45900 | 99.8% |
| ஸ்பெயின் | 122100 | 93.9% |




# இல. பொருளாதாரம் அதிகரிக்க வாய்ப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடத்திலும் அடுத்த வருடத்திலும் 5.3 சதவீதமாக அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொது மக்களின் முதலீடு மற்றும் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் பிற்போடப்பட்டவை காரணமாகவே இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக உலக வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னர், ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டு நாணய வைப்பு காரணமாக சர்வதேசம் எதிர்நோக்கிய சவால்கள் காரணமாக இலங்கையின் பொருளாதாரமும் பாதிப்படைந்தது.

அதனால், உயர்தன்மையிலான கடன், குறைந்த அளவிலான அந்நிய செலாவணி இருப்பு மற்றும் அதிக பணவீக்கம் என்பனவற்றை இலங்கை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதேவேளை, இடை நிறுத்தப்பட்டிருந்த துறைமுக நகர திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார துறையின் ராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாரிய திட்டம் 2015ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டது.

உரிய முறையிலான அனுமதி பெறப்படாத நிலையில் இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டமையினாலேயே திட்டம் பிற்போடப்பட்டது.

தற்போது, இந்த திட்டம் குறித்த சகல ஒப்பந்தங்கள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் சீர்செய்யப்பட்டுள்ளமை காரணமாக, இந்த திட்டத்தினை மேலும் காலதாமதம் இன்றி மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,275.62 | 6,401.32 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,311.94 | 3,365.66⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,289.973 |

**உயர்வடைந்தபங்குகள்(ரூ.):** ஈஸ்ட் வெஸ்ட்(18.40), சிரஸ் கல்பிட்டிய(3.00), மல்ரி பினான்ஸ்(19.30), ஈஸ்டன் மேர்சண்ட்(8.50), லக்கி லங்கா(2.10).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எல்பிபிட்டிய(19.30), ஓட்டோ ரூம்(84.40),தலவாக்கல(35.10), அமனா தகபுல்(1.30),பலாங்கொட(15.70).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# உன்னால் முடியும்: சந்தோசம் தரும் தொழில்



ஹரிஹரசுதன். சென்னையில் கம்யூட்டர் சயின்ஸ் படித்துவிட்டு அமெரிக்காவில் மேற்படிப்பு முடித்தவர். அங்கேயே வேலை தேடிக்கொண்டவர். ஒரு விபத்து காரணமாக சொந்த ஊருக்கு திரும்பியவர் திரும்ப அமெரிக்கா செல்லவில்லை. ஊர்மணம் செல்லவிடவில்லை. இப்போது வீட்டுத் தோட்டம் உருவாக்கித் தரும் பெரிகாளி என்கிற நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். கூடவே கைவல்யம் என்கிற நர்சரி பண்ணையும் சென்னை அண்ணா நகரில் வைத்துள்ளார். இவரது அனுபவம் இந்த வாரம் இடம் பெறுகிறது.

கலிபோர்னியாவில் கம்ப்யூட்டர் சயின்சில் எம் எஸ் படித்தேன். மீண்டும் அமெரிக்கா செல்ல பல வாய்ப்புகள் அமைந்தும் போக மனம் வரவில்லை. விருப்பமாகவும் இல்லை. இங்கேயே ஒரு தொழில் தொடங்கிக் கொண்டு செட்டிலாகலாம் என யோசித்தேன். அதன் பிறகு நானும் எனது நண்பரும் சேர்ந்து கமாடிட்டி டிரேடிங் தொழில் மேற்கொண்டோம். இதற்கிடையே எனது உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, ஓய்வெடுத்த காலத்தில் இயற்கை தோட்டங்கள் கொடுத்த அமைதி என்னை இழுத்துக் கொண்டே இருந்தது. அதனால் நர்சரி தொழில் தொடங்கினால் வருமானமும் கிடைக்கும், மன அமைதியும் கிடைக்கும் என்பதால் கமாடிட்டி தொழிலில் எனது பங்கை நண்பரிடம் விற்றுவிட்டு இந்த தொழிலை தொடங்கினேன்.

தொழில்முறையாக தோட்டம் அமைத்து கொடுக்கும் பெரிகாளி நிறுவனத்தை தொடங்கினேன். வீடுகளில் மாடித்தோட்டம், புல்வெளிகள், ஹோட்டல்கள், ஓய்வு இல்ல பூங்கா அமைப்பது என தொழில் வாய்ப்புகள் கிடைத்தன. வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்பவும், இடத்துக்கேற்பவும் இப்போது தோட்டங்களை அமைத்துக் கொடுத்து வருகிறேன் என்றார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.83 | 146.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 201.31 | 208.51 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.79 | 166.18 |
| சுவிஸ் பிராங் | 146.59 | 152.73 |
| கனேடிய டொலர் | 110.74 | 115.37 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.10 | 114.21 |
| சிங்கப்பூர் டொலர் | 104.65 | 108.68 |
| ஜப்பான் யென் | 1.29 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.16 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

**140**

## எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த "ராஜகுமாரி" அமோக வெற்றி

அபிமன்யூவின் தந்தை அர்ஜூனனாக எம்.ஜி.ஆர்.நடித்தார். படத்தின் பிற்பகுதியில்தான் அவர் வருவார். எனினும் நடிப்பு சிறப்பாக இருந்தது.

மற்றும் நரசிம்மபாரதி எம்.ஜி. சக்ரபாணி, நம்பியார், கே.மாலதி, எம்.ஆர். சந்தான லட்சுமி ஆகியோரும் நடித்தனர்.

அபிமன்யுவின் வசனங்களை கருணாநிதி எழுதினார். என்றாலும் படத்தில் அவர் பெயர் இடம் பெறவில்லை. திரைக்கதை வசனம் ஏ.எஸ். ஏ. சாமி என்று டைட்டில் கார்டு போடப்பட்டது.

இந்தப் படத்தை எம்.சோமசுந்தரமும் ஏ.காசிலிங்கமும் இணைந்து டைரக்ட் செய்தனர்.

### ராஜமுக்தி

லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அடைந்து லண்டனில் உள்ள பிரிவு கவுன்சில் (வெள்ளையர் ஆட்சியின் போது உச்ச நீதி மன்றம்) வரை சென்று விடுதலையான எம். கே. தியாகராஜ பாகவதர் ராஜமுக்தி என்ற படத்தை தயாரித்தார். படப்பிடிப்பு புனா நகரில் நடந்தது.

இதில் பாகவதரும் வி.என். ஜானகியும் ஜோடியாக நடித்தனர். பாகவதருக்கு அடுத்த வேடத்தில் தளபதியாக எம்.ஜி.ஆர். நடித்தார். வில்லி போன்ற வேடத்தில் பி.பானுமதி நடித்தார். அவர் நடித்த முதல் தமிழ்ப்படம் இதுதான்.

இந்தப் படத்தில் நடிக்கும்போது எம்.ஜி.ஆரும் வி.என். ஜானகியும் முதல் முதலாக நேரில் சந்தித்துக் கொண்டனர். ஜானகியை எம்.ஜி. ஆர். ஏற்கனவே படத்தில் பார்த்திருக்கிறார். எம்.ஜி. ஆரின் முதல் மனைவி பார்கவி என்கிற தங்கமணி போல ஜானகி இருந்தது அவருக்கு வியப்பளித்தது.

நேரில் சந்தித்த போது அசந்தே போனார். பார்கவியின் அசல் அச்சுப் போலவே ஜானகி காட்சியளித்தார். இதன் காரணமாக இருவரும் நெருங்கிப் பழகினார்கள். ஒருவர் மனதில் ஒருவர் இடம் பெற்றனர்.

இதே சமயத்தில் ஜுபிடரின் மோகினி படத்தில் எம்.ஜி.ஆரும் ஜானகியும் ஜோடியாக நடித்தனர்.

1948 ஒக்டோபர் 9 ஆம் திகதி ராஜமுக்தியும் அதே மாதம் 31 ஆம் திகதி மோகினியும் ரிலீஸ் ஆயின. இதில் ராஜமுக்தி தோல்வி அடைந்தது. மோகினி வெற்றி பெற்றது.



### மருத நாட்டு இளவரசி

பின்னர் கோவிந்தன் கம்பெனி தயாரித்த மருதநாட்டு இளவரசியில் எம்.ஜி. ஆரும் வி.என். ஜானகியும் இணைந்து நடித்தனர்.

மற்றும் எம்.ஜி. சக்ரபாணி, பி.எஸ். வீரப்பா சி.கே. சரஸ்வதி ஆகியோரும் நடித்தனர்.

கதை-வசனத்தை மு.கருணாநிதி எழுதினார். ஏ.காசிலிங்கம் டைரக்ட் செய்தார்.

இந்தப்படத்தில் வி. என்.ஜானகி மருத நாட்டின் இளவரசி. அவர் சாதாரண இளைஞனான எம்.ஜி.ஆரை காதலிப்பார். அவர் இளவரசி என்று எம் ஜி.ஆருக்கு தெரியாது.

# ரணிலுக்கு பீஜிங்கில் செங்கம்பளம்

# கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்க புளூரிட்ஜ் கப்பல்



(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)

அமெரிக்காவின் இப்போர்க் கப்பல் கொழும்பில் தரித்து நின்ற வேளையில் 'இது இங்கு வரும் பல போர்க் கப்பல்களில் முதலாவது கப்பலாக இருக்கும்' என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் நம்பிக்கை தெரிவித்திருந்தார். மார்ச் 26-31வரை இலங்கையின் கரையில் தரித்து நின்ற இப் போர்க் கப்பலை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும் பார்வையிட்டிருந்தார்.

திருகோணமலையானது உலகின் மிகச் சிறந்த இயற்கையான ஆழ்கடல் துறைமுகங்களில் ஒன்றாகும் என கடந்த டிசம்பரில் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்த போது அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலர் தோமஸ் சனோன் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தெரிவித்திருந்ததானது இங்கு மிகவும் முக்கியமானதாகும். அமெரிக்க அதிகாரிகள் பலர் தொடர்ச்சியாக இலங்கைக்கான தமது பயணத்தை மேற்கொண்டதுடன் அவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் திரு கோணமலைக்குப் பயணம் செய்ததானது முன்னர் முக்கியத்துவம் இல்லாத இலங்கைத் தீவு மீது அமெரிக்கா தற்போது அதிக ஆர்வம் கொண்டுள்ளதைச் சுட்டிநிற்கிறது.

'அமெரிக்கக் கடற்படையின் ஏழாவது கப்பற்படையணியின் போர்க் கப்பலிற்கு திருகோணமலையிலுள்ள இயற்கைத் துறைமுகமான திருகோணமலையை விட வேறு சிறந்த தளம் கிடைக்குமா?' என லங்கா சமச மஜாக் கடசியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருந்தார். அதாவது திருகோணமலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஆற்றப்பட்ட உரைக்குப் பதிலாக இவர் இதனைத் தெரிவித்திருந்தார். 'பிலிப்பைன்ஸ் மற்றும் வேறு நாடுகளைப் போல இலங்கையும் அமெரிக்காவின் கைப்பாவையாக மாறும்' என திஸ்ஸ விதாரண சுட்டிக் காட்டியுள்ளார்.

'திருகோணமலையைத் தளமாகப் பயன்படுத்தும் ஏழாவது கப்பற்படையணிக்கு ஆதரவாக மிகவும் சக்தி வாய்ந்த கடற்படையை உருவாக்காவிட்டால் இலங்கை எவ்வாறு அனைத்துலக கடல் மார்க்கத்தைப் பாதுகாக்கும்?' என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியிருந்ததார்.

தற்போது அமெரிக்கா தனது வெளிநாட்டு நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பிறநாடுகளுடன் இராணுவ தொழிலை விட சுதந்திரமான பல உடன்படிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே இலங்கை அமெரிக்காவுடனான இராணுவ உடன்படிக்கைகளின் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். அதாவது இந்த உடன்படிக்கைகள் தொடர்பாக இலங்கை வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் இராணுவ உபகரணங்கள் சார்ந்த உடன்படிக்கைகளை அமெரிக்கா மேற்கொளவதற்கு பத்து ஆண்டுகள் எடுத்தது. அதாவது இரண்டு நாடுகளும் தமது இராணுவ வளங்களைப் பகிர்ந்து கொள் வது மற்றும் இவற்றைப் பழுது பார்ப்பது போன்றவற்றுக்கான உடன்படிக்கைகளை எட்டுவதற்கு பத்து ஆண்டுகள் எடுத்தன. இந்நிலையில் இலங்கை யின் நல்லாட்சி அரசாங்கமானது அணி சேரா அமைப்புடன் உதட்ட ளவு மரியாதையைத் தொடரும் இந்த வேளையில், இதன் குழப் பம் நிறைந்த மஙகலான திரையின் பின்னால இலங்கையின் கோட்பாடுகள் குழிதோண்டிப் புதைக்கப்படும் ஆபத்தை நெருங்கியுள்ளது.

(முற்றும்)

அரைக்கொத்து அரிசி அன்னதானம்
விடிய விடிய மேளதாளம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அனல் மின் நிலையத்துக்கு எதிராக சம்பூரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## ஜனாதிபதிக்கும் மனு அனுப்பி வைப்பு

திருகோணமலை சம்பூர் பகுதியில் அமையவுள்ள அனல் மின் நிலையத்திற்கு எதிராக சம்பூர் மீள்குடியேற்ற கிராம மக்கள் நேற்று காலை சம்பூர் அரசடி விநாயகர் கோயிலுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்ட பேரணி முடிவில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரனிடம் சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை கைவிடுமாறு ஜனாதிபதியை கோரும் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமூக மட்ட பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள், மீனவர் சங்க பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மூதூர் பிரதேசத்திலுள்ள சம்பூர் பகுதியில் இந்தியா மற்றும் ஜப்பான் உதவியுடன் இரு அனல் மின் நிலையங்களை அமைப்பதற்கு முன்னைய அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான காணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது அந்த அனல் மின்நிலையத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்ற நிலையில் இதற்கான எதிர்ப்புகளும் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# ஜப்பான் நிலநடுக்கம் ஜனாதிபதி அனுதாபம்

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுதாபம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜப்பானிய பேரரசர் ஆக்கிஹிட்டோவிற்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜப்பானிய மக்கள் நம்பிக்கை மற்றும் தைரியத்துடன் பேரிடர்களை கடந்து முன்னேற வேண்டும் எனவும், நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க இலங்கை மக்கள் தயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிலநடுக்கத்தினால் ஜப்பானிலுள்ள இலங்கை பிரஜைகள் எவருக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லையென அந் நாட்டுக்கான இலங்கை தூதரகம தெரிவித்துள்ளது. (செ-12)

# கூட்டமைப்பின் தலைவர் யாழ் வருவதும் அதிசயமே

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவரின் யாழ்ப்பாண வருகை ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்ட இரா.சம்பந்தர் யாழ்ப்பாணத்துக்கு வருவதில் என்னதான் ஆச்சரியம் இருக்கிறதோ தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில் அவர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே தங்கியிருக்க வேண்டும்.

எனினும் அவரின் வயது, உடல்நிலை என்பவற்றைக் கருதில் கொள்ளும்போது, அவர் கொழும்பில் இருப்பது தவிர்க்க முடியாதது என்று எடுத்துக் கொள்ளலாம்.

அதற்காக அவரின் யாழ்ப்பாண வருகையை ஏதோ ஒரு முக்கிய நிகழ்வாக ஆலாவர்ணம் செய்வது தமிழ் அரசியல் தலைமைகளின் அறியாமையையே எடுத்துக் காட்டுவதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் யாழ்ப்பாணம் வருகை என்பதை நாம் பெரிது படுத்துகின்றபோது, எங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் இராஜதந்திரிகளும் ஏனையவர்களும் எங்களின் அரசியல் பற்றி எள்ளி நகையாடுவர்.

ஓர் இனத்தின் தலைவர், அந்த இனம் வாழ்கின்ற இடத்துக்கு செல்வது கூட ஒரு விஜயமாக பார்க்கப்படுகின்றதெனில், தமிழ் மக்களுக்கு நிர்வாகம் மட்டுமல்ல; அரசியலும் தெரியாது என்பதாக அவர்கள் முடிவு செய்து விடுவர்.

இது ஒரு புறம் இருக்க, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் வருகை தந்ததை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் யாழ்ப்பாண விஜயம் குறைவானது என்ற உண்மையும் இங்கு கவனிக்கத் தக்கது.

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்கையில், இரா.சம்பந்தரின் வருகையை நாம் பெரிதுபடுத்துவது எதற்கானது என்பதுதான் புரியவில்லை.

அதேநேரம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் கருத்துரைப்புகளில் ஒரு வெறுப்பும், கொதிப்பும் இருப்பது தெரிகிறது.

அதிலும் குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை; காணாமல்போனவர்கள் பற்றிய விவகாரங்கள் தொடர்பில் அவரிடம் கேள்வி கேட்டால் போதும் அவர் பதகளித்து விடுகிறார்.

கைதிகளின் விடயமும் காணாமல்போனவர்களின் விவகாரமும் அவருக்கு ரத்தக் கொதிப்பை ஏற்படுத்தும் அளவில் வெறுப்பாக உள்ளது.

இத்தகைய போக்கு தமிழ் மக்கள் மத்தியில் தனக்கு எதிர்ப்பை ஏற்படுத்தும் என்பது சம்பந்தர் ஐயாவுக்கு நன்கு தெரியுமாயினும் அடுத்த பொதுத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன் என்ற நிறுதிட்டமான உண்மையை புரிந்து கொண்டதாலோ என்னவோ மக்கள் பற்றி அவருக்கு எந்த அக்கறையும் இல்லாததுபோல நடந்து கொள்கிறார்.

எது எப்படியாயினும் இவை பற்றி தமிழ் மக்கள் தமக்குள் அலசி ஆராய்வது கட்டாயமானதாகும்.

# ஆழ்கடல் ரோந்தில் இலங்கை கடற்படை

மாலைதீவு தொடக்கம் மலாக்கா நீரிணை வரையான ஆழ்கடலில் இலங்கை கடற்படை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் முன்வைக்கப்பட்ட திட்டம் ஒன்றை அடிப்படையாக வைத்தே, இலங்கை கடற்படை இந்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக, இலங்கை கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள், மாலைதீவு மற்றும் இந்தோனேசியாவில் இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளன என்றும் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது இலங்கை கடற்படைக்கு ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்கள் தேவைப்படுகின்றன என்றும், விரைவில் நான்கு கப்பல்களை இதற்காக கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தப் பாதுகாப்புத்திட்டம் 2020ஆம ஆண்டு வரை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சாரதிகள் 1546 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் விஷேட வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று வரை 1546 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 10ஆம் திகதி குடிபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் விஷேட நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# சு.கவின் மே தினக்கூட்டத்துக்கு அழைப்பு கிடைக்கவில்லை-மகிந்த

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு இதுவரையில் தனக்கு அழைப்புக் கிடைக்கவில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், கூட்டு எதிர்க் கட்சியினால் கிருலப்பனையில் ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டத்துக்குதான் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், செல்வீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியதற்கு, தான் கூட்டு எதிர்க் கட்சியின் மே தினக் கூட்டத்தை பொறுப்பேற்றிருக்கின்றேன் என பதிலளித்துள்ளார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# சவுதி அரேபியா-ஏமனில் பலத்த மழை வெள்ளத்தில் சிக்கி 42 பேர் உயிரிழப்பு

சவுதி அரேபியா மற்றும் ஏமனில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி 42 பேர் பலியாகியுள்ளனர்.

சவுதிஅரேபியாவில் வழக்கத்துக்கு மாறாக கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் தலைநகர் ரியாத், கெயில், மெக்கா, மதீனா, அல்-ஜூய அபாகா, ஆசிர், நஜ்ரான், ஜகான் ஆகிய நக ரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. எனவே, அங்கு மீட்பு பணி தீவிரமாக நடைபெறுகிறது. அங்கு இதுவரை 915 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அல்-பாகா பகுதியில் நிலச் சரிவு ஏற்பட்டது. அதில் சிக் கிய 27 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர்.

சவுதிஅரேபியாவில்பெய்து வரும் மழைக்கு இதுவரை 18 பேர் பலியாகி உள்ளனர். இதற்கிடையே பலத்த மழை காரணமாக ரியாத்தில் அனைத்து பாடசாலைக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனின் வடக்கு பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது. தலைநகர் சனாவுக்கு வடக்கேயுள்ள அம்ரான மாகாணத்தில் வெள்ளத்தில சிக்கி 10 பேர் பலியாகினர். ஹஜ்ஜா மாகாணத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரி வில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். இந்த 2 மாகாணங்களிலும் மொத்தம் 24 பேர் உயிரிழந்துள்ளனர். இப் பகுதிகளில் ஏராளமான வீடுகள் இடிந்து சேதம் அடைந்தன.

அல்-மாகவித் மாகாணத்தில் அணை உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. பல வீடுகள், பாலங்கள் மற்றும் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டன. சவுதி அரேபியா மற்றும் ஏமனில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி 42 பேர் பலியாகி உள்ளனர்.

ஈரானில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் ஏராளமான கார்கள் அடித்துச் செல்லப்பட்டன. மழைக்கு 2 பேர் பலியாகினர். அங்கு தென் பகுதிக்கான அனைத்து ரயில்களும் 2 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை வவுனியா பிரதேசத்தில நேரியகுளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்தகுளம் இராணுவ முகாம், செட்டிக்குளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## முயற்சியளவே ஞானவிளைவு




வதை, நிலம், எரு, தண்ணீர், காவல் இவைகள் அனைத்தும் சரியாக இருந்தால் தான் விளைவு நன்றாக இருக்கும். அதுபோலவே, ஒரு ஆசான் அத்துவிதத் தத்துவம் என்ற ஒருமைத் தத்துவ விதையை உன்அறிவு என்னும் நிலத்தில் ஊன்றினால் அது வளர்ச்சி பெற, நீ ஒழுக்கம் என்ற உரம் இடவேண்டும். அறிவை ஒன்றிப் பழகும் ஒருமைப் பழக்கமான தவமும் - ஆராய்ச்சியும் என்ற தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

அறிவை ஒன்றச் செய்து உறுதியான, அசைவற்ற நிலையடைவதே ஞானத்திற்குத் தேவையாக இருக்கிறது.

ஆகையால், அறிவு சலனப்பட்டுக் காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு குணங்களில் எதுவாயும் மாறாது பார்த்துக் கொள்ளும் விழிப்பு நிலையாகிய காவல் புரிய வேண்டும்.

இவைகள் எல்லாம் அமையும் வகைக்கும் அளவிற்கும் ஏற்றபடி "ஞானம்" என்ற விளைவும் உனக்கு உண்டாகும்.

# ஓய்வு பெறுகிறார் ரங்கன ஹேரத்



இலங்கை அணியின் முன்னணிச் சுழற்பந்துவீச்சாளரான ரங்கன ஹேரத், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற உலக இருபது-20 தொடரில் பங்கேற்றிருந்த நிலையிலேயே, 38 வயதான ரங்கன ஹேரத், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் முடிவை அறிவித்துள்ளார்.

ரங்கன ஹேரத்தின் ஓய்வு பெறும் முடிவை ஏற்றுள்ளதாகத் தெரிவித்த மொஹான் சில்வா, டெஸ்ட் போட்டிகளில் ஹேரத் தொடர்ந்தும் விளையாடுவார் என உறுதிப்படுத்தியுள்ளார்.

71 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றிய ரங்கன ஹேரத், 67 இனிங்ஸ்க்ளில் பந்துவீசி 74 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அவரது பந்துவீச்சுச் சராசரி, 31.91 என்பதோடு, சிறந்த பந்துவீச்சுப் பெறுமதியாக, 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமை காணப்படுகிறது. 17 இருபது-20 சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றிய ரங்கன ஹேரத், ஓவருக்கு 6.13 ஓட்டங்கள் என்ற அடிப்படையில், 20.72 என்ற சராசரியில், 18 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சுப் பெறுமதி, 3 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள் ஆகும்.

ஓய்வுபெறும்போது ஹேரத், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் பந்துவீச்சுத் தரப்படுத்தலில் 16ஆம் இடத்தில் காணப்படுகிறார்.

2013 ஆம் ஆண்டில் 5ஆவது இடத்தைப் பிடித்தமை, அவரது சிறந்த தரப்படுத்தல் நிலையாகும். இருபது-20 சர்வதேசப் போட்டிகளில் தரப்படுத்தலில் 33ஆவது இடத்தில் காணப்படும் அவர், உச்சபட்சமாக 32 ஆவது இடத்தைப் பெற்றிருந்தார்.

ரங்கன ஹேரத்தின் ஓய்வைத் தொடர்ந்து, ஜெப்றி வன்டர்சே, சச்சித்திர சேனநாயக்க, தரிந்து கௌஷால் ஆகியோர் முக்கிய சுழற்பந்துவீச்சாளர்களாக மாறியுள்ளனர்.

இதில், அண்மையில் இடம்பெற்ற உலக இருபதுகு-20 தொடரில், ஜெப்றி வன்டர்சேயின் சிறப்பான பெறுபேறுகள், இலங்கை அணிக்கு நம்பிக்கையை வழங்குமென்பது குறிப்பிடத்தக்கது.

## மிஸ்ரா என்ன செய்தார் மறைந்திருந்த மில்லர்

டில்லியில் நடைபெற்ற ஐபிஎல் லீக் ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியைத் தோற்கடித்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்க்ளில் 9 விக்கெட் இழப்புக்கு 111 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

டில்லி தரப்பில் அமித் மிஸ்ரா 3 ஓவர்களில் 11 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளை சாய்த்தார்.

பின்னர் ஆடிய டில்லி அணி 13.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்கள் எடுத்து வெற்றி'கண்டது.

இதன்பிறகு மில்லர் கூறியதாவது,

மிஸ்ரா 5 விக்கெட்டுகளை வீழ்த்த முடியாமல் போனது துரதிர்ஷ்டவசமானதாகும். அவர் தலைசிறந்த பந்துவீச்சாளர், என்னை மட்டுமன்றி, மக்ஸ்வெல், மார்ஷ் ஆகியோரையும் வீழ்த்தினார்.

அவர்தான் ஆட்டத்தின் போக்கை மாற்றினார். இது மிகக் குறைவான ஸ்கோர். எடுக்கப்பட்ட ஆட்டம். நாங்கள் முக்கியமான கட்டங்களில் விக்கெட்டுகளை இழந்தோம். அது எங்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது. மைதானத்தை எந்த குறையும் சொல்ல முடியாது என்று கூறியுள்ளார்.

## மும்பை இந்தியன்ஸில் இணைந்து கொண்டார் மலிங்க

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் காயம் காரணமாக கடந்த 2 போட்டிகளில் களமிறங்காமல் இருந்த இலங்கை பந்துவீச்சாளர் மலிங்க முமபை அணியில் இணைந்துள்ளார்.

இலங்கை அணியின் முன்னணி பந்துவீச்சாளரான மலிங்க காலில் ஏற்பட்டுள்ள காயத்தால் அவதிப்பட்டு வருகிறார்.


இதனால் இருபது-20 உலகக் கிண்ண தொடரில் இலங்கை அணியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்த அவர், தொடரில் இருந்தும் விலகினார்.



இந்நிலையில் ஐபிஎல் தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வந்த மலிங்க, காயத்தால் கடந்த 2 போட்டிகளில் பங்கேற்கவில்லை. இந்நிலையில் நேற்று அவர் மும்பை அணியுடன் இணைந்துள்ளார்.

அணிக்கு திரும்பினாலும் காயம் இனனும் முழுவதும் குணமடையாமல் இருப்பதால் அவர் விளையாட வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூடுதலாக 10 ஓட்டங்கள் எடுத்திருந்தால் வெற்றி பெற்று இருப்போம் - ரோகித்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மும்பையில் நேற்று முன்தினம் நடந்த 9 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குஜராத் லயன்ஸ் அணிகள் மோதின. முதலில் விளையாடிய மும்பை அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது.

இலக்கை நோக்கி விளையாடிய குஜராத் அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட் விழுந்தது. ஆனாலும் தொடக்க வீரர் ஆரோன் பிஞ்ச் நிலைத்து நின்று விளையாடினார். கடைசி ஓவரில் குஜராத் அணி வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 3 விக்கெட் கைவசம் இருந்தது.

பும்ரா வீசிய அந்த ஓவரில் முதல் 5 பந்தில் 10 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. 3 ஆவது பந்தில் குல்கர்னி பவுண் டரி அடித்தார். கடைசி பந்தில் பிஞ்ச் பவுண்டரி அடித்து வெற்றி பெற வைத்தார். வெற்றி குறித்து குஜராத் தலைவர் ரெய்னா கூறியதாவது,

வான்கடே மைதானத்தில் மும்பை அணியை வீழ்த்துவது கடினமானது. அவர்கள் 140 ஓட்டங்கள் எடுத்தவுடன் இப்போட்டி பரபரப்பாக இருக்கும் என நினைத்தேன். ஆரோன் பிஞ்சுடன் யாராவது நிலைத்து நிற்க வேண்டியது இருந்தது. அது நடக்கவில்லை. ஆனால ஆரோன் பிஞ்ச் அபாரமாக விளையாடினர். குல்கர்னி பந்து வீச்சு, துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டார் என்றார்.

மும்பை தலைவர் ரோகித் சர்மா கூறுகையில், துடுப்பாட்டத்தில் ஜொலிக்க தவறிவிட்டோம். சீக்கிரமாகவே விக்கெட்டுகளை இழந்ததால் கடினமாகிவிட்டது. எங்களது பந்துவீச்சாளர் பணி சிறப்பாக இருந்தது என்றே நினைக்கிறேன். மெக்லன் விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டத்தை எங்கள் பக்கம் கொண்டு வந்தார். 150-160 ஓட்டங்கள் எடுத்து இருந்தால் வெற்றி பெற்று இருப்போம் என்றார்.

குஜராத் அணிக்கு இது ஹட்ரிக் வெற்றியாகும். பஞ்சாப், புனே ஆகிய அணிகளை வீழ்த்தி இருந்தது. மும்பை அணிக்கு இது 2 ஆவது தோல்வியாகும். புனே அணியிடம் தோற்று இருந்தது. கொல்கத்தாவை வீழ்த்தியது. மும்பை 20 ஆம் திகதி பெங்களூருடனும், குஜராத் 21 ஆம் திகதி ஐதராபாத்துடனும் மோதுகின்றன.

## பதவியை ராஜினாமா செய்த டோனி



அம்ராபாலி கட்டுமான நிறுவனத்தின் விளம்பர தூதுவர் பதவியை திடீரென டோனி ராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளாக பிரபல கட்டுமான நிறுவனமான அம்ராபாலியின் விளம்பர தூதுவராக டோனி இருந்து வருகிறார்.

இந்நிலையில், நிறுவனத்தின் சார்பில் டில்லி அருகே உள்ள நொய்டாவில் கட்டிப்கொடுக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் திருப்தியில்லை என்று அதை வாங்கியவர்கள் புகார் கூறியுள்ளனர்.

அதுமட்டுமின்றி, டோனி, அம்ராபால நிறுவனத்துடனான உறவை துண்டிக்க வேண்டும், அல்லது அளித்த வாக்குறுதிப்படி நிலுவையில் உள்ள பணிகளை முடித்துக் கொடுக்கும்படி அந்த நிறுவனத்தை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று வீடுகளை வாங்கியவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நேற்று விளம்பரதூதுவர் பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார்.

# தமிழகத்தில் மர்மப்படகு; கைதானவர் மீது நடவடிக்கை

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு மர்மப் படகில் வந்த இலங்கையைச் சேர்ந்தவர் மீது கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தமிழக ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

தனுஷ்கோடி அருகே அரிச்சல்முனை கடல் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த மர்மப் படகை சுங்கத்துறையினர் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றினர். படகில் வந்த நபரைத் தேடிவந்த நிலையில் தங்கச்சிமடம் கடலோரப் பகுதியில் தனிப்பிரிவு பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர்.

பொலிஸார் விசாரணை நடத்தியதில், அவர் இலங்கை, தலைமன்னார் பகுதியை சேர்ந்த லியாஸ் அல்போன்ஸ் மகன் எட்வர்ட் பிரின்ஸி அல்போன்ஸ் (வயது 40) எனத் தெரியவந்தது.

இலங்கைக் கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது கடல் அலையில் சிக்கி தனுஷ்கோடி, அரிச்சல்முனை பகுதியில் மணல் திட்டிப் பகுதிக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து அவரிடம் மேலும் விசாரணை நடத்தப்பட்டது. இந்தநிலையில் இராமநாதபுரம் தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் ரமேஷ் அளித்த புகாரின் பேரில் தங்கச்சிமடம் பொலிஸார் அவர் மீது கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தினர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் அவரை சென்னை புழல் சிறைக்கு கொண்டு சென்றனர் என, தமிழக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (செ-12)

# தாஜுடீன் கொலையுடன் தொடர்புடைய வாகனத்தை பொறுப்பேற்கும் எஸ்.எல்.ஆர்.சீ

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுடீனின் கொலையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் டிபெண்டர் ரக வாகனத்தை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றுக் கொள்ள உள்ளது.

இந்த வாகனத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ள நீதிமன்றில் ஆஜராகுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிப்பாளருக்கு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

இந்த டிபெண்டர் ரக வாகனத்தை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பெற்றுக்கொண்டு, அந்த வாகனத்தை சிரிலியே சவிய அமைப்பிற்கு வழங்கியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

சிரிலியே சவிய அமைப்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷவின் தலைமையிலான ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.

மகிந்தவின் புதல்வர் ஒருவரின் உத்தரவிற்கு அமைய இந்த டிபெண்டர் ரக வாகனம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அனுமதியின்றி, நிறம் பூசப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்த வாகனம் பாதுகாப்பு பணிகளுக்காகவும் பின்னர் கார்ல்டன் விளையாட்டு அலைவரிசையின் பணிப்பாளரது போக்குவரத்து தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

தாஜுடீன் கொலை தொடர்பில் இந்த வாகனம் இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இதனடிப்படையில் விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் வாகனத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்க முடியும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வாகனம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி இந்த வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. (செ-12)

# ஈக்குவடோரில் நில நடுக்கம்

## 240 பேர் பலி; அவசர நிலை பிரகடனம்







ஈக்குவடோரில் நேற்று ஏற்பட்ட மிகக்கடுமையான நிலநடுக்கத்தில் இதுவரை குறைந்தது 240 பேர் உயிரிழந்துள்ளனர் என அந் நாட்டின் அதிபர் அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் நெருக்கடி நிலையையும் அதிபர் பிரகடனப்படுத்தியுள்ளார். மிகவும் நெருக்கடியான சூழலில் அனைவரும் அமைதியுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

நிலநடுக்கம் ஏற்பட்ட நாட்டின் வடமேற்கு கரையோரப் பிரதேசங்களில் இருந்து கூடுதல் தகவல்கள் வரும்போது, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளது என அதிகாரிக்ள் அஞ்சுகின்றனர்.

மேலும் இடிபாடுகளில் சிக்கி 2 ஆயிரத்துக்கு அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதுடன் பலரைக் காணாத நிலையும் அங்கு காணப்படுகிறது.

கடந்த நூறாண்டுகளில் 7.0 அளவுகொண்ட பல நிலநடுக்கங்களை ஈக்குவடோர் எதிர்கொண்டது என்றாலும், 7.8 அளவுக்கு கடுமையான பாதிப்புகளை இப்போதுதான் நாடு எதிர்கொண்டது என அங்கிருந்த கிடைத்த தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை முன்னர் ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நில நடுக்கத்தில் 42 பேர் பலியாகியுள்ளதாகவும், 1500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானின் தென் பகுதியில் கடந்த வியாழனன்று திடீர் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவாகியிருந்த இந்த நிலநடுக்கம் காரணமாக ஏராளமான வீடுகள் சேதமடைந்துடன் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-12)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

# கஞ்சாவுடன் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பொலிஸ பிரிவில் 200 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, நேற்று பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின்போது குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதோடு, கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் மீராகேணி கிராமத்தைச் சேர்ந்த 25 வயதானவர் என தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபரிடம் விசார ணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், இன்றைய தினம் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர். (செ-12)

# சர்வதேச நீதவான் ஒருவர் இலங்கைக்கு விரைவில் விஜயம்

(கொழும்பு)

சர்வதேச நீதிமன்ற பிரதான நீதவான் ஒருவர் வெகு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜெனிவா சென்றிருந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்குள்ள சர்வதேச நீதி மன்றத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தனர்.

அதிக உறுப்பினர்களை கொண்டுள்ள தமது தரப்பினரை பிரதான எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கவில்லை எனவும் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்கு நேரம் ஒதுக்கப்படுவதில் பாரபட்சம் காண்பிக்கப்படுவதாகவும், தமது தரப்பினர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து விசாரணை மேற்கொள்ளப்படுவது உள்ளிட்ட அத்துமீறல்களை இலங்கை அரசு மேற்கொள்கிறது என குற்றம் சுமத்தப்பட்டு முறைப்பாடு ஒன்றை ஒன்றிணைந்த பொது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதிவு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் நேரடி விஜயத்தின் ஊடான விசாரணைகளை மேற்கொள்ளவே சர்வதேச நீதிமன்ற பிரதான நீதவான் ஒருவர் வெகு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-12)

# மன்னாரில்...

யில் குறித்த வீட்டில் சட்டவிரோதமான முறையில் மதுபானப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் குறித்த வீட்டில் 44 வயதுடைய தாய் ஒருவர் மதிய உணவை உட்கொண்டுக்கொண்டிருந்த நிலையில் வங்காலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் சிவில் உடையில் மது போதையில் குறித்த வீட்டினுள் நுழைந்து குறித்த தாயை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

இதன்போது தாயை சிவில் உடையில் மது போதையில் வந்த பொலிஸார் கண் மூடித தனமாக தாக்குவதை கண்ட 16 வயதுடைய மகள் ஏன் எனது அம்மாவை அடிக்கின்றீர்கள் என கேட்டுள்ளார்.

இதன்போது பொலிஸார் இருவரும் அம் மகளை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். பின் உறவினர்களின் உதவியுடன் தாயும் மகளும், வங்காலை பொலிஸ் நிலையத்திற்கு முறையிடுவதற்காக சென்றுள்ளனர்.

இதன்போது சிவில் உடையில் மது போதையில் தாக்குதல்களை மேற்கொண்ட இரு பொலிஸாரும் வங்காலை பொலிஸ் நிலையத்திற்கு உள்ளே சென்று பொலிஸ் நிலையத்தில் வைத்து குறித்த தாயை மீண்டும் தாக்கியுள்ளனர்.

இதேவேளை காயங்களுக்குள்ளான மகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லக்கூட பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

எனினும் உறவினர்கள் பொலிஸாரிடம் மன்றாடிய நிலையில் பொலிஸார் குறித்த பெண்பிளையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் வங்காலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அம் மாணவி மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை மாணவியின் தாயாரை பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது தாயை பார்க்கச் சென்ற 18 வயதுடைய மகனையும் பொலிஸார் கைது செய்து கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதனால் குறித்த இளைஞன் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் அவ்வீட்டில் எவ்வித சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம் பெற்றிருந்தாலும் சிவில் உடையில் மது போதையுடன் பொலிஸார் வீட்டினுள் அத்து மீறி நுழைந்து பெண்கள் மீது கண்மூடித்தனமாக தாககுதல்களை மேற்கொண்டமை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும் எனவும்,

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொலிஸாருக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-1)

# சிறையில்...

அம்பாந்தோட்டை மயூரபுர பிரதேசத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாமல் ராஜபக்ஷ இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

10 வருடங்களுக்கு எம்மை சிறையில் அடைத்தாலும் நாம் நாட்டு மக்களுடன் இணைந்து இந்த அரசாங்கத்தை கவிழ்ப்போம்.

தம்மை நல்லாட்சி என கூறும் இவர்கள் அரசியல் பழிவாங்கல்களையே முன்னெடுத்து வருகின்றனர். நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு இவர்களிடம் முறையான திட்டங்கள் இல்லை. ஆட்சியில் உள்ளவர்கள் நினைக்கின்றனர். சிறையை காட்டினால், அரசாங்கத்தை கவிழ்க்கும் நடவடிக்கையை நாங்கள் பயந்து கைவிடுவோம் என்று. ஆனால் அது நடக்கப் போவதில்லை.

மக்களின் நலனுக்கு விரோதமாக செயற்பட்டு வருகின்ற இந்த அரசாங்கத்தை கவிழ்த்து விட்டே மறுவேலை பார்ப்போம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படலாம் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. பணச்சலவை குற்றச்சாட்டு சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக விசாரணைகளை நடத்தி வருவதுடன் பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கைது செய்ய பரிந்துரைக்கும் அளவிற்கு ஏதுவான காரணங்கள் இருப்பதாக பொலிஸ் உயர் மட்ட தரப்பு தகவல்கள் கூறுகின்றன. பணச்சலவை தொடர்பில் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழலுக்கு எதிரான முன்னணி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸிடம் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பொருத்து வீடு...

க்கும் திட்டம் எமது மக்களுக்கு பொருத்தமானதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மீள் குடியேற்ற அமைச்சினால் வடகிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 65 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கும் திட்டம் தொடர்பாக அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு மக்களுக்கு பொருத்து வீடுகள் பொருத்தமானதில்லை. எமது மக்கள் பரம்பரையாக கல், மணலால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். அது அவர்களுடைய கலாசாரத்துடன் சேர்ந்த ஒரு விடயம் ஆகும்.

இவ்விதமான பொருத்து வீடுகள் எமது நாட்டில் எந்தவொரு இடத்திலும் இதுவரை கட்டப்படவில்லை. எமது நாட்டில் பல்வேறு பகுதிகளில் பலவிதமான வீட்டுத்திட்டங்கள் கட்டப்பட்டன. அங்கும் பொருத்து வீடுகள் கட்டப்படவில்லை. இந்த நிலையில் ஏன் இதை வடக்கு - கிழக்கில் கட்ட வேண்டும்.

அத்துடன் இந்த வீடு சாதாரண வீடு. எனினும் இதைக் கட்டுவதற்காக 2 மடங்கு பணத்தினை செலவு செய்கிறார்கள். எனவே எந்த வகையிலும் இந்த வீட்டுத்திட்டம் எமது மக்களுக்கு பொருத்தமானது அல்ல. எனவே இவ் விடயம் தொடர்பாக எமது கருத்துக்களை முன்வைத்து நடவடிக்கைகளை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஜப்பானில் மைத்தி...

கனடா, இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ள நிலையிலேயே, இச்சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை, இந்த மாநாட்டில் பங்கேற்கச் செல்லும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகி அழிந்த ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்களுக்கும் செல்லவுள்ளார்.

71 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவங்களின் போது இரண்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதலுக்காக அமெரிக்கா இதுவரை மன்னிப்பும் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(செ-12)


**வேலையாட்கள் தேவை**

பாண் விற்பனை வாகனம் செலுத்துவதற்கு நன்கு அனுபவமுள்ள சாரதிகளும் பாண் விற்பனை செய்வதற்கும் ஆட்கள் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம்**

கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.


## அமெ.வில் கோத்தா...

லாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இந்நிலையிலேயே, பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தனது பயணம் தொடர்பில் அறிவிக்காமல் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கா சென்றுள்ளார்.

இதனால் அவர் தொடர்பான தமது விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இது தொடர்பில் குறிப்பிட்டுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு, இது தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

அதேவேளை, அமெரிக்கா சென்றுள்ள கோத்தபாய ராஜபக்ஷ அடுத்த மாத முதல் வாரத்திலேயே கொழும்பு திரும்புவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## தமிழ் அரசியல்...

யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியென்ற ரீதியில் நாம் எதிர்பார்ப்பது தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் உட்பட, அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் சமஷ்டி என்பதை தேசிய ஒற்றுமைக்கான தீர்வாக நாம் ஒரு போதும் எண்ணவில்லை.

சமஷ்டி மக்களை தூரப்படுத்துமே தவிர இனங்களை அண்மைப்படுத்தாது. தமிழ், முஸ்லிம், மலையகம் உட்பட அனைத்து சமூகங்களுடைய பிரச்சினைக்கு தீர்வென்பது பிரிந்து செல்வதால் ஏற்படப்போவதில்லை.

தேசிய ஒற்றுமையைக் கொண்டுவருவதன் மூலமே அதை அடையமுடியும். தேசிய ஒற்றுமையை அடைய வேண்டுமானால் சம உரிமைகள் அனைத்து சமூகத்துக்கும் வழங்கப்பட வேண்டும். இதற்காக அரசியல் சாசனத்தின் வழி சம உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களாயினும் சரி சிங்கள மக்களாயினும் சரி அல்லது வடக்கு, தெற்கு மக்களாயினும் சரி ஒன்றிணைந்து பொதுப் பிரச்சினைகளுக்காக போராடத் தயாராகவுள்ளனர்.

மேலும் தமிழக மீனவர்கள் வடக்கு கடல பரப்பில் உள்ள மீன் வளங்களை கொள்ளையடித்துச் செல்வதாகவும் இது ஒருபாரிய பிரச்சினை எனத் தெரிவித்த அவர் இது குறித்து அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. த.தே.கூ. எவ்வித குரலும் எழுப்புவதாகவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

எல்லாப் பிரச்சினைகளையும் போராடியே வெல்ல முடியும் என்று கூறிய அவர் முதலாளித்துவ அரசியல்வாதிகளை மகிழ்ச்சிப் படுத்தும் ஏகாதிபத்தியத்தை மகிழ்ச்சிப்படுத்தும் பிரிவினைவாத சமஷ்டி முறை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சாதகமானவொன்றாக தாம் கருதவில்லை என்றும் மேலும் தெரிவித்தார். (செ-12)

## சுதந்திரக் கட்சி...

எண்ணெய் தேய்க்கும் வைபவத்தில் கலந்து கொண்ட போது தெரிவித்தார்.

நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி, அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடத்தின் பீடாதிபதிகளை சந்தித்ததோடு, புத்தாண்டு எண்ணெய் தேய்க்கும் வைபவத்திலும் கலந்துகொண்டார். பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ராமஞ்ஞ பீடத்தின் மஹா நாயக்க நாப்பான பிரேமசிரி தேரரையும் முன்னாள் ஜனாதிபதி மெளனிக்கின்னையில் வைத்து சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இம்முறை இடம் பெற உள்ள மே தினம் பற்றி அவரிடம் வினவிய போது ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகளின் மே தினக் கூட்டத்திற்கு தான் சமுகமளிக்கப் போவதாக உறுதி அளித்துள்ளேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரின 99 சத வீதமானோர் இன்னும் என்னுடனே இருக்கின்றனர். ஆகவே ஐக்கிய தேசிய கட்சியை எதிர்க்கும் சக்தி பெற்ற கட்சியும் சரியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுமாக என்னுடன் இருக்கும் ஒருங்கிணைந்த எதிரணியின் மே தின கூட்டத்திற்கு சகலரையும சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவர் இங்கு தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த எதிரணியினர் எனக்கு அழைப்பு விடுத்துள்ள போதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இது வரைக்கும் எவ்வித அழைப்பும் கிடைக்க வில்லை என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (செ-12)

## மாலைதீவில் தடு...

யுத்த சூழ்நிலையால் பொலிஸாரிடமோ அல்லது மனித உரிமை அமைப்புக்களிடமோ இதுகுறித்து முறையிடமுடியவில்லை என்றும உறவினர்கள் கவலை வெளியிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த மூவருற்கும் ஆதரவாக அந்த நாட்டில் இருந்து சட்டத்தரணிகள் எவரும் முன்னிலையாகாத காரணத்தினாலும், சரியான மொழிபெயர்ப்பு இல்லாத காரணத்தி னாலும், இவர்களுக்கு 15 ஆண்டுகால சிறைத்த ண்டனை விதித்து மாலைதீவு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதேவேளை இந்த மூன்றுபேரும் மாலைதீவு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக காணாமல்போவர்களை கண்டறியும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் இவர்கள் மூவரும் ஒன்பது வருடங்களின் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து காணாமல்போன பலர் வெளிநாடுகளில் வாழ்வதாக பரணகம ஆணைக்குழு கூறியிருந்த நிலையில், மேற்படி மூன்று பேரும் அரசாங்கத்தால் மாலைதீவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளனர். (செ-12)

## வெள்ளை வானி...

கொலை அங்கியுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபருடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு 4 ஆம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை கொழும்பிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவிடம் இன்று திங்கட்கிழமை முறைப்பாடு செய்யவுள்ளதாக, இருவரையும் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு உறவினர்கள் தெரிவித்தனர்.

எனினும் தற்கொலை அங்கியுடன் தொடர்புடையவர் என கருத்தப்படும் நபருடன் தொடர்புபட்டிருந்த குற்றச்சாட்டில் இதுவரை வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உள்ளிட்ட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் தற்கொலை அங்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த 10-ம் திகதி வெள்ளை வானில் வந்தோரால் அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் போராளியான ராசதுரை ஜெயந்தனின் பாதுகாப்பு தொடர்பில் அவரது தாயாரினால் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## தீக்காயமடை...

யாழ் சோனகத் தெருவில் வசிக்கும் 2 பிள்ளைகளின் தாயான முகமட் சப்ரா பஷிலா (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 13 ஆம் திகதி அதிகாலை 12.30 மணியளவில் பிள்ளைக்கு பால் வைத்துக் கொடுப்பதற்காக அடுப்பில் பாலை வைத்துள்ளார். பின்னர் கொதித்த பாலை அடுப்பில் இருந்து இறக்குவதற்காக அவர் அணிந்திருந்த தாவணியால் பிடித்த வேளை போது நெருப்பு தாவணியில் பட்டு உடல் முழுவதும் பற்றிக் கொண்டது.

ஓடிச்சென்று அருகில் இருந்த தண்ணீர் தொட்டிக்குள் வீழ்ந்த அவரை மீட்ட கணவர் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்

எனினும் 4 நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (செ-9-30)


**முள்ளியவளை நகரில் கடை விற்பனைக்கு**

மு/வித்தியானந்தா தேசிய பாடசாலைக்கு மிக அருகாமையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 30 அடி நீளமும் 16 அடி அகலமும் உடைய கடை உடனடியாக விற்பனைக்கு உண்டு.

(C-4371) **தொடர்பு : 077308 3121**

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு**
021 221 7603
021 567 1532

**சிந்துஜா வெளிநாட்டு விரைவு பொதிகள் சேவை**
A9 வீதி, கொமெஷல் வங்கி முன்பாக கரடிப்போக்கு - கிளிநொச்சி

3 முதல் 7 வேலை நாட்களில் உலகில் எந்த நாட்டில் இருந்தாலும் உங்கள் உறவுகளின் கரங்களில் உங்கள் பொதிகள் தாமதமின்றி ஒப்படைக்கப்படும். கருவாடு, மருந்து, தூள் போன்ற எவ்வகையான பொருட்களும் எல்லா நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். இலங்கை முழுவதுக்குமான விரைவு பொதிகள் சேவை அனைத்து நாடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்கள், இந்தியா, மலேசியா விசாக்கள் போன்ற சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 0769810718** (C-4368)

**விற்பனைக்கு**

யாழ்.நகரின் மையப் பகுதியில் பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் இரு மாடிக் கடையும், யாழ்.பஸ் தரிப்பிடத்துக்கு பின் பக்கம் மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு அருகாமையில் 10 அடி அகலமும் 100 அடி நீளம் கொண்ட கடையும், யாழ். ஸ்ரான்லி வீதியில் இரண்டு கடையும், யாழ். கே.கே.எஸ் வீதி, மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 5 பரப்பு காணித் துண்டும், யாழ். பிறவுண் வீதி, நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடும் உடன் விற்பனைக்குண்டு.

(C-4370) **தொடர்பு : 077 475 2535**

**அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

**திறப்பு விழா அழைப்பு**

நிகழும் துர்முகி வருட ஆரம்பத்தில் இன்று (18.04.2016) திங்கட்கிழமை காலை 9.05 மணிக்கும் 10.35 மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற "சண்ஜெயா" உணவகத்தின் முதற்கிளையை கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் "AKR" கட்டடத்தில் ஆரம்பித்துவைக்க உள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

"Sunjeya Food Land"
"AKR" Building
Karadippokku Junction,
Kilinochchi.
T.P : 021 3900110, 0777474111

முக்கிய குறிப்பு : இவ் அழைப்பை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(சி-4369)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.